நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

සරිනිහර්

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 205 ஒக்.15-21, 2000 விலை ரூபா 12.00

நந்தவனத்து ஆண்டிகள் !

நந்தவனத் தாண்டிக்கோர் தோண்டியென்றால், நம்முடைய
செந்தமிழர் தலைவர்க்கோ திருமலையில் - நொந்துநிதம்
ஆட்டமின்றிக் காத்துவந்த அந்தவோர் உரிமைதான்
போட்டுடைக்க வாய்ச்சதுவம் போ!

ஈழமோகம்

# மோசடிக்கு வெற்றி

# பொ.ஐ.மு. மீண்டும் ஆட்சியில்!



## சிறிமா மறைவு!

## அஷ்ரஃப் வளர்த்த தீவிரவாதமும் வந்த தடுமாற்றமும்

## தொலைந்தது தமிழர் தலைநகரம்





## தகழியின் நாவல் தோட்டியின் மகன்



## ஆழியாள் கவிதைகள்

நன்றி - நூலகத்திட்டம்



மட்டு: தேர்தல் களத்திலிருந்து ஒரு கடிதம்!

# தலை தெரியப் புதைத்த கதை!



திங்கள் இரவு மணி 10.20. நான் சாப்பிட்டுவிட்டு வீட்டாருடன் கதைத்துக் கொண்டிருந்தேன். நல்ல நிலவு. வேலியோரத்தில் நிலவில் ஆள்நடமாட்டம் தெரிந்தது. மெல்ல எழும்பிச் சென்று வெளியில் எட்டிப் பார்த்தேன். ஒவ்வொருவரின் கைகளிலும் பாடப்போத்தல் சாராயம்

இவர்கள் எனக்கு நன்றாகப் பரிச்சயப்பட்ட முகங்கள் தான், கூட்டணியின் வாலைப் பிடித்துக் கொண்டு நின்றவர்கள் இப்போ தேசிய ஐக்கிய முன்னணிக்காக வாக்கு வேட்டையில் இறங்கியிருப்பவர்கள். பாவம் என்ன- செய்வது இவர்களுக்குத் தான் ரோச நரம்பே இல்லையே!

மெல்லத் தெருவில் இறங்கி கொஞ்ச துாரம் நடந்து பிரதான வீதிக்கு வந்த போது தான் தெரிந்தது கிராமமாக இருந்தாலும் தேர்தலில் ஒவ்வொருவரும் காட்டும் ஆர்வம். அந்த நேரத்திலும் மோட்டார் சைக்கிளிலும், சைக்கிளிலும் ஒரே ஓட்டமாகத் தான் இருந்தது. அந்த நேரத்தில் என்ன நடக்கிறது என்றே அறிய முடியவில்லை. இத்தனைக்கும் அன்று பின்னேரமே ஊருக்கு விசேட அதிரடிப்படையினர் வந்து இறங்கி ஒவ்வொரு வாக்கு சாவடிகளிலும் காவலில் ஈடுபட்டிருந்தனர். தேர்தல் காய்ச்சல் யாரைத் தான் விட்டு வைத்திருக்கிறது,விடிந்தால் திருவிழா தான்.

ஒக்டோபர் 10ம் திகதி காலை 7.15 மணிக்கெல்லாம் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்து புறப்பட்டு களுவாஞ்சிகுடிக்கு சென்றேன். வீதிகள் வெறிச்சோடி வாக்குச் சாவடியும் வெறிச்சோடியே காணப்பட்டது. மக்கள் பெரிதும் தேர்தல் பற்றி ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு சாவடிக்கு முன்னும் பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் கணேசமூர்த்தியின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. தெருவில் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. அங்கிருந்து புறப்பட்டு வந்து கோட்டைக் கல்லாறு தெற்கு வாக்குச் சாவடிக்குச் சென்றேன். அங்கு விசேட அதிரடிப் படையினர் வாக்குப் போடச் செல்பவர்களை சோதனையிட்டே சாவடிக்குள் அனுப்பிக் கொண்டிருந்தனர். நானும் அந்த இடத்துக்குச் சென்ற வேளை எனக்கு முன்னால் 26 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணியும் நின்று கொண்டிருந்தார்.

அங்கு சோதனையில் ஈடுபட்டிருந்த அதிரடிப் படையினர் மதுபோதையிலேயே நின்று கொண்டிருந்தார். அவரின் வாயில் இருந்து வார்த்தைகள் தடுமாறிக் கொண்டிருக்க, எச்சில் வடிந்து கொண்டிருந்தது. ஆண் பெண் வித்தியாசம் தெரியாமல் (அல்லது தெரிந்து கொண்டோ) அந்தப் பெண்ணை சோதனையிடுவதற்காக தடவப் போக அந்தப் பெண் விலகிப் போகவும் அவர் என்னைப் பார்த்து ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்து விட்டு என்னை தடவிப் பார்த்து அனுப்பினார். இத்தனையும் பொ.ஐ.மு வேட்பாளர் கணேசமூர்த்தியின் அமைப்பாளர் ஒருவரின் வீட்டின் முன்னே நடைபெற்றது. இந்த அமைப்பாளர் தானாம் அதிரடிப்படையினருக்கும் சாராயம் வேண்டிக் கொடுத்ததாக அக்கம் பக்கத்தார் பேசிக் கொண்டதையும் கேட்கக் கூடியதாக இருந்தது. அங்கிருந்து புறப்பட்டு பெரியகல்லாற்றுக்குச் சென்றேன். அங்கு விசேட அதிரடிப்படையினர் மோட்டார் சைக்கிளில் பவனி வந்து கொண்டிருந்தனர். ஆள்மாறாட்டங்கள் செய்து கள்ளவாக்குகள் தாராளமாகப் போடப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது. தனியே குறித்து ஒரு கட்சியை மட்டும் சொல்ல முடியாது. பெரியகல்லாற்றில் இருந்து கோட்டைக்கல்லாற்றுக்கு வந்து கள்ள வாக்குப் போட்டும் சென்றுள்ளனர். அந்தளவு ஜனநாயகத் தேர்தல் மட்டக்களப்பில் நடந்துள்ளது. இதே போன்று காத்தான்குடி மில்லத் மகளிர் வித்தியாலய வாக்குச் சாவடியில் தேச்சிய ஐக்கிய முன்ணணி வேட்பாளரும் முஸ்லீம் போராளிகள் இயக்கத்தின் ஸ்தாபகருமாகிய ஒருவர், வாக்குச் சாவடிக்கு அருகில் வாக்குப் போட்டுவிட்டு புதினம் பார்த்துக் கொண்டிருந்த ஆண்களையும் பெண்களையும் வாக்குச் சாவடிக்குள் கூட்டிக் கொண்டு போய், பலாத்காரமாய் வாக்குச் சீட்டுக்களை கிழித்து சீலடித்து மரத்துக்கு புள்ளடி போடுங்கள் எனக் கொடுத்துள்ளாராம்.

புதிய காத்தான்குடி பதுறியா வித்தியாலய வாக்குச் சாவடியில் வாக்கெடுப்பு முகவராக இருந்த பொ.ஐ.மு. ஆதரவாளர் எம்.சீ ஜலால்டீன் தேசிய ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களால் தாக்கப்பட்டுள்ளார். இவர் ஆரம்ப காலகட்ட முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவாளராக இருந்து மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மாநகரசபை உறுப்பினராக இருந்தவர். கட்சிக்கும் இவருக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே அண்மைக் காலமாகவே பொ.ஐ.முன்னணியில் சேர்ந்துள்ளார்.

ஜலால்டீன் தே.ஐ.முன்னணி ஆதரவாளர்களை கள்ளவாக்குப் போட அனுமதிக்காததாலே இவர் தாக்கப்பட்டார். தலையில் ஏற்பட்ட பலத்த அடியால் காத்தான்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தலையில் ஏற்பட்ட காயத்துக்கு 16 தையல்கள் போடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இவ்வாறான இன்னுமொரு சம்பவம் இது. காத்தான்குடி-6, டீன் வீதியிலுள்ள அல்கசனார் வித்தியாலய வாக்குச் சாவடியில் வாக்கெடுப்பு முகவராக இருந்த ஐ.தே.கட்சி ஆதரவாளர் எம்.ஐ பாயீஸ் தேசிய ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களால் தாக்கப்பட்டு, கடற்கரைக்கு கொண்டு சென்று தலை மட்டும் தெரியத்தக்கவாறு புதைத்து வைத்து விட்டு வந்ததாகவும் தெரியவருகிறது.

காங்கேயனோடை வாக்கெடுப்பு நிலையத்தில் வைத்து தே.ஐ.முன்னணி ஆதரவாளர்களால் தாக்கப்பட்ட மூன்று பேரில் ஒருவருக்கு கால் நடக்க முடியாத நிலையுள்ளதாகவும் அறிய முடிகின்றது. இவ்வாறாக காத்தன்குடியில் முஸ்லீம் போராளிகளாலும் ஹிஸ்புல்லாவாலும் வரலாற்றில் அழிக்க முடியாத ஜனநாயகத் தேர்தல் ஒன்று நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. ஒக்.11 அன்று தேர்தல் முடிவுகளைக் கேட்டுக் கொண்டிருந்த வேளையில் காத்தான்குடி பிரதான வீதியில் நவாஸ் ரேடர்சுக்கு முன்பாக பொ.ஐ.முன்னணி ஆதரவாளர்களுக்கும் தே.ஐ.முன்னணி ஆதரவாளர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தின் போது பொலிசாரினாலும் இராணுவத்தினராலும் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் தே.ஐ.முன்னணி ஆதரவாளர்களான அன்சார்,நியாஸ் சூட்டுக்கு இலக்காகி மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஹனிபா, பைசர் ஆகிய இருவரும் இராணுவத்தால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களும் தே.ஐ.முன்னணி ஆதரவாளர்களாவர். ஏறாவூரில் பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வாக்களிக்கச் சென்ற இஸ்மாயில் அலியார் காயமடைந்துள்ளார். இவ்வாறான ஜனநாயகத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு படையினரதும் பூரண ஒத்துழைப்பும் ஒத்தாசைகளும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. வந்தாறுமூலை, கல்லாறு பிரதேசங்களிலும் தேசிய் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் கோஸ்டி மோதலில் ஈடுபட்டிருப்பதுவும் குறிப்பிடத்தக்கது.

90களில் கல்லாற்றிலும் வந்தாறுமூலையிலும் நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களின் தலைகள் கொய்யப்பட்டதற்கு யார் யார் காரணமாக இருந்தார்களோ, இன்றைக்கு அவர்களின் வாலைப்பிடித்துக் கொண்டு இவர்கள் தொங்குவதன் நியாயம் தான் என்னவென்று இன்னமும் புரியாத புதிராக உள்ளது.

1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தனித் தமிழீழத்துக்கான ஆணை தமிழ் மக்களால் வழங்கப்பட்டது. ஆனால் இம்முறை தேர்தலில் எங்களை நடுரோட்டில் போட்டு சுடுவதற்கும் சூறையாடுவதற்குமான ஆணையை தமிழ்மக்கள் கொடுத்துள்ளனர் என்றால் அது தவறாகுமா?

## விதியே.. விதியே.. தமிழச்சாதியை....!

கொஞ்ச நாட்களுக்கு முன்பு, தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியல்களை கட்சிகள் சமர்ப்பிப்பதற்காக முண்டியடித்துக் கொண்டிருந்த போது ஒரு நண்பரைச் சந்தித்தேன். இவர் ஒரு இடதுசாரிக் கட்சியின் சார்பில் போட்டியிடத் தயாராகிக் கொண்டிருந்தார். வடக்கு, கிழக்கில் தேர்தலில் நிற்பது சம்பந்தமாக எனக்குள்ள கேள்விகளை அவரிடம் தெரிவித்தேன்.

ஏற்கனவே மாகாணசபை தேர்தல் நடத்தப்பட முடியாது என்று கூறிக் கொண்டு, அதைப் பத்து வருடங்களுக்கு மேலாக நடாத்தாமல் இருந்து வருகிறது இந்த அரசு. தேர்தலை நடத்தும் சூழ்நிலை இல்லையென்று தங்களுக்குச் சம்பந்தமில்லாத தேர்தல்களில் எல்லாம் ஒப்புக் கொள்ளும் இந்த அரசு, தனது தேவைக்கு அவசியமான தேர்தல்களை நடத்தும் போது மட்டும், அங்கு சூழ்நிலை சரியாகவே இருக்கிறது என்று கூறுகிறது. அது நடத்தப் போகும் மூன்றாவது தேர்தல் இது. 'இதை நீங்கள் எப்படி ஏற்றுக் கொள்கிறீர்கள்?' என்று கேட்டேன் அவரிடம்.

"உதெல்லாம் சரிதான். ஆனால் எங்களைப் போல ஆக்கள் உப்பிடிச் சொல்லிக் கொண்டு பேசாமல் இருக்கிறதைப் பாவிச்சுத்தான் கண்டவங்கள் எல்லாம் எம்பியாகிவிட்டாங்கள்"

அவர் சொன்ன 'கண்டவங்கள்' வேறு யாருமல்ல. ஆயுதம் ஏந்திய இயக்கங்களைத் தான் அவர் சொன்னார் என்பது எனக்குப் புரிந்தது.

அதுசரி, உங்களைப் போல ஆக்கள் வந்து என்ன செய்ய முடியும்? ஏற்கனவே இருந்த 'உங்களைப் போலை ஆக்கள் எதையும் செய்யேல்லையே'. அவர் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தார். பிறகு சொன்னார்:

'அப்பிடி ஒரு பதவி இருந்தால் தான் ஏதாவது சொன்னாலும் ஆராவது காது குடுத்துக் கேட்கிறார்கள்.

"ஆராவது எண்டால்"

"எல்லோரும்தான். பத்திரிகைகள், அரசாங்கங்கள், வெளிநாடு"

"அதுசரி மக்கள் காது கொடுக்கிறார்களா?"

அவர் இதற்குப் பதில் சொல்லவில்லை. நானும் பிறகு அது பற்றிப் பேசவில்லை. அவர் நான் இதை எழுதும் இந்த நேரம், தேர்தல் வாக்குகளை எண்ணும் சாவடியில் தன் தோல்வியை நிச்சயப்படுத்த உட்கார்ந்து கொண்டிருக்கக் கூடும்.

2

பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்புகள் படு தீவிரமாக நடந்து கொண்டிருந்தன. பொலிஸார் தீவிரமாக முகத்தை வைத்தபடி நின்று கொண்டிருந்தார்கள். நீண்ட கியூக்களில் மக்கள். என்னுடைய பகுதியிலுள்ள வாக்குச் சாவடிகளை சுற்றி ஒரு "றவுண்ட்" அடிக்கலாமென்று சுற்றி வந்து கொண்டிருந்த போது கண்ட காட்சி இது.

வாக்குச் சாவடிகட்கு வெளியே கட்சிகளின் 'தொண்டர்கள்' தமது வாகனங்கள் சகிதம் 'பொதுமக்கள் சேவைக்காக' காத்து நின்றனர். ஒரு சிலர் முச்சக்கர வண்டிகளில் "வாக்காளப் பெரு மக்களை" ஏற்றி இறக்கிக் கொண்டிருந்தனர். அலுவலகம் வந்த போது எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் ஏற்கனவே வந்து காத்துக் கொண்டிருந்தார். அந்தப் பகுதியால் போய்க் கொண்டிருந்தவருக்கு என்னைப் பார்த்து ஒரு சில நிமிடங்கள் பேசி விட்டுப் போகலாம் என்று தோன்றியிருக்கிறது.

'எப்படி எலக்சன் எல்லாம்? வோட் போட்டுவிட்டீர்களா?' என்றேன்.

"நீங்கள்" என்றார் அவர்.

"நீங்கள் போனமுறை பேப்பர் பார்க்கவில்லையா? நாங்கள் வோட் போடுவது தவறு என்று எழுதியிருந்தோமே" என்றேன்.

"அப்ப நீங்கள் போடேல்லையா?" ஆச்சரியத்துடன் விரிந்தன அவர் விழிகள்.

"இல்லை.."

"ஐயையோ போய் வெட்டி நிராகரிச்சுப் போட்டெண்டாலும் வந்திருக்கலாமே.."

"செய்திருக்கலாம்...ஆனால் அதாலை என்ன பிரயோசனம்"

" வேறை யாரும் கள்ள வோட்டுக்கு பாவிக்காமல் தடுக்கலாமில்லையா?"

"தடுத்தால்.."

"தடுத்தால்.." இதற்குப் பிறகு அவருக்குப் பேச முடியவில்லை.

"இலங்கை ஜனநாயகத்தில் 10% மக்கள் வாக்களித்தால் கூட தேர்தல் செல்லுபடியாகும் என்று இருக்கேக்கை இப்பிடி தடுத்து என்ன பிரயோசனம்..." அவர் பேசவில்லை.

"சரி விடுங்கோ அப்ப நீங்கள் ஆருக்கு வோட் போட்டனீங்கள் தமிழ் கொங்கிரஸுக்குத்தானே"

"இல்லை.." இழுத்தார் அவர்.

"அப்ப..?"

"யூ.என்.பிக்கு..." எனக்குத் துாக்கிவாரிப் போட்டது.

"ஏன்" என்று கேட்டேன் நான்.

"கொங்கிரஸுக்குப் போட்டு வெல்லவா போகுது எண்டிட்டு இவங்களுக்குப் போட்டன்.."

"அப்ப ஏன் வேறையாருக்கும் போடேல்லை"

"வேறை யாருக்கு அரசாங்கத்தை மாத்த முடியும்?"

இதற்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

ரீ குடிப்பமா? என்று கேட்டேன். அவர் சிரித்தார். ஏன் யூ.என்.பிக்கு வோட் போட்டது பிடிக்கேல்லையோ?

"இல்லை. ரீ குடிக்க வேணும் போலை இருக்கு" என்றேன் நான். மனதுக்குள் பாரதியாரின் வரிகள் ஞாபகத்துக்கு வந்தன.

"விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செயக் கருதி இருக்கின்றாயடா?"

சரிநிகர் இதழ் - 205, ஒக்.15 - 21, 2000



# அடுத்து வரும் சில வருடங்களில் ஈழப்போர் எவ்வாறு அமையும்?

டி.சிவராம்

என் மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேண்டும் என்ற வகையில் சிங்கள் மக்கள் பெரும்பாலானவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்துள்ளார்கள். தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்திலிருந்து பெருகி வரும்' பொருளாதாரச் சுமைகளைத் தான் எப்படித் தீர்க்கப் போகிறேன் என்றோ, இனப்பிரச்சினைக்கு எவ்வாறு ஒரு சரியான தீர்வை நடைமுறைப்படுத்தப் போகிறேன் என்றோ, பொது ஜன ஐக்கிய முன்னணி சிங்கள மக்களிடம் கூறி வாக்குக் கேட்கவில்லை.

புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தொடர்பு என்றார்கள். புலிகளைப் போரில் முறியடிப்பதுதான் இனப்பிரச்சினைக்கு உள்ள ஒரே தீர்வு. நோர்வேயின் உதவி தேவையில்லை என முழங்கினார் பச்சை இனவாதியான சிறிலங்காப் பிரதமர். வாக்களிப்பிற்கு முதல் நாள் இரவுவரை கூட இப்படியான போர் முழக்கப் பிரச்சாரங்களையே சந்திரிகா அரசு செய்து கொண்டிருந்தது. இதைத் தவிர சிங்கள மக்களிடம் சொல்வதற்கு அதற்கு வேறொன்றுமே இருக்கவில்லை.

பெரும்பாலான சிங்கள மக்கள் மனதில் என்ன நினைத்தார்களோ நாமறியோம். பொது ஜன ஐக்கிய முன்னணிக்கே வாக்களித்துள்ளனர்.

எது எப்படி எனினும் இத்தேர்தலில் தனக்குக் கிடைத்துள்ள வாக்குகள், போரை இன்னும் கடுமையாக முன்னெடுப்பதற்குத் தனக்குக் கிடைத்த மக்களாணையாகவே சந்திரிக்கா அரசு கொள்ளப் போகிறது என்பதில் இரண்டாம் பேச்சிற்கு இடமில்லை. அத்துடன் மட்டக்களப்பில் வாழும் ஒரு தொகுதித் தமிழரும் தன்னுடைய போர் பிரகடனங்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர் என அது உலகிற்கு எடுத்தியம்பப் போகிறது என்பதிலும் ஐயமில்லை. எனவே இனிவரப் போகும் ஆறு வருடங்களுக்கும் போர்க் கெடுபிடிகள் மேலும் அதிகரிக்கும் என்பதில் நமக்கு எவ்விதம் சந்தேகமும் தேவையில்லை.

அங்ஙனமாயின், இனிவரப் போகும் வருடங்களில் ஈழப் போர் மூன்று (83 - 87 ஈழப்போர் I, 90-94 ஈழப்போர் II, 96- ஈழப்போர் III. இது மறைந்த பத்திரிகையாளர் மேவின் டி சில்வா அறிமுகப்படுத்திய சொல்லாட்சி) எவ்வாறு அமையும் என்பதை நாம் இந்த அடிப்படையில் சற்றுச் சுருக்கமாக நோக்குவோம்.

கிழக்கு மாகாணத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதை அடுத்து நான் முன்னர் வேலை பார்த்த பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த சிங்கள நண்பர் ஒருவர் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு தமிழ் அரசியலின் எதிர்காலம் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார். நண்பர் சிங்களப் பத்திரிகையுலகில் நன்கறியப்பட்ட படைத்துறைச் செய்தியாளர். சிறிலங்காப் படைத்துறை தலைமையுடன் நெருக்கமான உறவு பூண்டவர்.

"கிழக்கில், குறிப்பாக உனது ஊர் புலிகளுக்கு தமிழர் வழங்கும் ஆதரவு காரணமாக அங்கு அவர்கள் தொடர்ச்சியாக ஆட்களைத் திரட்டக் கூடியதாக இருந்தது. இதுவே எமது படையினரின் பெரும் தலையிடியாக இருந்து வந்துள்ளது.

வாகரை எமது ஆட்கள் (சிறிலங்காப் படையினர்) கைப்பற்றியதே, மட்டக்களப்பில் திரட்டும் ஆட்களைப் பயிற்றுவித்து கடல் வழியாக வன்னிக்கு அனுப்புவதைத் தடுத்திடத்தான். கிழக்கில் உள்ள தமிழர்களின் மனத்தை மாற்றி, அவர்களைப் புலிகளிடமிருந்து அந்நியப் படுத்துவது ஈழப்போரை வெல்வதற்கு இன்றியமையாததொன்றாகும்.

இதை ஜானக பெரேரா போன்ற அனுபவமுள்ள சில படைத்தளபதிகள் அடிக்கடி வலியுறுத்தி வந்த போதும் யாரும் உருப்படியாக எதையும் செய்திடவில்லை.

ஆனால், இப்போது மட்டக்களப்புத் தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் போது அங்குள்ள தமிழர்களில் பெரும்பாலானவர்கள் புலிகளிடமிருந்து விலகி விட்டனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

பெரிய புலியான ஜோசப்பிற்கு கிடைத்த ஆதரவை விட, பொது ஜன ஐக்கிய முன்னணி ஆளுக்கு அதிகமான வாக்குகள் கிடைத்துள்ளன. ஜோசப்பிற்குக் கிடைத்த அடி சர்வதேச ரீதியாகப் புலிகளின் முகமூடியைக் கிழித்திட உதவும். கிழக்கு மக்களின் இந்த மனமாற்றம் தனக்கு நம்பிக்கை தருவதாக தளபதி கூறினார்." எனத் தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் என்னிடம் கூறிக் கொண்டிருந்தார் நண்பர். வேலை அவசரத்தில் இருந்தமையால் அவரது கருத்துக்களை என்னால் தொடர்ந்து செவிமடுக்க முடியவில்லை. எனினும், சிறிலங்காப் படைத்தளபதிகள் தேர்தல் முடிவுகளைத் தமது கோணத்தில் எவ்வாறு நோக்கியுள்ளனர் என்பதை நண்பரது உரையாடல் கோடிட்டுக் காட்டிற்று.

தமிழ்த் தேசியத்தை நசுக்கி, கேவலப்படுத்தி, அழித்திட வேண்டும் என்பதில் தமிழகப் பிராமணீயம் என்றும் கண்ணும் கருத்துமாக இருந்து வருவதை உங்களிற் சிலர் அறிவீர்கள். திராவிட இயக்கத்தை சின்னாபின்னப்படுத்திவிட்டோம் என்றிருக்கையில் தமிழ் தேசியம் பெரும் படைப்பலத்துடன் இலங்கையில் கிளம்பிவிட்டது. அதை எங்ஙனமாயினும் அழித்திட வேண்டும் எனத் திட சங்கற்பம் பூண்டு செயற்படும் தமிழகக் பிராமணீயத்தின் ஒரு ஆங்கில ஊதுகுழல், "இந்து" நாளேடு. எதிரிக்கு எதிரி நண்பன் என்ற கொள்கைக்கிணங்க சந்திரிக்கா அரசைப் பச்சையாக ஆதரித்து வருவது அது.

"இந்து" ஆங்கில நாளேடு யாழ் தேர்தல் முடிவுகளைப் பற்றி என்ன கூறிற்று தெரியுமா?

" யாழ்ப்பாண மக்கள் இன்னும் மிதவாதிகளைத் தான் ஆதரிக்கிறார்கள்" எனப் பறை சாற்றிற்று அது. ஈழப்போர் அடக்கி ஒடுக்கிடப்பட வேண்டும் என்பதில் குறியாக இருக்கும் அனைவருக்கும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகியவற்றின் தேர்தல் முடிவுகள் தித்திப்பாக இருக்கிறது என்பது வெள்ளிடைமலை.

எனவே, குறுகிய காலத்தில் களமுனையில் சாதிக்க முடியாமற் போனதை வரப்போகும் ஆண்டுகளில் தமிழனின் சுயமரியாதை, தேசிய உணர்வு என்பவற்றை படிப்படியாகப் பறிப்பதன் மூலம் மழுங்கடித்துச் சாதித்து விடலாம் என்ற எண்ணமே, சிறிலங்கா அரசு, சிறிலங்காப் படைத்துறை, தமிழகப் பிராமணீயம், சந்திரிகாவை முழுமையாக ஆதரிக்கும் இந்திய மத்திய அரசு ஆகியோரின் ஈழப்போர் பற்றிய அணுகுமுறையினைத் தீர்மானித்திடப் போகின்றது என்பதில் ஐயமில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் தற்போது ஓய்வு பெற்றுவிட்ட ஒரு சிறிலங்காப் படைத்தளபதி ஒருவரை விருந்தொன்றில் சந்திக்க நேர்ந்த போது ஈழப்போரில் எவ்வாறு நீண்ட காலத்தில் தாம் வெற்றி கொள்ள எண்ணியுள்ளோம் என அவர் கூறியது இங்கு நோக்கற்குரியது.

"புலிகளின் மரபுவழிப்படை வலு எமக்கு ஒரு சவாலாக உள்ளது. மறுப்பதற்கில்லை. ஆனால், இம்மரபு வழிப்படை வலுவானது எதிற் காலூன்றி நின்கின்றது? உங்களுடைய மக்களில் (தமிழர்) ஒரு எதிரி எவ்வளவு பலம் கொண்டவனாக இருப்பினும் அவன் காலூன்றி நிற்கும் தரையை அவனறியாமல் அரித்து அரித்துச் செல்வோமாயின், அவன் ஒருநாள் வீழ்வது தவிர்க்க முடியாது. இதைச் சாதிப்பதற்கு அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பும் எமக்குக் கட்டாயம் தேவை" என்றார் அப்படைத்தளபதி.

வரப்போகும் ஆறு வருடங்களில் தமிழ் மக்களை ஈழப்போருக்கு படிப்படியாகவோ முடிந்தால் துரிதமாகவோ அந்நியப்படுத்தும் வேலையே சிறிலங்கா அரசிற்கும், அதன் படைத்தலைமைக்கும் முக்கியமாக இருக்கப் போகிறது. இதைக் கடந்த காலங்களை விட இலகுவாகச் சாதித்திடக் கூடியவகையிலேயே வடகிழக்குத் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன.

"சிறிலங்கா அரசைச் சார்ந்து, வேலை பெற்று, சலுகைகள் பெற்று வாழ்ந்திடும் வாழ்வே பெருவாழ்வு" என்ற மனோநிலையை வடகிழக்குத் தமிழர்களிடம் வளர்த்து வேரூன்றிடச் செய்திடும் வேலையில் வல்லுநர்களான இடைத்தரகர்களே சிறிலங்கா நாடாளுமன்றிற்கு இம்முறை கிழக்கிலிருந்தும், வடக்கிலிருந்தும் பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழர் தம்மிடமிருந்து பறிக்கப்பட்ட அடிப்படை அரசியல் உரிமைகள், வாழ்ந்திடும் உரிமையை, தமது தாய் மொழியை, தாம் பிறந்த மண்ணை காத்திடும் உரிமையை எல்லாம் மறந்து, கைவிட்டு விட வேண்டும். அரச வேலை வாய்ப்புகளுக்காகவும் அற்ப சலுகைகளுக்காகவும் பரிதாபமாக அலையும் எருமைமாட்டு மந்தையாக மாறிட வேண்டும் என்ற குறிக்கோளோடு கடந்த காலங்களில் கண்ணுங் கருத்துமாகச் செயற்பட்ட பலரே இன்று தெரிவாகியுள்ளனர்.

வட கிழக்கு மாகாணத்திற்கு ஒரு இடைக்கால நிர்வாக சபையை யாவது பெற்று விட வேண்டும் என ஓடோடித் திரிந்த ஒரு தமிழ் அரசியல்வாதி சொன்னார் - "கிடைப்பதை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று. அவருக்கு அந்த அற்ப விடயம் கூட சிறிலங்கா அரசினால் கொடுக்கப்படவில்லை.

அவர் இன்று யாழ் மக்களுக்கு சில வேலைகளையும், சலுகைகளையும் வழங்கி அவர்களுடைய ஆதரவை பெற்றுள்ளார். இவரைப் போன்றேரே இன்று பெரும்பான்மையாக வட கிழக்கிலிருந்து சிறிலங்கா நாடாளுமன்றிற்கு தெரிவாகியுள்ளனர்.

வரப்போகும் வருடங்களில் ஈழப்போரில் சிறிலங்கா அரசு வெற்றியடைவது அதன் படை பலத்தை விட இவர்களிலேயே தங்கியுள்ளது. (குறிப்பாக, இப்பேர்வழிகளினுடைய நடவடிக்கைகள் தமிழரிடம் எடுபடும் வகையில் கிழக்கில் புலிகளின் சில அணுகுமுறைகளும் அமைந்துள்ளன என்பதை நான் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.)

எமது சுயமரியாதையை, தன்மான உணர்வை, குழிதோண்டிப் புதைத்திட எம்மிடையிற் கிளம்பியுள்ள தரகர்களை முறியடித்து எமது உரிமைப் போராட்டத்தை நாம் முன்னெடுக்கப் போகிறோமா இல்லையா என்பதே மண்டையில் சற்றேனும் சரக்கிருக்கக் கூடிய தமிழர் முன் இன்றுள்ள கேள்வி.

**இத்தேர்தலில் தனக்குக் கிடைத்துள்ள வாக்குகள், போரை இன்னும் கடுமையாக முன்னெடுப்பதற்குத் தனக்குக் கிடைத்த மக்களாணையாகவே சந்திரிக்கா அரசு கொள்ளப் போகிறது என்பதில் இரண்டாம் பேச்சிற்கு இடமில்லை. அத்துடன் மட்டக்களப்பில் வாழும் ஒரு தொகுதித் தமிழரும் தன்னுடைய போர் பிரகடனங்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர் என அது உலகிற்கு எடுத்தியம்பப் போகிறது என்பதிலும் ஐயமில்லை.**

## வவுனியா: மாணவன் மகாதேவனின்.........

இறந்தவரின் செருப்புக்கள் இரண்டும் யாரோ கொண்டு சென்று வைத்திருந்தது போன்று இருந்ததாகவும், அந்த செருப்புக்கள் இருந்த நிலை தமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்ட பொலிசாரின் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவுக்கும் மேலாக இறந்தவருடைய தேசிய அடையாள அட்டையும், இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ள வதிவிட அனுமதி அட்டையும் வீட்டில் மேசைமீது இருந்தன. வவுனியாவைப் பொருத்த மட்டில் எவரும் வீட்டைவிட்டு வெளியில் செல்லும் போது, அடையாள அட்டை இல்லாமல், குறிப்பாக தங்களிடமுள்ள இராணுவ வதிவிட அனுமதிஅட்டை அல்லது பொலிஸ் விதிவிட அனுமதிப் பத்திரம் இல்லாமல் செல்ல முடியாத நிலைமையே உள்ளது. அவர் தானாக தற்கொலை செய்துகொள்வதற்கு ஒன்றரை கிலோ மீற்றர் துரம் செல்வதானால், இந்த அடையாள அட்டைகளை ஏன் வைத்து விட்டு அந்த அகால நேரத்தில் சென்றார் என்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரேத பரிசோதனை செய்த வைத்தியருடைய அறிக்கையின்படி, இறந்தவர் பிட்டு சாப்பிட்டதற்கு அடையாளமான உணவே வயிற்றில் இருந்ததாகத் தெரிவித்துள்ளார். ஆனால் வீட்டாருடைய சாட்சியத்தின்படி, இறந்தவர் உட்பட, அன்றிரவு வீட்டார் அனைவரும் இரவு சாப்பாடாக பாண் சாப்பிட்டுள்ளார்கள்.

இதற்கு மேலாக இறந்தவர் தற்கொலை செய்வதற்கு எதவித காரணமும் இல்லை என இறந்தவருடைய நண்பர்களும் குடும்ப உறவினர்களும் சாட்சியத்தில் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்கள். இதனடிப்படையிலும் இறந்தவர் தற்கொலை செய்துகொண்டிருப்பார் என்பது நிராகரிக்க வேண்டிய ஒன்று.

பிரேத பரிசோதனை செய்த வைத்தியரின் வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததன்படி, இறந்தவர் துாக்கில் துாங்கிச் செத்தார் என்பதைக் கவனத்தில் எடுத்து, சாட்சியங்களின் அடிப்படையில் குறித்த மரணம் ஒரு தற்கொலை என்பதற்கு எதுவித சாட்சியும் இல்லை என்பதுடன் மாறாக சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சிகளின் அடிப்படையில் இந்த மரணம், குற்ற நடவடி முறைக்கோவை 370(3) இன்கீழ் ஒரு குற்றம் நடைபெற்றது என்பதற்குரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. பீனல்கோட் 293 இன்படி, கொலை அல்லது பீனல்கோட் 294இன்படி திட்டமிட்ட ஒருகொலைக் குற்றம் ஏற்பட்டதற்கு நியாயமான சந்தேகம் நீதிமன்றுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தமது தீர்ப்பில் தெரிவித்துள்ள நீதிவான், இந்த வழக்கு தொடர்பாக மேல் விசாரணைகளை நடத்தி, குற்றவாளிகளைக் கைது செய்து மன்றில் ஆஜர் செய்யுமாறு வவுனியா பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் விசாரணைக் குழுவை ஏற்படுத்தி புலன் விசாரணைகளை நடத்த வேண்டும் அல்லது கொழும்பு சி.ஐ.டி பொலிசாருக்கு இந்த விசாணைகளின் பொறுப்பை ஒப்படைக்குமாறும் வன்னிப் பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# சிஹல உருமய:
# தமிழ் மக்களுக்காக பேசும் சிங்கள இனவாதம்!

இலங்கை வரலாற்றில் எந்தவொரு கால கட்டத்திலும் உருவாகாத மிக மோசமான தேசிய அழிவு நிலைக்கு சிங்கள இனம் முகம் கொடுத்துக் கொண்டிருப்பதனால், குறிப்பாக சிங்கள மக்கள் தமது அடையாளம் குறித்து பயங்கரமான அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதனால் சிங்கள மக்களின் அரசியல் மீட்பராக சிஹல உறுமய கட்சி இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடுவதாக அக்கட்சி தனது கொள்கை விளக்கவுரையில் குறிப்பிட்டுள்ளது.

சிஹல உறுமய கட்சி, பலதரப்பட்ட அரசியல் குழுக்களை பிரதிநிதித்துவம் செய்யும் நபர்களைக் கொண்டதொரு கட்சி. அத்துடன் 1994 தேர்தலில் இக்கட்சி வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் பொ.ஐ.முவை வெற்றி பெறச் செய்யும் கைங்கரியத்தை மேற்கொண்டமையை மறக்க இயலாது. அவ்வாறு அதிகாரத்தைப் பெற்ற சந்திரிகா, ஜனாதிபதியாக பதவி ஏற்றுக் கொண்ட பின் ஆற்றிய உரையில் இந்நாடு சிங்கள- பௌத்த நாடு எனத் தெரிவித்திருந்தார். இனவாதிகளின் தாக்குதல்களில் இருந்து தப்பிக்க அவர் அரசியல் ஆயுதமாக இந்தக் கோட்பாட்டையே கைக் கொண்டார்.

2000.08.11 அன்று தேசிய தொலைக்காட்சி வழங்கிய பேட்டியின் போது, ஐ.தே.க. அரசாங்கம் யுத்தத்திற்கு செலவு செய்ததை விட 40 சதவீதத்திற்கு அதிகமான தொகையை யுத்தத்திற்காக பொ.ஐ.மு. செலவளித்துள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். போரில் வெற்றி பெற வேண்டுமாயின் 20,000 இராணுவத்தினர்கள் தேவையெனவும், இவர்களை சிங்கள இனவாதத் தலைவர்களும், பிக்குகளும் திரட்டித் தரவேண்டும் எனவும் கோரியிருந்தார்.

இந்த அரசியற் பின்னணியிலேயே சிஹல உறுமய போன்ற அடிப்படைவாத கட்சிகள் தோற்றம் பெறுகின்றன எனலாம்.

சிஹல உறுமய கட்சியின்




கூற்றின்படி இன்று சிங்களவர்களுக்காக பாராளுமன்றத்தில் குரலெழுப்ப அரசியல் பிரதிநிதிகள் எவருமே இல்லை. இதனால் சிங்கள மக்களுக்குரித்தான பாரம்பரிய உரிமைகள் குறித்து சரியான தீர்வை பெற்றுக் கொடுத்து அவர்களை

இயல்பான நிலைமைக்குக் கொண்டு வருவதுடன், இந்நாட்டை தாய் நாடாகக் கருதும் பிற இனங்களின் சட்ட உரிமைகளைப் பாதுகாத்தல் இந்தக் கட்சியின் நோக்கமென தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வரையறையின் மூலம் இலங்கையின் அனைத்து உரிமைகளையும் இழந்து, சலுகைகளை இழந்து வாழும் மக்களாக சிங்களவர்கள் உள்ளனர் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதேபோல், "சிங்களவர்கள் இழந்துள்ள பாரம்பரிய உரிமைகள், வளங்கள்" என்பதன் கருத்து இலங்கைபூமியும் பௌதீக வளங்களும் சிங்கள மக்களின் பாரம்பரிய உரிமைகள் என்பதாகும். இந்த பூமி குறித்த உரிமைகளை சிங்களவர்கள் இழந்துள்ளதாக நிரூபிக்க அவர்கள் பல உதாரணங்களை காட்டுகின்றனர். காணிப் பற்றாக்குறை, (தோட்டப் பகுதிகளில் வாழும் சிங்கள மக்கள் காணிப் பிரச்சினையை எவ்விதம் அனுபவிக்கிறார்கள் என அவர்கள் உதாரணம் காட்டுவதாயின், புதைகுழியொன்றை தோண்டக் கூட அவர்கள் நிலமின்றி தவிக்கின்றனர் என்பர்.) வேலைவாய்ப்பின்மை, வறுமை போன்றவற்றினால் அதிகம் சிங்களவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர்கள் கூறுகின்றனர்.

காணியின்மை குறித்து சிஹல உறுமய கட்சி முன்வைக்கும் விடயங்களில் எந்தத் தர்க்கத்தையும் காணமுடியாது.

தோட்டப்புறம் சார்ந்த பிரதேசங்களில் மட்டுமன்றி பொலனறுவை, அனுராதபுரம் போன்ற பிரதேசங்களில், மேல் மாகாணம் மற்றும் இலங்கையின் பிற பிரதேசங்களைச் சேர்ந்த அனைத்து இனங்களையும் சேர்ந்த மக்கள் காணியின்மையினால் பாதிக்கப்படுகின்றனர் /பாதிக்கப்பட்டள்ளனர் என்பது உண்மையாகும். சனத்தொகை விகிதாசாரத்தின்படி சிங்கள மக்கள் அதிக விகிதாசாரத்தை



பெறுவதினால் அவர்களது காணியின்மை சிக்கல் பெரிதுபடுத்தப்படும் காரணியாக விளங்குகின்றது.

எனினும் தோட்டத்துறையை சார்ந்து வாழும் தமிழ் மக்கள் சிறந்த வீடமைப்பு வசதிகளையும், காணி வசதிகளையும் கொண்டிருப்பதாக சிஹல உறுமயவினால் நிரூபிக்க முடியுமா?

இந்த இந்திய வம்சாவளித் தமிழர்களின் எண்ணிக்கை 1932ல் 651,000 காணப்பட்டது, 1995ல் அவர்களின் முழு சனத்தொகை 862,191, ஆகும்.

இம்மலையகத் தமிழர்கள் மிகவும் குறைந்த வாழ்க்கை வசதிகளைக் கொண்டிருப்பதுடன், 80 சதவிதமான இருப்பிடங்கள் மனிதர் வாழ்வதற்கு எவ்வகையிலும் பொருத்தமற்றதாகவே உள்ளது. மலையகத்திற்கு வெளியே வேலைவாய்ப்பொன்றை பெற்றுக் கொள்ளவும் அம் மக்கள் பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

சிஹல உறுமய தற்போது இலங்கையின் நிலவும் பொருளாதாரச் சிக்கல்களுக்கு முன் வைக்கும் தீர்வு யோசனைகளும் மிகவும் கற்பிதமானவை எனலாம். ஆற்று நீரைப் பயன்படுத்திய விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறை குறித்தான யோசனைகளை அவர்கள் முன்வைக்கிறார்கள். இதற்கென பொ.ஐ.முவினால் நடைமுறைப்படுத்தப்படாது விடப்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளை மீண்டும் நடைமுறைப்படுத்த மக்களுக்குத் தேவையான கடன் வசதிகளை பெற்றுக்கொடுப்பதாக சிஹல உறுமய கட்சியினர் வற்புறுத்துகின்றனர்.

இலங்கையில் விவசாயம் செய்யும் மக்கள் 80களில் இறுதியில் அரச வங்கிகளில் மற்றும் கிராமிய வங்கிகளில் பெற்றுக் கொண்ட கடனை மீள செலுத்த முடியாது தற்கொலை செய்ய ஆரம்பித்தனர். 1994ல் ஹிங்குரக்கொட மற்றும் மெதிரிகிரிய ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிகளிடம் மாத்திரம் கடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பான 1500க்கு கிட்டிய எண்ணிக்கையிலான பிரச்சினைகள் குறித்தான தகவல்கள் பொலனறுவை மாவட்ட விவசாயிகள் சங்கத்திற்கு கிடைத்துள்ளது. பன்சல்கொடல்ல மற்றும் கவுருல்ல கிராமிய வங்கிகளில் 400 பேரின் கடன் பிரச்சினைகள் இந்த விவசாயிகள் சங்கத்திற்கு கிடைத்துள்ளது. ஆனால் தற்போதைய நிலைமை மிகவும் மோசமானது. இதனால் மீண்டும் கடன் உதவி அடிப்படையில் இந்நாட்டு விவசாயத்துறையை பழைய அரச கால வழிமுறையில் அபிவிருத்தி செய்ய அரசியல் மேடைகளில் சிஹல உறுமய கனவு காண்பது நகைப்புக்குரிய விடயமாகும்.

மதம் கலாசாரம் மற்றும் உரிமைகள் பிரிவில், "இந்த நாடு சிங்கள பௌத்த நாடென" குறிப்பிடப்படுகின்றது. "எமது கலாசாரம்,

> **இந்நாட்டைச் சேர்ந்த புத்திஜீவிகள் பலர் இணைந்து சிஹல உறுமய கட்சியை கட்டியெழுப்பியுள்ளதாக அவர்கள் கூறினாலும், மிகவும் கீழ்த்தரமான அடிப்படைவாத, இனவாத கோணத்தை தவிர புத்திஜீவித்துவ அரசியல் நோக்கை அவர்கள் கொண்டிருக்கவில்லை- யென்பது அவர்களது யோசனைகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது எனலாம்.**
>
> **பொ.ஐ.மு. போன்று சிஹல உறுமயவும் தமிழ் மொழியில் தேசிய கீதத்தை பாடுவதற்கான வாய்ப்பை அளிப்பது தமிழ் மக்களுக்கு கிடைக்கும் மிகப் பெரிய சலுகையெனக் கருதுகிறது.**

ஒழுக்கம், சாகித்தியம், வரலாறு மற்றும் வாழ்க்கை முறை பௌத்த மதத்துடன் மிகத் தெளிவாகப் பின்னிப் பிணைந்துள்ளது. இந்த பிணைப்பினால், வரலாறு முழுவதும் பிற மதங்களுக்கோ, இனங்களுக்கோ எந்தவித வேறுபாடுகளும் பாதிப்புகளும் ஏற்படவில்லை.

எதிர்வரும் காலங்களிலும் அவ்வாறே நடைபெறும் என்பது உறுதிப்படுத்தப்படும்". இவ்வாறு கூறும் சிஹல உறுமய பௌத்த மதம் அரச மதம் என அரசியமைப்பில் ஏற்றுக் கொள்வதுடன், அனைத்து அரசு வைபவங்களில் இம்மதத்திற்கு முக்கியத்துவத்தை வழங்குவதுடன் மற்றும் பிற மதங்களுக்கு உரிய இடம் வழங்கப்படவேண்டும் என்றும் குறிப்பிடுகின்றது.

இந்த அறிக்கையின் மூலம் சிங்கள் பௌத்த கலாசாரத்தில் பிற மதங்களுக்கு என்றுமே வேறுபாடு காட்டப்பட மாட்டாது என்ற விடயம் முரண்படுகின்றது.

அத்துடன், உறுமயக்காரர்கள் தேசிய கீதத்தை சிங்களத்தில் மட்டும் பாடவேண்டும் எனக் கூறுகின்றனர். அது பொ:ஐ.முவின் உத்தேச அரசியலமைப்பில் தேசிய கீதம் தமிழில் பாடும் யோசனைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட யோசனையாகும். பொ.ஐ.மு. அரசு தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடுவதற்கான யோசனையை கொண்டு வந்ததற்கான காரணம், அது தமிழர்களின் தேவை என்றபடியால் அல்ல. மாறாக தமது அரசு தமிழ் மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தருவதில் பின்னிற்பதில்லை என்பதை இவ்வாறான யோசனைகள் மூலம் முயற்சிக்கின்றது என்பதை வெளிக்காட்டவே ஆகும்.

தமிழர்களின் பிரச்சினைகளை இவ்வாறான சிறு நிபந்தனைகளின் மூலம் தீர்க்க முடியாதென்பதை பொ.ஐ.மு போன்று சிஹல உறுமயவும் விளங்கிக் கொள்ளவில்லையென்பது தெளிவாகின்றது.

இந்நாட்டைச் சேர்ந்த புத்திஜீவிகள் பலர் இணைந்து சிஹல உறுமய கட்சியை கட்டியெழுப்பியுள்ளதாக அவர்கள் கூறினாலும், மிகவும் கீழ்த்தரமான அடிப்படைவாத, இனவாத கோணத்தை தவிர புத்திஜீவித்துவ அரசியல் நோக்கை அவர்கள் கொண்டிருக்கவில்லையென்பது அவர்களது யோசனைகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது எனலாம்.

பொ.ஐ.மு போன்று சிஹல உறுமயவும் தமிழ் மொழியில் தேசிய கீதத்தை பாடுவதற்கான வாய்ப்பை அளிப்பது தமிழ் மக்களுக்கு கிடைக்கும் மிகப் பெரிய சலுகையென கருதுகின்றது.

எனினும், சிங்கள மொழியை பாதுகாக்க இவ்வளவு தூரம் பாடுபடும் அக்கட்சிகளின் உறுப்பினர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் கூட இந்த உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றதா என்பது மிகப் பெரிய வினாவாகும். சிஹல உறுமய கட்சி சார்பாக யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் ஒரு வேட்பாளரின் பிள்ளைகள் இந்நாட்டைச் சேர்ந்த சர்வதேச பாடசாலையொன்றில் ஆங்கில மொழியில் கல்வி கற்பதனை அறியக் கூடியதாக உள்ளது. அதேபோல் சிங்கள உரிமையை பாதுகாக்கும் இவர்கள் வெளிநாட்டு பீற்சா வகையறாக்களை உண்டு களிக்கின்றனர்.

சிறுவர் உரிமைகளை பாதுகாக்க சிறுவர் சாசனத்தையும், பெண்களுக்கு அகௌரவத்தை ஏற்படுத்துபவர்களை தண்டிக்கவும் சட்டதிட்டங்களை அமுல்படுத்துவதாக சிஹல உறுமய கூறுகின்றது. இவ் யோசனை இலங்கை அரசியல் செயற்பாடுகளில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள விடயம் அல்ல.

எனினும், இவை அனைத்தும் எவ்வளவு தூரம் செயற்படுத்தலில் வெற்றி கண்டுள்ளது என்பதே சிக்கலாகும்.

– திலினா வீரசிங்க

## திருமலை

# தமிழர் தலைநகருக்கு என்ன நடந்தது?

தலைநகருக்கு என்ன நடந்தது?

இம்முறை பாராளுமன்றத் தேர்தல்களின் முடிவுகள் அறிவிக்கப் பட்டுக் கொண்டிருக்கிற போது என்னுள் எழுந்த கேள்வி இது.

தமிழீழத்தின் தலைநகரம் என்று ஒருகாலத்தில் த.வி.கூ மேடையெங்கும் முழங்கப்பட்ட அந்தத் தலைநகரில் இன்று இருந்த ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவமும் இல்லாமல் போனது எப்படி?

தமிழ் மக்கள் தமக்கு திருகோணமலை தலைநகரம் தேவையில்லை என்று முடிவுகட்டி விட்டார்களா?

அல்லது தங்களுக்குத் தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் தேவையில்லை என்று முடிவு கட்டிவிட்டார்களா?

1948இல் இலங்கையின் ஆட்சி அதிகாரம் சுதந்திரம் என்ற பேரால் சிங்கள இனவாதிகளது கைக்கு மாறிய காலத்திலிருந்து 1994 இல் நடந்த கடந்த பொதுத்தேர்தல் வரை திருமலையிலிருந்து தமிழ்ப் பிரதிநிதி ஒருவராவது தெரிவு செய்யப்பட்டுக் கொண்டு வந்திருக்கின்றார். முதலில் தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம் இருந்த காலத்தில் திருமலை மாவட்டத்திலிருந்து இரு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளனர். மூதூரிலுள்ள இரட்டை அங்கத்தவர் தொகுதியிலிருந்து ஒருவரும் திருமலையிலிருந்து ஒருவருமாக இரண்டு தமிழ் உறுப்பினர்கள் திருமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி வந்துள்ளனர். பின்னர் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் நடைமுறைக்கு வந்தபின்னும் கூட இந்த நிலைமை தொடர்ந்து இருந்து வந்தது. 1994இல் மூதூர் தொகுதியிலிருந்து தமிழ் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்படுமளவிற்கு வாக்களிப்பில் தமிழர்கள் கலந்து கொள்ளவில்லை. தங்கத்துரை மூதூர் தொகுதிக்குரியவர் என்ற போதும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலுள்ள விருப்ப வாக்குத்தெரிவு காரணமாக அம்முறை அதிக விருப்புவாக்குகளைப் பெற்றவர் எனற முறையில் அவருக்கே அப்பதவி போயிற்று. திருமலை தொகுதிக்குரிய வேட்பாளரான சம்பந்தன் தங்கத்துரையின் கொலையின் பின்னர் அததொகுதியின் பிரதிநிதித்துவத்தை செய்து வந்தார்.

எப்படியோ, திருமலை மாவட்டத்திற்கு இது வரை காலமும் இருந்து வந்த தமிழ்ப்பிரதிநிதித்துவம் இப்போது இல்லையென்றாகி விட்டது.

அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகளின்படி, திருமலை மாவட்டத்திற்கு 3 பொ.ஐ.மு உறுப்பினர்களும் 1 ஐ.தே.க உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.டி.பி, ரெலோ மற்றும் இரு சுயேட்சைக் குழுக்கள் ஆகிய தமிழ்க் கட்சிகளின் வாக்குகள் ஒருமித்து ஒரு தமிழ்க் கட்சிக்கு போடப்பட்டிருக்குமானால் ஒரு தமிழ்ப் பிரதிநிதி வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு இருந்திருக்கிறது என்று அரசியல் விமர்சகர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். 1977இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அந்த ஒற்றுமையான நிலமை இருந்தது தான் த.வி.கூ.வுக்கு எதிர்க்கட்சித் தலைமைக்குப் போகுமளவிற்கு அமோக வெற்றியை ஈட்டக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது என்று அவர்கள் அதற்கு ஆதாரம் காட்டுகின்றார்கள்.

ஆனால் இவர்கள் எல்லோரும் ஒரு முக்கியமான விடயத்தை மறந்து விடுகிறார்கள். அது தான் அன்று நிலவிய அரசியல் சூழ்நிலை. தமிழர் விடுதலைக் கூட்டணி அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டாக இருந்ததும் தமிழீழத்தை வென்றெடுப்பதற்கான ஆணையை அது தமிழ் மக்களிடம் கோரியதும் அதன் அன்றைய மாபெரும் வெற்றிக்குக காரணங்களாகும்.

இன்று அப்படியான ஒரு அரசியல் சூழ்நிலை இல்லை.- அதுமட்டுமல்லாமல் ஒரு குறிப்பிட்ட அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஐக்கியப்படத்தக்க எந்த அரசியல் நோக்கங்களையும் இன்றைய எந்த அரசியற் கட்சியும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

உண்மையைச் சொல்வதானால் இன்று தமிழ் மக்கள் மத்தியில் போய் நின்று வாக்குக் கேட்ட எந்தத் தமிழ்க் கட்சிக்கும் தமிழ் மக்களின் இன்றைய அரசியல் உரிமைப் பிரச்சினை தொடர்பான எந்தவிதமான அக்கறையும் இல்லை என்றே சொல்ல வேண்டும். திருமலையில் நடந்த அண்மைக்கால திட்டமிட்ட குடியேற்றங்கள் முதல் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை உதாசீனம் செய்கின்ற அரசாங்கத்தின போலிச் சமாதான முயற்சி வரை

### தமிழ் தலைமைகள் இழைத்த தலறு தான் என்ன?

எந்த அரசியல் விடயங்களும் இக்கட்சிகளது செயற்பாட்டக்கறைக்குரிய விடயங்களாக இருந்ததில்லை. மாறாக அவர்களது அக்கறைக்குரிய விடயங்களாக இருந்ததெல்லாம் மிகச் சாதாரணமான நிவாரண, அபிவிருத்தி வேலைகள், மற்றும் வேலைவாய்ப்பு விடயங்கள் தான். அல்லது தமது தனிப்பட்ட நலன்களுக்குகந்த விடயங்கள் தான். இன்று நடை பெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம், அதனால் ஏற்படும் அவலங்கள், இராணுவக் கெடுபிடிகள், இவற்றால் மக்கள் படும் அன்றாட வாழ்வுத் துயரங்கள் எல்லாம் தாம் களத்தில் இறங்கித் துடைப்பதற்காகப் போரிட வேண்டிய (ஆயுதம் ஏந்தி அல்ல), அதற்காக மக்களைத் திரட்ட வேண்டிய விடயங்கள், அவற்றைச் செய்வது தமது கடமை என்றெல்லாம் இவர்கள் ஒருபோதும் கருதியதில்லை.

அரசாங்கத்தின் யுத்தக் கொள்கைகட்கேற்ப அது செய்துவரும் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து அவற்றை நிறுத்தவைக்க அரசை நிர்ப்பந்திக்கும் நடவடிக்கைகளில் இறங்குவதற்குப் பதிலாக அவற்றுக்குள் எப்படி வாழலாம் என்று மக்களுக்கு வழிசொல்லுகின்ற தரகர்களாகவே இவர்கள் செயற்பட்டு வந்திருக்கிறார்கள், வருகிறார்கள்.

திருமலையில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் நமது தலைவர்களின் நடவடிக்கை இதுவாகத்தான் இருந்து வந்திருக்கிறது.

தமது தலைவர்கள் வெறும் தரகர்களாக இருப்பதை எத்தனை நாட்களுக்குத்தான் அவர்களால் சகித்துக் கொண்டிருக்க முடியும்?

இந்தப் பாராளுமன்றத் தேர்தல் ஒரு சுத்தமான மோசடி எனறு தெரிந்துகொண்டும், இந்தத் தேர்தலில் நிற்பதனால் தமிழ் மக்களின் அபிலாசைகளில் எதையும் சாதித்து விட முடியாது என்று தெரிந்திருந்தும் அதில் போட்டியிட நினைத்தது அவர்களின் முதலாவது தவறு. அரசாங்கம் இந்தத் தேர்தலை நடாத்துவதன் நோக்கமே தன்னை ஒரு ஜனநாயக அரசாகக் காட்டிக் கொள்ள என்பதையும், தமிழ்க் கட்சிகள் போட்டியிட்ட வடக்குக் கிழக்கில் தேர்தல் நடைபெறக் கூடிய ஜனநாயகச் சூழல் நிலவுவதாகக் காட்டவுமே என்பதையும் நன்றாகவே தெரிந்து கொண்டு அதில் பங்கு பற்றியது இரண்டாவது தவறு.

இவ்வளவு நிலைமைகளின் கீழ் தமிழ் மக்களுக்கு இப்பதவியைக் கொண்டு தம்மால் எதையும் செய்ய முடியாது என்று தெரிந்திருந்தும் அவர்களை தமக்கு வாக்களிக்குமாறு கேட்டது மூன்றாவது தவறு.

இவ்வளவு தவறுகளுக்குப் பிறகும் தாம் தரகர்களாக இருக்கத்தான் போகிறோம் என்று தேர்தலில் நிற்பவர்களுக்கு திருமலை மக்கள் அளித்துள்ள பதில் மிகவும் முக்கியமானது.

கிட்டத்தட்ட 50 சதவீத மக்கள் வாக்களிக்கவில்லை. தமக்கு இந்த மோசடியில் நம்பிக்கையில்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழ்க் கட்சிகட்கு வாக்களித்தவர்கள் போக ஏனையோர் தரகர்கள் வேண்டாம், பூசாரிகளை விட்டுவிட்டு நேரடியாகவே கடவுளுடன் பேசுவோம் என்று யோசித்திருக்கிறார்கள். ஆட்சிக்கு வரக்கூடிய கட்சிகட்கு வாக்களித்திருக்கிறார்கள்.

தமிழ்க் கட்சிகள் இந்தத் தேர்தலைப் பகிஸ்கரித்திருந்தால் தமிழர்கள் இந்தத் தேர்தலில் பங்குபற்றவில்லை என்ற எதிர்ப்பு வெளிப்பட்டிருக்கும். அப்போது பேரினவாதக் கட்சிகளின் உறுப்பினர்கள் பதவிக்கு வந்திருந்தாலும் இந்தப் பாராளுமன்றம் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாத பாராளுமன்றம் என்ற அரசியல் நெருக்கடியை அதற்குக் கொடுத்திருக்கலாம். இப்போது இந்த அரசாங்கம் தமிழ் மக்களை நேரடியாகவே பிரதிநிதித்துவப்படுத்துகின்ற புகழைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை அதற்கு வழங்கியிருக்கின்றன இந்தத் தமிழ்க் கட்சிகள்.

உலகத்தில் வேறெங்கும் காண முடியாத அற்புதமான தரகர்கள் இவர்கள்!

- நாசமறுப்பான்

# சிறிமாவோ மறைந்தார்



இலங்கையின் முன்னாள் பிரதமரும் உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற கௌரவத்திற்குரியவருமாக விளங்கியவருமான சிறிமாவோ பண்டாரநாயக்க காலமானார்.

இலங்கையில் தற்போது நடந்து முடிந்த பதினோராவது பாராளுமன்றத் தேர்தலில் வாக்களித்து விட்டு வீடு திரும்புகையில் காலமாகி விட்டார் என்று அறிவிக்கப்படுகிறது. 84 வயதான சிறிமாவோ பண்டார நாயக்க, இரண்டு மாதங்களுக்கு முன் தனது பதவியை இராஜினாமா செய்து விட்டு அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்தார்.

கணவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் படுகொலையைத் தொடர்ந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக 1960ல் சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவு செய்யப்பட்டார். இலங்கையில் கணவருக்குப் பின் மனைவி அதிகாரத்துக்கு தெரிவு செய்யப்படுகிற ஒரு அரசியல் போக்கின் ஆரம்பம் இவருடனேயே ஆரம்பித்ததெனலாம்.

1964ல் அவர் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவர்களைத் தனது அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டார். இது கட்சிக்குள் பலத்த எதிர்ப்பை எதிர் கொள்ளும் நிலையை அவருக்கு ஏற்படுத்தியது. இந்த எதிர்ப்பின் காரணமாக பாராளுமன்றத்தில் இருந்த அவரது ஸ்ரீ.ல.சு.கட்சி சகாக்கள் பதின்னான்கு பேர் அரசுக்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

1964ல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடந்த போது அவரால் ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை. எதிர்க் கட்சியில் இருந்தபடியே அவர் இடதுசாரிகளையும் இணைத்த ஐக்கிய முன்னணி ஒன்றைக் கட்டியெழுப்பினார். இந்தக் கூட்டணி 1970ல் நடைபெற்ற தேர்தலில் 2/3 அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது.

தனது ஆட்சிக் காலத்தில், புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதற்காகப் பயன்படுத்திய அவர் தனது ஆட்சிக்காலத்தையும் ஏழு ஆண்டுகட்கு நீட்டுவித்தார். இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் தான் அரசியலமைப்பில் சிறுபான்மையினங்களுக்கு காப்பீடாக இருந்த 29வது சரத்து நீக்கப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது. இக்காலகட்டத்தில் நாட்டில் அவர் கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கை, ஜே.வி.பி கிளர்ச்சியை அடக்கிய விதம் என்பவற்றால் அவரது அரசாங்கம் செல்வாக்கிழந்தது. 1975ல் ல.ச.ச.கட்சி இவரது அரசாங்கத்திலிருந்து வெளியேறியது.

1977இல் பதவிக்கு வந்ததும், புதிய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கி அதை நடைமுறைக்குக் கொண்ட வந்த ஐ.தே.க. அரசாங்கம், சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையையும் பறித்தெடுத்தது. அதன் பின்னர் 1989 தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொண்டார். 1994ல் புதிய பொ.ஐ.மு அரசாங்கம் ஆட்சியமைத்த போது அவர் ஒரு கௌரவ அமைச்சராக்கப்பட்டார். பின்னர் சந்திரிகா ஜனாதிபதி ஆன போது அவருக்குப் பிரதமர் பதவி வழங்கப்பட்டது.

தனது நாற்பதாண்டு கால அரசியல் வரலாற்றில் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒரு உறுதிமிக்க, கண்டிப்பும் கராரும் கொண்ட தலைவராக இருந்து வந்துள்ளார். சோசலிசம், ஜனநாயகம் என்பவற்றின் பெயரால் அவர் எடுத்த நடவடிக்கைகளில் பல மக்கள் விரோத தன்மை கொண்டவையாக அமைந்திருக்கின்றன. தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறையை தீவிர மட்டத்துக்கு எடுத்துச் சென்றிருக்கின்ற இனவாதத்தை சிங்கள சமூகத்தின் மத்தியில் ஜனரஞ்சகப்படுத்திய சிறப்பான பெயரும் அவருக்கே சேரும். பல கடுமையான விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டியதாக அரசியல் வரலாறு அமைந்திருந்த போதும், அவருடைய காலத்தில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகள் கவனிப்புக்குரியவை என்று பேசப்படுகின்றது.

சிறிமாவோ பண்டாரநாயக்காவினுடைய அயலுறவுக் கொள்கைகள் உலக நாடுகளை 'அணிசேரா நாடுகளின்'அணிக்குள் கொண்டு வருவதிலும் அவற்றைக் கௌரவித்து நடத்துவதிலும் பெரும் பங்காற்றின எனலாம்.

90களில் சிறிமாவோ பண்டாரநாயக்க, இலங்கையில் நிலவிய பிரேமதாச கால ஜனநாயக விரோதப் போக்குக்கு எதிரான ஜனநாயக எதிர்ப்புக் குரலுக்கு தலைமை தாங்கினார்.

இலங்கையின் மிகவும் உறுதி வாய்ந்த, செயல்வேகமும் பொறுப்புணர்வும் கொண்ட தலைவர்களில் மிகவும் முக்கியமானவர் சிறிமாவோ என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க வாய்ப்பில்லை.

ஆனால், இத்தகைய சக்தி வாய்ந்த தலைவர்கள் அனைவரும் சிங்கள பௌத்த இனவாதத்தின் தலைவர்களுக்காகவும் கூட இருந்தார்கள் என்பது தான் இந்த நாட்டின் மாபெரும் துயரம்!

- கே.வி

நன்றி - நூலகத்திட்டம்



# அஷ்ரஃப் வளர்த்த அரசியல் தீவிரமும் அவர் தடுமாறிய தருணங்களும்

- சிசைரோ

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இதற்கு முன்னால் இருந்த முஸ்லீம் தலைவர்கள் யாவரும் இலங்கை என்ற அடையாளத்துக்குள் முடங்கிக் கிடந்தே தமது தேவைகளைப் பெறவேண்டியவர்களாக இருந்தனர். அத்தேவையினை நிராகரித்து 'நாங்கள் முதலில் முஸ்லீம்கள்- அதன் பின்னரே இலங்கையர்கள்' என்று துணிந்து கூறவைத்த பெருமை அவரையே சாரும். எத்தனையோ முஸ்லீம் முக்கியஸ்தர்கள் இதனைத் துணிந்து கூறுவதற்கு தயங்கோ தயங்கென்று தயங்கிய காலம் ஒன்றுகூட இருந்தது. இந்தளவில் தமிழ்த் தேசியவாதத்தின் அருகாமைக்கு முஸ்லீம்களை அழைத்து வந்தவர் அஷ்ரஃப் தான். இதனைக்கூட சில தேசியத் தலைமைகள் அந்நேரம் பலமாகக் கண்டித்திருந்தன. ஆனால் வெற்றி அஷ்ரஃப்புக்கே கிடைத்தது. அங்கிருந்து அதற்கு அப்பால் நகர்வதில் தான் சிறுபான்மை இனங்கள் இரண்டும் கசப்பான அனுபவங்களை எதிர்கொண்டன.

பொது எதிரியான பேரினவாதத்துக்கு எதிராக அணி திரள்வதற்குப் பதிலாக இரண்டு இனங்களும் தமக்குள் பரஸ்பர சந்தேகக் கோடுகளை வளர்த்துக் கொண்டன. இதன் உச்சக் கட்டத்தில் எதிரியின் ஆயுதமாகப் பாவிக்கப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை கூட முஸ்லீம் சமூகத்தை எதிர்கொண்டது.

### அஷ்ரஃப் வளர்த்த அரசியல் தீவிரம்

தீவிரமான கொள்கைகளையோ கோஷங்களையோ முன்வைத்து அரசியலை ஆரம்பிப்பதும், அதன் மூலம் இளைஞர்களைக் கவர்ந்திழுப்திலும் அரசியல் பிரவேசம் செய்யும் ஒருவருக்கு மிக இலகுவான விடயமாகவே இருக்கும். அதுவும் அஷ்ரஃப் போன்ற தனிநபர் ஆளுமை கொண்ட ஒருவருக்கு இத்தகைய "அலையை" ஏற்படுத்துவது அத்துணை கஷ்டமாக இருக்க மாட்டாது. அமிர்தலிங்கத்தின் ஆளுமையும் அரசியல் பிரவேசமும் அங்கனமாக அமைந்திருந்தே அவரைப் பிரசித்தி பெற்றவராக்கின. அஷ்ரஃப்பும் அதே அடிச்சுவட்டிலே தான் கால் வைத்தார்.

ஆனால், இறுதி இலக்கை நோக்கிய நடப்பு என்பதில் இருவரும் ஒரேவிதமான வீழ்ச்சியையே எதிர் கொண்ருப்பர். ஆயினும், அஷ்ரஃப்பின் விடயத்தில் மரணம் அந்த வீழ்ச்சியை முந்திக் கொண்டது என்று தான் கூற வேண்டும்.

இலங்கை முஸ்லிம்களின் தனித்துவ அடையாளம் என்பது மூன்று அடிப்படை வியடங்களைச் சுற்றியதாக இருக்கிறது.



இஸ்லாம், பிரதேசம், மொழி என்பனவே அந்த மூன்றும். வடக்குக் கிழக்குக்கு வெளியில் வாழும் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் முதலாவது அடையாளம் அசைக்க முடியாததாகும். இரண்டாவது நெகிழக்கூடியதாகவும் மூன்றாவது மாற்றப்படக் கூடியதாகவுமே இருந்தன. ஒருகால கட்டத்தில் - இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி தமிழல்ல என்ற வாதம் முனைப்புற்றுக் காணப்பட்ட போது இந்த அடையாளம் பலமான தாக்குதலுக்கு உள்ளானது. ஆனால், அந்தக் காலகட்டத்தில் தான் அஷ்ரஃப்பின் அரசியல் 'தீவிரமும்' உருவாகியதால் இந்தத் "தாய்மொழி" விவாதம் கைவிடப்பட்டு விட்டது.

மேற்சொன்ன மூன்று அடிப்படை விடயங்களும் அஷ்ரஃப்புக்கு மட்டுமன்றி வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் யாவருக்குமே நன்றாகப் பொருந்தக் கூடியதாக இருந்தன. அஷ்ரஃப் தனது மொழிப்புலமையை அடிக்கடி வெளிப்படுத்தி தமிழ் மீதான தனது 'காதலை' ஊர்ஜிதப்படுத்திக் கொண்டார். அத்துடன் வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களுக்கு நிலையான அடித்தளம் ஒன்றுண்டு என்பதை நிலைநாட்டுவதில் ஓரளவுக்கு இஸ்லாமிய தீவிரவாதத்தை அவர் உதவிக்கழைக்க வேண்டியிருந்தது. ஏனைய வேறுபாடுகள் யாவற்றையும் மேவி அனைத்து முஸ்லிம்களையும் தம் பக்கம் இழுப்பதற்காக பிரதேசத்தையும் மதத்தையும் அவர் கணிசமான அளவு கையாண்டிருந்தார். ஆனால், இது ஆரம்ப அரசியலின் கட்டாயம் என்பதை அவர் உணர்ந்து செயற்பட்டதன் விளைவென்றே கூறவேண்டும்.

காங்கிரஸ் தனது யாப்பில் திருக்குர் ஆனின் ஏற்பாடுகளைச் சேர்த்துக் கொள்வதாகப் பிரகடனப்படுத்திற்று. இது அடிப்படைவாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் போக்கில் அவர் கையாண்ட ஆயுதமாக இருக்கலாம். அதேவேளை கிழக்கில் மட்டுமென்று தனக்குத் தனியான ஒரு தளத்தை உறுதிப்படுத்துவதில் மிகமிகத் தீவிரமாக ஈடுபட்ட அஷ்ஃரப் கட்சியினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற தேசியப் பெயர் கொண்டு அறிமுகப்படுத்தினார். இது வடக்கு கிழக்குக்கு வெளியிலுள்ள முஸ்லிம்களைத் திருப்திப்படுத்த அவர் கையாண்ட ஓர் ஆயுதமாகும்.

அரசியலில் தீவிரவாதத்தை ஆரம்பித்து வைப்பது இலகுவென்றும் அதை அப்படியே அணையவிடாமல் கொண்டு நடப்பது, நடக்கவைப்பது சிரமமென்றும் ஏற்கெனவே குறிப்பிட்டேன். த.வி.கூட்டணியின் 'விதிவச' விளைவுகளை நேரடியாகத் தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றிருந்த அஷ்ரஃப் தனது பாதையின் எதிர்காலம் பற்றியும் கவலை கொள்ளாமல் இருந்திருப்பார் என்றில்லை. வன்முறை என்பது இருபக்கம் கூரியதான ஆயுதம் என்பதால் கிழக்கில் ஏற்பட்ட அனர்த்தங்கள் மேலும் அவரைச் சிந்திக்க வைத்திருக்கலாம். பாராளுமன்ற அரசியல் என்ற வந்து விட்டால் அதற்கேயுரிய சமரசங்களைச் செய்யாவிடில். தலைமைத்துவம் கேள்விக்குட்பட்டதாகி விடும். அத்தகைய சில சோதனைகளும் அஷ்ரஃப்புக்கு ஏற்படவே செய்தன.

வடகிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா, ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து போட்டியிடுவதானால் ஆகக்குறைந்தது 10 ஆசனங்களையாவது தரவேண்டும் என்று பிரேமதாசவுடன் நடாத்திய பேச்சுவார்த்தை, பின்னர் தனியாகப் போட்டியிட்டு பொ.ஐ.முவுடன் இணைந்தமை, அமைச்சர் பதவி பெற்றவை என்பவை எல்லாம் அஷ்ரஃப் என்ற பாராளுமன்ற அரசியல்வாதி செய்து கொண்ட சமரசங்களாகவே பார்க்கப்பட வேண்டியவை. இலங்கை முஸ்லிம்களுக்கு என்று ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சி கடைசியில் - மத்திய அரசில் அமைச்சர் பதவி பெறுவதுடன் தீவிரவாதத்தைக் கைவிடும் என்ற சந்திப்பில் வந்து நின்றது. அதற்கு அப்பால் எத்திசையில் செல்வது என்பதில் அஷ்ரஃப் திக்குமுக்காடினார் என்பதையே கடந்த ஒரு வருட காலத்தையதான அவரது அரசியல் நடவடிக்கைகள் பிரதிபலித்து நின்றன. அரசாங்கக் கட்சிக்குள் அல்லது அமைச்சரவைக்குள் அவருக்கு உரிய கௌரவம் வழங்கப்பாடாமையினால் அவர் விரக்தியுற்றார் என்று அப்போதெல்லாம் சில விமர்சகர்கள் குறிப்பிட்டிருந்தாலும் உண்மை அதுவல்ல என்பதே என் கருத்தாகும். அவர் அடிக்கடி பிணக்குப்பட்டமை - அவர் செய்து கொள்ள வேண்டியிருந்த சமரசங்களுடன் நேரடியாகத் தொடர்புடையனவாகும்.



பின்பு ஒரு கட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு மட்டும் உரிய கட்சியல்ல என்று அவர் விவாதித்ததோடு அசித்த பெரேராவுக்குத் தேசியப்பட்டியல் இடத்தையும் வழங்கிச் சமரசம் காட்டினார். திருக்குர் ஆன் நெறியின்படி நிற்கும் கட்சியில் எப்படி அசித்த பெரேரா உறுப்பினராக முடிந்தது என்பது பூதாகரமான வினாவாகவே தொடர்ந்தது. அது மட்டுமன்றி கட்சிக்குள் முக்கியத்துவம் பெற்றுக்கொண்ட பலர் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம்கள் அல்ல என்பதற்கும் அவர்கள் பெறும் முக்கியத்துவத்துக்குக் காரணம் காங்கிரஸ் யாப்பின்மீது அவர்கள் கொண்டிருந்த விசுவாசமோ அல்லது கொள்கைப் பற்றோ அல்ல என்றும் காங்கிரஸ் ஆதரவாளர்களே முணுமுணுத்துக் கொண்டனர். ஆக, மொத்தத்தில் கட்சியின் ஆரம்பத்தில் உதவிய தீவிரமானது பின்னர் படிப்படியாக அடங்கிப் போகத் தொடங்கிற்று.

### தடுமாறிய தருணங்கள்

விடுதலைப் புலிகள் காரணமாகவே தான் கிழக்கை விட்டுப் புறப்பட்டதாகக் கூறிய அஷ்ரஃப் பின்னாட்களில் விடுதலைப் புலிகளை மட்டுமன்றி ஏனைய எல்லாத் தமிழ் இயக்கங்களையுமே பகைத்துக் கொண்டார். அதாவது அரசியல் ரீதியில் அவரால் எந்தத் தமிழ் இயக்கத்துடனும் ஒத்துப்போக முடியவில்லை. ஏன் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கூட அவரால் சேர்ந்து இயங்க முடியவில்லை. காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஆயுதந் தரித்துத் தான் கிழக்கில் நடமாட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டதன் பின்னர் இத்தகைய ஒத்துழைப்பு என்பது ஒரு போதும் சாத்தியமாகாமற் போய் விட்டது.

இங்கு தான் தலைமைத்துவத்தின் ஆளுமைக்குப் பாரிய சவால்கள் விடப்பட்டன. பொது எதிரியை அடையாளங் காணுதல், சுயநல சக்திகளை அன்னியப்படுத்தல், வேடதாரிகளை இனங்காணல், பேரினவாதத்தின் உண்மையான சொரூபத்தை உணர்ந்து கொண்டு அதற்கேற்ற வகையில் காய்நகர்த்தல் என்பதில் எல்லாம் அஷ்ரஃப் சாமர்த்தியமாகச் செயற்பட்டார் என்று என்னால் கூறமுடியாது. ஆனால், அங்ஙனம் செயற்பட்டிருக்கக் கூடிய ஆளுமையும் திறமையும் அவருக்கிருந்தது என்பதும் அங்ஙனம் அவர் செயற்பட்டிருந்தால் இலங்கை அரசியலின் கறைபடிந்த பக்கங்கள் சில தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்பதுமே வேதனையைத் தரும் விடயமாகும்.

முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் கூர்மையடையும் போது (உ-ம் தீகவாபி பிரச்சினை) பேரினவாத சக்திகள் என்று ஆக்ரோசமாகச் செயற்படும் அஷ்ரஃப், பின்னர் அதே சக்திகளுடன் கைகோர்த்துக் கொண்டு பவனிவருவது ஜீரணிக்கக் கஷ்டமான விடயமாக இருந்தது. பெரிய இரண்டு கட்சிகளுமே பேரினவாதக் கட்சிகள் தான் என்பார். பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவை வானளவாகப் புகழ்வார். படையினர் ஏதும் அத்துமீறலைச் செய்தால் அது முஸ்லிம்களுக்கு எதிராக இருப்பின் - பேரினவாதப் படைகள் என்று சாடும் அதே அஷ்ரஃப் படைகளின் எல்லா வெற்றி விழாக்களிலும் ஆண்டு விழாக்களிலும் முன்னணியில் நின்று கலந்து கொண்டார். அதுமட்டுமன்றி படைகளுக்கு ஆள்சேர்க்கும் வகையில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளில் கூட கலந்து கொண்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் மீதான தனது வெறுப்பினாலோ என்னவோ, படையினரின் அத்துமீறல்கள் தமிழ் மக்களுக்கு எதிரானதாக இருந்தபோதெல்லாம் அஷ்ரஃப் வாய்திறப்பதில்லை. பேரினவாதம் அவர் கண்களுக்குத் தெரிந்ததுமில்லை. அது மட்டுமன்றி கிழக்கிலிருந்து ஏராளமான முஸ்லிம் இளைஞர்கள் ஊர்காவல் படையிலும், பின்னர் முப்படைகளிலும் உள்வாங்கப்பட்டபோது அவர்கள் எந்தப் பேரினவாதப் படைகளுக்கும் சக்திகளுக்கும் முண்டு கொடுக்கப் போகின்றார்கள். யாருக்கு எதிராகப் பயன்படுத்தப் போகின்றார்கள், யாரால் பயன் படுத்தப்படுவர் என்பது பற்றியெல்லாம் அஷ்ரஃப் ஏன் தான் மௌமாக இருந்தாரோ தெரியவில்லை.

ஒரு புறத்தில் படையினரின் சேவையைப் பாராட்டியும், படையில் முஸ்லிம் இளைஞர்கள் சேருவதை ஊக்குவித்துக் கொண்டும் மறுபுறத்தில் பெரும்பான்மை இனத்துக் கட்சிகளை பேரினவாத சக்திகள் என்று விமர்சித்துக் கொண்டிருந்தமை அஷ்ரஃப்பின் நிலைப்பாட்டில் ஒரு "இரண்டுங்கெட்டான் நிலையையே வெளிக்காட்டியது. அதிகாரப் பரவலாக்கல் விடயத்திலும் அவரின் தடுமாற்றம் வெளிப்படையாகவே தெரிந்தது.

"தென்கிழக்கு மாகாண அலகு" கோரிக்கை முஸ்லிம் காங்கிரசினுடையது அல்ல. அது அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் தீர்வு யோசனையின் ஓரம்சம். ஆனால், பெற நாம் முன்னிற்போம்" என்று ஆரம்பக் கூட்டத்தில் கூறிய அஷ்ரஃப் அண்

நன்றி - நூலகத்திட்டம்



மைக்காலமாக - "தென்கிழக்கு மாகாண அலகு இல்லாவிட்டால் பொதியால் பிரயோசனமில்லை" என்று பேசி வரத் தொடங்கினார். இது விடயத்தில் அவர் தனிப்பட்ட முறையில் ஒருவாறாகவும் உத்தியோகபூர்வ முறையில் இன்னொரு விதமாகவுமே பேசிவந்தார். கல்லில் நாருரிப்பது போல இலங்கை அரசாங்கத்திடமிருந்து பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தெடுத்தல் என்பது அத்துணை சிரமமானது என்பது தெரிந்திருந்தும் 'அமைச்சர்' பதவி மூலம் முட்டுக்கொடுப்பதினால் பேரினவாத சக்திகளுக்கு வலுவூட்டும் விதத்தில் அமைச்சர் செயற்பட்டாரா என்ற வினாவினைப் புத்திஜீவிகள் மட்டத்தில் பலரும் கொடுத்தனர்.

ஆகக் குறைந்தது, முஸ்லிம் இளைஞர்களைப் படைகளில் சேராதவாறு அஷ்ரஃப் வெளிப்படையாகவே தடுத்து நிறுத்தியிருப்பாராயின் அவரது ஆளுமையும் தீர்க்க தரிசனமும் இன்னும் கொடி கட்டியிருக்கும். ஆனால், அதைச் செய்யத் தவறிவிட்டு பேரினவாத சக்திகளோடு போராட வேண்டும் என்று அவர் பேசிவந்தமை வெறுமனே வாக்கு வங்கிகளைக் கருத்திற் கொண்டே தான் என்பது நிதர்சனமாகும். பேரினவாத சக்திகளுடனான அவரது போராட்டம் என்பது அரசாங்க உயர் பதவிகள், கோட்டாக்கள், வியாபார அனுமதிகள் என்பவற்றினால் சமரசப்படுத்தப்பட வேண்டியிருந்தன. இங்ஙனம் பல இடங்களிலும் ஏற்பட்ட சமரசங்களையே 'சிஹல உறுமய' போன்ற சக்திகள் அளவுக்கு அதிகமான ஊடுருவல் என்று பட்டியல் போட்டுக் காட்டிக் கொண்டு திரிந்தன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்றளவில் தீர்வுத்திட்டம் என்பது ஒற்றையாட்சிக்குள் அமைந்திருத்தல் அவருக்குப் பிரச்சினையாக இருக்கவில்லை. பன்மைத்துவ அரசியல் பின்னணி கொண்ட ஒரு நாட்டுக்குள் சிறுபான்மை இனம் ஒன்றின் தலைவர் ஒருவரால் அடையக்கூடிய அதிகூடிய விடயம் அமைச்சர் பதவி மட்டுமே என்பதையே அஷ்ரஃப்பும் நிலைநாட்டினார். ஆனால், இதுவே முதற்தடவையுமல்ல. ஏனெனில் சுந்தரலிங்கம், பொன்னம்பலம், நடேசபிள்ளை, திருச்செல்வம் ஆகியோரும் இதையே தான் செய்திருந்தார்கள். இதற்கு அப்பாலான அபிலாஷைகள் என்பனவே உண்மையில் தனித்துவக் கட்சியொன்றிலிருந்து எதிர்பார்க்கப்பட்டன.

மதத்தைப் பாதுகாத்தல், பிரதேசத்தைப் பாதுகாத்தல், கல்வி தொழில் வாய்ப்புக்களில் பாரபட்சத்தைத் தடுத்து இனவிகிதாசாரத்தையாவது பேணுதல் என்ற இலக்குகள் மட்டும் ஒரு தீவிரவாத அரசியல் கட்சியின் இறுதிப்புள்ளியாகிவிடாது. இதை உணர்ந்து கொண்டபின்னரே அஷ்ரஃப் முன்னர் அசித்த பெரேராவுடன் ஆரம்பித்த 'தேசியப் போர்வையை" தேசிய ஐக்கிய முன்னணி என்ற பெயரில் இழுத்துப் போர்த்துக் கொண்டார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பதிலுள்ள தேசியம் போதாதென்று அவர் கருதியிருக்க வேண்டும். எந்தத் தனித்துவத்துக்காக அவர் மதிக்கப்பட்டாரோ அதையே கைவிடும் வகையில் தேசிய ஐக்கிய முன்னணியை உருவாக்கினார். ஒரு வேளை அமைச்சர் பதவிக்கு அப்பாலும் ஏதேனும் சாதிக்கலாம் என்ற எண்ணத்தில் இதனை அவர் அருணாசலம், இராமநாதனுக்குக் கிடைத்த தேசிய முத்திரையா தனக்குக் கிடைக்கப் போகிறது என்பதை அவர் எண்ணிப் பார்த்தாரோ தெரியாது.

மொத்தத்தில் தனது தனித்துவ அரசியலில் அவர் ஒரு விலகுதலை மேற்கொண்டார் என்பதும் அதனால் இரண்டுங்கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பதும் மறுக்க முடியாத உண்மை. அதேவேளை, ஒருபுறத்தில் தமிழ் அரசியல் இயக்கங்கள் / கட்சிகளுடனும் மறுபக்கத்தில் பேரினவாதக் கட்சிகளுடனும் ஒத்துப் போகாத வகையில் கொள்கைகளைக் கொண்டவராக இருந்தார். "அரசாங்கத்தை அமைக்க உதவுதலே" கொள்கை என்றளவுக்கு பிற்கால நிகழ்வுகள் அவரது ஆரம்ப அடையாளத்தை மறைத்து விட்டன. இது கொம்பு வளர்ந்து செவியை மறைத்த கதை தான்.

**என்னாகும் காங்கிரஸ் இவரின்றி?**

அடிப்படைவாதி, மத அரசியல்வாதி என்ற குற்றச்சாட்டுக்களை எல்லாம் தூரத்தள்ளிவிட்டு இந்நாட்டு முஸ்லிம்களுக்கு அரசியல் (அதிகார) முகவரியைத் தேடித்தந்தவர் அஷ்ரஃப் தான் என்பதில் இருகருத்துக்கு இடமில்லை. ஆனால், காங்கிரசின் எதிர்காலம் என்பது வழிநடாத்தும் தலைவரின் ஆளுமை, வலுவான பிரதேச அடித்தளம், 'தேசிய சக்திகளினால் இழுக்கப்பட்டுக் கரைந்து போகாதபடிக்கான தனித்துவ உணர்வுகள் என்ற மூன்று விடயங்களில் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

ஆனால், கட்சியின் தலைமைத்துவம் கிழக்குக்கு வெளியில் வழங்கப்படும் பொழுது "வலுவான பிரதேச அடித்தளம்" என்பது ஆட்டங் காண்கின்றது. இதேவேளை தலைமையை கிழக்குக்குள் தக்கவைத்தால் மிகப்பலமான ஆளுமைமிக்க தலைமைத்துவத்தைக் கொண்டிருக்குமா என்பது வினாவாகி விடலாம். இது பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கு இடமளித்து பிரிவுகளுக்கு வழி செய்யும். இந்த இரண்டு குறைபாடுகளையும் நிவர்த்திக்கும் வகையில் கட்சிக் கொள்கையில் "தீவிரவாத" புது இரத்தம் பாய்ச்சப்பட்டு தேசிய அலைகளினால் இழுத்துச் செல்லப்படாமல் ஆதரவாளர்களைத் தக்க வைக்கப் பார்க்க வேண்டும். ஆனால், தேசிய ஐக்கிய முன்னணி, அமைச்சர் பதவி போன்ற கிளைகளைப் பரப்பிய பின்னர் எத்தகைய தீவிரவாதத்தை, அதுவும் முன்னெப்போதும் முன்வைத்திராத தீவிரவாதத்தைக் காங்கிரஸால் இனி முன்வைக்க முடியும்? அத்தகையதொரு தீவிரவாதத் தலைவர் அண்மைக் காலத்தில் தோன்றுவாரா? சந்தேகந்தான்.

ஆக, தேர்தல் முடிவுகள் எப்படியிருந்தாலும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் எதிர்காலம் என்பது பிரதேச தளம், கிழக்குத் தலைமை, இஸ்லாமிய தீவிரவாதம் என்ற மூன்றின் பலத்தைப் பொறுத்துத் தான் நிச்சயிக்கப்படும் என்பதும் இந்தப் பலம் ஏற்கெனவே ஈடாட்டம் கண்டு விட்டது என்பதையும் சொல்லியேயாக வேண்டும். அஷ்ரஃப் என்ற தனிமனிதனில் இந்தப் பலத்தின் மூன்று அம்சங்களும் விரவி நின்றன. அத்தகைய ஒருவரைக் காங்கிரஸ் கண்டுபிடிக்கும் வரை அதனது எதிர்காலம் ஊசலாடவே செய்யும் எனலாம்.

## அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

கடந்த வாரத்துச் சிங்களப் பத்திரிகைச் செய்திகள் குறித்த ஒரு அலசல்



கே.சீ.ஜே.ரட்னாயக்க

## யானையின் மீது புலி!

தேர்தல் நடைபெற அனைத்து ஆயத்தங்களும் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் சிங்கள வார இறுதிப் பத்திரிகைகளுக்கு தேர்தல் குறித்தான செய்திகளை அறிக்கையிடும் இறுதி வாரமாக இவ்வாரம் அமைகின்றது.

பிரதான தலைப்புச் செய்திகளும், ஆசிரியர் தலையங்கங்களும் நீதியானதும், சுதந்திரமானதும் தேர்தலை வலியுறுத்தும் விதமாகவும், கட்சிகள் குறித்தான எதிர்வுகூறல் செய்திகளையும் அறிக்கையிட்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

**''தேர்தல் கண்காணிப்புக்கு 16,000 பேர்**

**-முதன் முறையாக பிக்குகளின் பங்களிப்பு''**

*ஞாயிறு லங்காதீப*

**''போலியான வாக்குகளை இனம் காண அதிஉயர் தொழிநுட்ப முறையொன்று''**

*ராவய*

**'பொஜ.முவுக்கு சிறப்பான வெற்றி'**

*தினமின*

**'தேசிய அரசாங்கத்திற்கு பொ.ஐ.மு தயார் நிலையில்'**

*லக்பிம*

**'தேர்தல் நிலையங்களில் வாக்குகளை இனம்கான விசேட முறையொன்று.**

**- கள்ளவாக்குப் போடுபவர்கள் சிக்கலில்'**

*ஞாயிறு திவயின*

தேர்தலில் துஷ்பிரயோகம் இடம்பெறுவதைத் தடுத்து நிறுத்துமுகமாக வாக்குச் சீட்டுக்களை இனம் காணும் முகமாக அனைத்து தேர்தல் நிலையங்களிலும் உயர் தொழிநுட்ப இயந்திரங்களைப் பயன்படுத்தவுள்ளதாகவும் இவ்வியந்திரம் போலியான பண நோட்டுக்களை இனம் காணும் இயந்திரத்தைப் போன்றதாகவும், வாக்குகளை எண்ணுவதற்கு முன்னர் வாக்குப் பெட்டிகளில் போலியான வாக்குச் சீட்டுக்கள் உள்ளனவா என்பதை இவ்வியந்திரங்கள் மூலம் இனம் காண முடியும் என ராவய தலைப்புச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

உள்ளடக்கிய செய்தியை திவயினவும் வெளியிட்டுள்ளது.

"இம்முறை பொதுத்தேர்தலில் வன்முறைச் சம்பவங்கள் அதிகம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் பிரதேசங்களுக்கு முதன் முறையாக இராணுவ நடமாடும் காவல் சேவை அமுல்படுத்த உள்ளது" என்ற மேலதிக தகவல் அதில் அறிக்கையிடப்பட்டுள்ளமையைக் காணக் கூடியதாவுள்ளது.

சிலுமின பத்திரிகை தலைப்புச் செய்தியில் பொ.ஐ.முவின் சிறப்பான வெற்றியை மூன்று கருத்துக் கணிப்புகள் எடுத்துக் காட்டியிருக்கின்றமையை விரிவாக தெரிவித்துள்ளது.

"ஐ.தே.கவின் சார்பாக கருத்துக் கணிப்பில் ஈடுபட்ட சர்ச் அன்ட் சர்ச் அறிக்கை பொ.ஐ.முவுக்கு 120 ஆசனங்களும், ஐ.தே.கவுக்கு 105 ஆசனங்களும் கிடைக்கும் என்றும், பிரித்தானிய டேட்டா சர்வீசஸ் அறிக்கை பொ.ஐ.முவுக்கு 57.4 வீதமும், ஐ.தே.கவுக்கு 31.7வீதம் வாய்ப்பு உண்டெனவும், அரசியல் மற்றும் பொருளாதார ஆய்வு மைய அறிக்கை பொ.ஐ.முவுக்கு 52 சதவீதமும், ஐ.தே.கவுக்கு 40 சதவீதமும் வாய்ப்புகள் உண்டெனவும் கூறுவதாக தினமின பத்திரிகை தெரிவித்துள்ளது.

அத்துடன் ஞாயிறு லக்பிம பத்திரிகை "பல அரசியல் அறிஞர்களின் கருத்தின்படி, இம்முறை பொதுத் தேர்தலில் பிரதான கட்சிகள் இரண்டிற்கும் தெளிவான பெரும்பான்மை கிடைக்காது. இதன்படி அரசாங்கம் அமைக்க வேண்டுமாயின் சிறு கட்சிகளின் ஆதரவைப் பெற வேண்டிய நிலைமை ஏற்படும்.

எனினும் இம்முறை பொதுத் தேர்தலில் ஓரளவு ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் என அனுமானிக்கப்படும் ஜே.வி.பி., சிஹல உறுமய, த.வி.கூ. மற்றும் புளொட் ஆகிய கட்சிகள் பிரதான கட்சியொன்றுடன் இணைந்து கூட்டரசாங்கத்தை அமைக்கும் நிலை ஏற்படும்" என செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு வார இறுதிப் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள் அமைந்திருக்க, வார இறுதிப் பத்திரிகைகளின் ஆசிரியர் தலையங்கங்கள் பின்வருமாறு அமைந்துள்ளமையை காணக் கூடியதாகவுள்ளது.

*ஞாயிறு லக்பிம*

***நாம் என்ன செய்யப்போகிறோம்? வாக்களிப்போம்***

"சம்பிரதாய பூர்வமாகக் கூறுவதாயின் இப்பத்தியில் நாளை மறுநாள் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் சமாதானமாக நடைபெறவேண்டும் என மனதார வாழ்த்த வேண்டியுள்ளது. எனினும் துரதிருஷ்டவசமாக இன்று நாட்டில் நாம் விரும்பும் விடயங்கள் எதுவமே இடம்பெறுவதேயில்லை" என ஆசிரியர் தலையங்கத்தின் ஆரம்பம் அமைகின்றது.

நாட்டில் -இடம்பெற்றுக் கொண்டிருக்கும் தேர்தல் கால வன்முறைகள், கொலை, கொள்ளை போக்கை இங்கு காணக் கூடியதாகவுள்ளது. "...நாளை மறுதினம் நடைபெறவுள்ள தேர்தலில் தேர்தல் சாவடிகளுக்கு சென்று தமது வாக்குகளைப் பயன்படுத்துமாறு நாம் அனைத்து வாக்காளர்களையும் கேட்டுக் கொள்கின்றோம். எமது பிரதிநிதிகள் நல்லவர்களோ, கெட்டவர்களோ அவர்கள் எமது விருப்பின் பேரிலேயே தெரிவு செய்யப்பட வேண்டும்" என்ற விடயத்தை ஆசிரியர் தலையங்கம் வற்புறுத்தியுள்ளது.

*சிலுமின*

***புலி யானையின் மீது***

சிலுமின தலையங்கத்தில் புலிகளும், ஐ.தே.கவினரும் இணைந்து பொ.ஐ.முவின் வெற்றிக்கு வேட்டு வைக்கிறார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. அதற்கான பல காரணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளமை அவதானிக்கலாம்.

"பிரபகாரன் தேர்தலில் போட்டியிடாத காரணத்தினால், தனது இலக்கை எய்த ஐ.தே.கவை பயன்படுத்திக் கொண்டார். இதனால் தான் புலி யானையின் மீது வீற்றிருக்கின்றது. ரணில் வடக்கு - கிழக்குக்கு எந்தவித பந்தோபஸ்துமின்றி பயணித்ததும் அதனால் தான். பிரபாகரன் ஐ.தே.கவுக்கு வாக்குப் போடுமாறு பணித்துள்ள போது அவருக்கு என்ன அச்சுறுத்தல் தான் ஏற்படப் போகின்றது..." என்கிறது அந்தஆசிரிய தலையங்கம்.

*திவயின*

***நாம் பார்த்துக் கொண்டிருப்போம்!***

"..எவ்வாறாயினும் பொதுத்தேர்தல் சமாதானமாக நடைபெறுமா என்ற ஆர்வம் மக்கள் மத்தியில் காணப்படவே செய்கின்றது. இவ்வன்முறைகளை கட்டுப்படுத்தவே இயலாதா? உண்மையில் கட்டுப்படுத்த முடியாத வன்முறைப்போக்கு இந்நாட்டில் காணப்படுவதாக பலர் கூறுகின்றனர். இது உண்மையா? இன்றைய நிலைமையில் வன்முறையானது இரண்டு கட்சிகளுக்குள் மட்டுமன்றி ஒவ்வொரு கட்சிகளுக்குள்ளும் காணப்படவே செய்கின்றது...? என்கிறது திவயின.

அத்துடன் ஞாயிறு லங்காதீப, 'ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் பாதுகாப்போம்' என்ற தலைப்பில் இவ்வாறானதொரு கருத்தை வலியுறுத்தியும், ராவய பத்திரிகை "நாட்டின் முக்கியமானதொரு தேர்தல்" என்ற தலைப்பிலும் ஆசிரியர் தலையங்கத்தை நீதியான சமத்துவமான தேர்தலை வலியுறுத்தியும் ஆசிரிய தலையங்கங்களைத் தீட்டியுள்ளன.

எவ்வாறாயினும், சிங்கள வார இறுதிப் பத்திரிகைகள் அனைத்திலும் தேர்தல்கால வன்முறைகளை அடிப்படையாகக் கொண்டே ஏனைய விவரணக் கட்டுரைகள், பேட்டிகள் அமைந்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மேலும் பாராளுமன்றத் தேர்தல் எதிர்வு கூறல் குறித்தான விபரங்கள், அட்டவணைகள் என்பவனவற்றுக்கு அதிக பக்கங்களை ஒதுக்கியுள்ளமையும் அவதானிக்கத்தக்கதாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# உங்கள் கண்களுக்குப் படாத தமிழ் அகதிகள்!

புதிய நூற்றாண்டின் தொடக்கத்துடன் மன்னாரில் இருந்து தமிழ் நாட்டுக்கு 'ஓயாத கடல் அலையை' தாண்டி 1300க்கும் மேற்பட்ட அகதிகள் சென்றிருக்கின்றார்கள். வடக்கு கிழக்கு மண்ணில் படும் சொல்லொண்ணா துயரங்களை, துன்பங்களைத் தாண்டி உயிரைப் பாதுகாக்க, வாழ்வைத் தக்க வைக்க முனையும் தமிழ் அகதிகள் கரையிலும், கடலிலும், படகுகளிலும், கடல் திட்டுக்களிலும் வாழ்வா சாவா என தத்தளித்துக் கரையேற வேண்டியுள்ளது. இந்திய மத்திய, மாநில அரசுகளின் அகதிக் கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக, இதுவரை தஞ்சம் கோரிச் சென்ற அகதிகள் அனுபவிக்காத கடல் துயரத்தை இன்று இவ்வகதிகள் முகங் கொடுக்கின்றனர்.

தலைமன்னாருக்கும், தனுஷ்கோடிக்கும் இடைப்பட்ட கடல் தூரம் 18 கி.மீ. இந்தப் பாதையில் 8 மணல் திட்டுக்கள் இருக்கின்றன. 3 இலங்கை கடல் எல்லைக்குள், 5 இந்திய கடல் எல்லைக்குள் உள்ளன. இந்திய அரசு (மத்திய மாநில) இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டுக்குள் நுழைவதை இப்போது விரும்பவில்லை. "அகதிகள் வருவதை முழுக்க முழுக்கத் தடுக்க முடியாவிட்டாலும், குறைக்க முயற்சி எடுக்கிறோம். அகதிகளுடன் பயங்கரவாதிகள் (புலிகள்) ஒன்று கலந்து வருவதால் அதைத் தடுப்பது தமது கடமை' என்று கூறுகிறார் இந்தியக் கடற்படைக் கொமாண்டர் பிரான்சிஸ்ன். 21 அகதிகள் கடலில் மூழ்கடிக்கப்பட்டது பற்றி தமிழ் நாட்டு அதிகாரி ஒருவர் "இத்தகைய பிரச்சினைகள் இருப்பதால் அகதிகள் தங்கள் நாட்டில் இருக்கப் பழக வேண்டும்" என்கிறார்.

அகதிகளைக் கூட்டிச் சென்று கரைசேர்க்கும் விசைப்படகுகள், இந்தியக் கடற்படை, கடலோரக்காவல்படை, ரோந்துப் படைகளால் பறிமுதல் செய்யப்படுகின்றன. படகு ஓட்டிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். கரை இறங்கிய அகதிகள் புலனாய்வுப் பிரிவு பொலிசாரால் பல வகையான விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர், சந்தேகிக்கப்படுபவர்கள் தனியாக பிரிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இங்கும் புலனாய்வுப் பிரிவுக்கு உதவும் தமிழ்த்துரோக ஆள்காட்டிகள் செயல்படுகின்றனர்.

தலைமன்னாரில் தலைக்கு 5000/- முதல் 15,000/- வரை அகதிகள் படகில் செல்ல பணம் வசூலிக்கப்படுகிறது. (அகதி ஏழை மக்களை தமிழ் நாட்டுக்கு கூட்டிச் செல்ல இந்த வியாபாரம். பணக்கார அகதிகளை வெளிநாடுகளுக்கு கூட்டிச் செல்ல 5 இலட்சம் முதல் 15 இலட்சம் வரை ஆள் கடத்தும் வியாபாரிகள் இந்த யுத்தத்தினூடாக உருவாகி இருக்கிறார்கள்.) படகு ஓட்டிகள் கடற்படைக்குப் பயந்து அகதிகளை 4வது, 5வது மணல் திட்டுக்களில் இறக்கி விடுகின்றனர். அல்லது மீன்பிடிக்க கடல் எல்லை தாண்டிவரும் தமிழக மீனவர்களிடம் தலைக்கு விலைபேசி அகதிகளைப் படகு மாற்றி விடுகிறார்கள். சிலவேளைகளில் மீன்பிடிப்படகுகள் தமிழகக் கரை திரும்பும் போது, கடல் கொந்தளிப்பாக இருக்கும் போது தங்களின் படகையும் அவற்றுடன் சேர்த்துச் சென்று 6வது, 7வது திட்டுக்களில், கரைகளில் இறக்கி விடுகின்றனர். 6வது திட்டில் இருந்து கரை கண்ணுக்குத் தெரியும். இத்திட்டு 5 அடி தண்ணீரில் உள்ளது. இத்தனை வேதனைகளின் பின் தான் அரிச்சமுனை, தனுஷ்கோடியில் அகதிகள் கரை சேர்க்கின்றனர். பின் சோதனைகளுக்குப் பிறகு மண்டபம் முகாமுக்குள் செல்கிறார்கள். அதற்குப் பின்னர் வேறு முகாம்களுக்குப் பிரித்து அனுப்பப்படுகிறர்கள்.

தலை மன்னாரில் ஆயிரக்கணக்கான அகதிகளில் பசி, பட்டினியுடன், குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், பிள்ளைத்தாச்சிகள் எனக் கடல் தாண்டி உயிரைக் காப்பாற்ற காத்துக் கிடக்கின்றனர். தரையில் வாழ அனுமதிக்காது குண்டு மழை பொழிந்த சிறீலங்கா வான்படையும் இராணுவமும் கடல் தாண்டிச் செல்ல கடற்படையும் தடுக்கிறது. 350அகதிகள் நடுக்கடலில் பிடிக்கப்பட்டு, மன்னாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இளம் வயதுடையவர்கள் இராணுவ முகாம்களில் சமையல், துப்புரவு பணிகள் செய்ய



வைக்கப்படுகின்றனர்.

கடந்த வருடம் ஜூன் நடுப்பகுதியில் 26 அகதிகள் படகு ஓட்டிகளால், 3வது மணல் திட்டில் இறக்கி விடப்பட்டனர். இரண்டு நாள் கடற்காற்று, குளிருள் அகப்பட்டு, உணவு, தண்ணீர் இன்றிக் காத்து இருந்தனர். தமிழக அரசோ, இந்திய கடற்படையோ காப்பாற்றவில்லை உதவவில்லை. இலங்கைக் கடல் எல்லைக்குள் தலையிடக் கூடாதாம். சிறீலங்கா கடற்படைக்குத் தகவல் கொடுத்து சிறீலங்கா கடற்படை சென்று கைது செய்து வந்தது. 26 அகதிகளில் ஒருவர் மணல் திட்டில் இறந்து விட்டார். இன்னொருவர் மயக்கமுற்ற நிலையில் இருந்த வரையும் அங்கே விட்டுவிட்டு 24 அகதிகளையும் பிடித்துக் கொண்டு வந்து மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

தமிழ்நாட்டுக்கு வரும் ஏழைத்தமிழ் அகதிகளின் அறியாமை, கல்வி இன்மை, ஏழ்மை எல்லாவற்றையும் எல்லா அயோக்கியர்களும், வியாபாரிகளும் அவர்களுக்கான அரசுகளும், ஆணாதிக்க வெறியர்களும், ஏமாற்றிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்கிறார் அகதிகளுக்காக ஆதரவுப்பணியில் ஈடுபடும் 'பிரணவானந்தா'.

1983களுக்குப் பின் தமிழினப் படுகொலைக்குப் பின் தமிழ் அகதிகள் பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினை என்ற எல்லையைத் தாண்டி உலகளாவிய பிரச்சினையாக மாறிவிட்டது. விசேடமாக இந்தியாவின் தலையீடு என்பது நேரடியாக அகதிகள் விவகாரங்களை காட்டி வெளிப்பட்டு நிற்கிறது. 83இன் பின் அகதிகள் விவகாரம் யுத்தத்துடன் தொடர்புபட்டதானதாக மாறி விட்டது. யுத்தம் உக்கிரம் அடையும் போது அகதிகள் வெளியேற்றம் மற்றும் அது தொடர்பான சிக்கல்கள் அனைத்தும் விஸ்வரூபம் எடுக்கும்.

அகதிகள் பிரச்சினைக்கும் யுத்த நிறுத்தம் அமைதி, சமாதானம் இவற்றுக்கும் இடையிலான உறவை வெளிப்படுத்துவதன் போக்கில் ஆக்கிரமிப்பு அரசியலும், விடுதலை அரசியலும் உலகளவில் எதிர் எதிர்நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆக்கிரமிப்புப் படைகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கும், விடுதலைப் புடைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையில் மோதல்கள் நடக்காதவரை அமைதி போல் தோற்றமளிக்கும் அகதிகள் பிரச்சினை ஆக்கிரமிப்புக்கு அல்லது விடுதலைக்கான மோதல்கள், சண்டைகள், முன்னேறுதல்கள் பின்வாங்குதல் நடக்கும் போது மட்டும் தான் அரசியலாக்கப்படுகிறது. மற்றைய காலங்களில் அகதிகள் பிரச்சினை அனாதைகள், விவகாரமாக அணுகப்படுகிறது. அரசுகளும், சரி, அராஜகத்தன்மை கொண்ட இயக்கங்களும் சரி இந்த எல்லையைத் தாண்டி அகதிகளின் அவலத்தை கணக்கில் கொள்வதில்லை. யாழ்ப்பாணத்தில் சண்டை நடக்கும் போது மட்டும் அகதிகள் பிரச்சினை உலகளவில் பேசப்படுகிறது.

இந்தியாவில் 1985இல் 26,365 அகதிகள் இருந்தனர். 1990 ஒரு லட்சத்தைத் தாண்டியது. 1998இல் 47,150 குடும்பங்களைச் சேர்ந்த 1லட்சத்து62ஆயிரத்து 415 அகதிகள் உள்ளனர். 5,957 அகதிகள் முகாமில் இருந்து அனுமதி இன்றி வெளியேறியுள்ளனர்.

மண்டபம் முகாம், மற்றும் பண்டக சாலை குடியிருப்புகளில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களைத் தவிர மற்றைய முகாம்கள் தற்காலிக நோக்கில் அமைக்கப்பட்டவை. இவ்வீடுகள் (கொட்டகைகள்) 10 வருடங்களைத் தாண்டி விட்ட நிலையில் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. ஓரளவு வெளியில் சென்று உழைக்கும் குடும்பங்கள் தாங்களாகவே குடிசைகள் போட்டுள்ளனர். ஆனால், முகாமின் சுற்றுச்சூழல் நோய்களைத் தானாகவே உருவாக்கும் நிலையில் உள்ளது. குடிதண்ணீர், மருத்துவ வசதி, கழிப்பக வசதி, மின்சாரம், வேலை போக்குவரத்து கல்வி என்பன எல்லா முகாம்களுக்கும் பொதுவான பிரச்சினைகளாக உள்ளன. இந்தியாவில் உள்ள அகதிகளுக்கு ஐ.நா சபை சட்டப்படி கூட 'அகதி அந்தஸ்து' இல்லை. அமைதியும் சமாதானமும் ஏற்பட்டு விட்டால் நாடு திரும்பி விடுவது என்ற ஒரு நம்பிக்கையுடன் வீழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

போராளி இயக்கங்களின் நடவடிக்கைகள், அத்துமீறல்களால் ஏற்பட்ட நெருக்கடிகள், தமிழக மக்களின் வெறுப்புக்களை இலங்கைத் தமிழ் அகதிகளே எதிர் கொள்கின்றனர். போதைவஸ்து கடத்தல், ஆள் கடத்தல், திருட்டு, கொலை, கொள்ளை என பாதாள உலகத்தின் கிரிமினல்கள் சிலர் அதிகார வர்க்கத்துக்கு லஞ்சம் கொடுத்து செய்யும் நடவடிக்கைகள் வெளியாகும் போது ஊடகங்கள், அவற்றை இலங்கை அகதிகளின் செயலாக சித்திரிப்பதாலும் தமிழக மக்களிடம் அகதிகள், போராளிகள் பால் இருந்த அனுதாபம் உருக்குலைந்து வருகிறது. 16 தமிழக அரச சார்பற்ற அமைப்புக்கள் அகதி முகாம்களில் செயற்படுகின்றன. ஈழ அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் OFERR, JRS என்பன எல்லா முகாம்களிலும் செயற்படுகின்றன.

அகதிகளுக்கான மாதக் கொடுப்பனவை அரசு உரிய காலங்களில் வழங்கிய போதும், அலுவலர்கள் உரிய காலத்தில் கொடுப்பதில்லை. (இலட்சக்கணக்கான ரூபாய்கள் தினசரி வட்டிக்கு திருப்பப்படுவதால் கொடுப்பனவு 10-15 நாட்கள் தாமதமாகிறது. இதை மக்களைத் திரட்டி மனுக்கொடுத்து மேல் அதிகாரிகளுக்கு, அரசியல்வாதிகளுக்கு சுட்டிக்காட்டி அரசு நடவடிக்கை எடுக்க கோருகின்ற, மக்கள் கோரிக்கைகளுக்கு முன்னாள் போராளிகளால் தலைமை தாங்க முடியவில்லை. மக்களையும், போராளிகளையும் இயக்கத் தலைமைகள் எப்படிப் போராட்டத்தில் இணைந்துள்ளனர் என்பதைப் புரிந்து கொள்ள இது சிறு உதாரணம் மட்டுமே.

சிறீலங்கா அரசும், இந்தியரசும் அகதிகளை தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் எனப்பார்த்து அணுகுகிறார்கள். அகதிகளை-மக்களை தீவிரவாதிகளாக, பயங்கரவாதிகளாக மாற்றுவதும், தீவிரவாதிகளை ஜனநாயக? நீரோட்டத்தில் கலக்க வைத்து கைக்கூலிகளாக்கி அகதிகளாக துரோகிகளாகக் கூட மாற்றுகின்ற சக்திபடைத்த அரசுகள் அவை. அவை இம்மக்களுக்காக எதுவும் செய்யப் போவதில்லை.

ஐரோப்பாவிலும், அமெரிக்க நாடுகளில் தமிழீழ ஆதரவுப் பிரச்சாரப் பயணம் மேற்கொள்கின்ற புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் பேசுகின்ற தமிழீழ தமிழ் நாட்டு ஆதரவாளர்கள், தமிழ் நாட்டிலுள்ள அகதிகள் மத்தியில் வந்து ஏன் ஆதரவு தெரிவிப்பதில்லை. புலம்பெயர்ந்த தமிழர்கள் தான் பொன்னும், பொருளும், பயணச்செலவும், பொறுப்பு எடுப்பார்கள் என்பதாலா? இலங்கைத் தமிழ் மக்களுக்காக மக்களின் சுதந்திரத்துக்காக ஆதரவு கொடுக்கும் தமிழக ஆதரவாளர்களே! தமிழ் நாட்டிலுள்ள அகதிகளின் குரலையும் ஒலியுங்கள். அவர்களுக்காக எழுப்பப்படும் உங்களின் குரல்கள் ஒவ்வொன்றும் அவர்களுடைய எதிர்காலத்திற்குப் பயனுள்ள பங்களிப்பினை ஆற்ற முடியும்.

தேசபக்தன் இதழில் வெளியான கட்டுரையின் சுருக்கிய வடிவம் இது

நன்றி - நூலகத்திட்டம்



அவர்களுக்குத் தெரியாது
நேற்று ஒருவன் இறந்தான்,
அது
நானல்ல, நீயல்ல.
இன்று ஒருவன் இறந்தான்:
அது நானோ நீயோ அல்ல.
நாளை ஒருவன் இறந்தால் அது
நான் அல்லது நீ.
நிச்சயமாக
எம்மில் ஒருவர் தான் தோழா.

அதிகாலை:
கவச வண்டிகளின்
நடமாட்டம் அதிகரிக்க
கிராமத்துத் தெரு
இழுத்து மூடப்படும்.
அப்போது
நான் அல்லது நீ
நிச்சயமாகக் கைது
செய்யப்படலாம்
அல்லது,
சுட்டுக் கொல்லப்படலாம்.
நானும் நீயும் மனிதர்களென்று
அவர்களுக்குத் தெரியாது.

அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம்
நானும் நீயும்
மனிதர்கள் அல்ல
என்பது தான்.

-துஷ்யந்தன்
(மரணத்துள் வாழ்வோம் தொகுப்பிலிருந்து)

# பௌர்ணமி இரவில் ஒரு மரணம்
## ஏற்படுத்திய அதிர்வுகள்

"மகனை இழந்து விட்டேனே என் நினைவுகள் என்னை அலைக் கழித்துக் கொண்டிருக்கின்றன. இழப்பை முதன் முதலாக உணரும் என்னுள்ளம் எதற்கும் இசையாது கொடூரமாக மௌனத்தை உள்வாங்கிக் கொண்டிருக்கின்றது. 28 வருடங்கள் என் கண்களுக்குள் வாழ்ந்து களித்தவன் இல்லாமல் கண்கள் எதற்கு என்று தோன்றுகின்றது. பிரிவு, இழப்பு இத்தனை கொடுமையானது என்பதை உணர்ந்து கொண்டு அழத் தலைப்படுவதா இல்லை என் கண்மணியோடு போய்ச் சேருவதா என எண்ணிக் கொண்டிருக்கிறேன். உயிரை இழந்துவிட்டு வாழ்வது சாத்தியம் இல்லையாயினும் என் மகனின் இறப்புக்கு சகலவிதத்திலும் காரணமானவர்களை காலம் முழுவதும் சபித்துக் கொண்டிருக்கவாவது நான் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது.

- நாளாந்தம் போர்ப் புலத்திலிருந்து வரும் இராணுவத்தினர்களின் சடலங்களில் ஒன்று தன் அன்பு மகனினது என்பதை அறிந்து மரணவீட்டில் தலையில் அடித்துக் கொண்டு கதறியழுத ஒரு அன்புத் தந்தையின் புலம்பலை பதிவு செய்து கொண்டது நினைவுக்கு வருகின்றது.

உயிர்ப்பிணைப்புகள், உறவுப்பாலங்கள் கண்ணிமைக்கும் பொழுதுகளில் சிதைந்துவிடும் போது தாங்கொணாது வெடித்துச் சிதறும் இதயங்களின் இதயக்குமுறல்கள் வெளிப்படும் விதங்களில் இதுவும் ஒன்று. இதயக்குமுறல் மன ஆழத்தில் அமைதியான பின்னர் உணர்வுகள் அடங்கி உடல் மட்டும் நடமாடுவது இன்னொரு விதம்.

நம்மில் பலர் நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருப்பது இதன் விளைவு எனலாம். போர் கையளித்த பரிசாக கண்ணீர் மல்க, உணர்வுகள் மரத்து, ஆசைகள் சிதைந்து வாழுபவர்கள் நம்மில் பலர். இதில் மொழி மதம் என்ற வேறுபாடில்லை.

தமிழ்ச் சமூகத்திற்கு மட்டுமன்றி சிங்களச் சமூகத்திற்கும் போர் தந்து கொண்டிருக்கும் எச்சங்கள் இவ்வாறான அனேகம்.

அவற்றில் ஒரு எச்சம் வன்னிஹாமி.

வன்னிஹாமிக்களின் உளக்குமுறல்கள் பற்றி நாம் அறியாது இருக்கிறோம். அவர்கள் தனது உளக்குமுறல்களை புறத்தே ஆர்ப்பரித்துக் கொண்டிருப்பதும் இல்லை.

அப்புஹாமி மகனை இழந்த ஒரு தகப்பன். வீட்டின் தரித்திரத்தைப் போக்கத் தனது இளமையை ஈடு வைத்து இறுதியில் சிதைந்த பிணங்களாக பெட்டியில் மூடப்பட்டு வரும் தன் பிள்ளைகள் என்றைக்காவது மீண்டு வருவார்கள் என செத்துப் பிழைக்கும் வன்னிஹாமிக்கள் எத்தனை பேரை எங்களுக்குத் தெரியும்.

இவ்வாறு நாம் அறியாத மனிதத்துவத்தின் வடிவங்களை வெளிப்படுத்துவது ஒரு சமூகச் சேவையாகவும், போரின் அவலச் சூழலையும், அரசியலையும் அம்பலப்படுத்துவதாகவே அமையும்.

இதனை செய்திருக்கிறார் பிரசன்ன வித்தானகே,

'புரஹந்த களுவர' (பௌர்ணமி இரவில் ஒரு மரணம்) திரைப்படத்தில்.

பனிபுலரும் விடிகாலையில் பிணம் காவும் வாகனம் அந்த குக்கிராமத்திற்குள் மெதுவாக நுழைகின்றது. மேடு பள்ளம் தாண்டி மரணத்தை பறைசாற்றிக் கொண்டு செல்லும் அந்த வண்டி, சைக்கிளில் பயணிக்கும் ஊர்காவல்



படையினரைத் தாண்டி, துவக்கு சுமக்கும் பிக்குவைத் தாண்டி குடிசை வீடொன்றில் வாசலில் தரிக்கின்றது. கிராமத்தின் சௌந்தர்யங்கள் அவ்விதமே எவ்வித மாற்றமும் இன்றி இருக்க அப்புஹாமியின் வீட்டில் மட்டும் மரண ஓலம். நான்கு இராணுவத்தினன்கள் சகல மரியாதையுடனும் சீல் வைக்கப்பட்ட பூதவுடல் பெட்டியை இறக்கி வைத்துவிட்டுச் செல்கின்றனர். கண்களை இழந்த வயோதிபரான அப்புஹாமி மௌனமாகக் கண்ணீர் வடிக்கிறார். தங்கை அழுது புலம்புகிறாள். பூதவுடல் தாங்கிய பேழை அன்றிரவு பெய்யும் மழையில் ஆங்காங்கே சிறு சிறு துளிகளாக நனைந்து கொண்டு குடிசைக்குள் வீற்றிருக்கின்றது. மறுநாள் சடங்குகள் சம்பிரதாயங்களுடன் பூதவுடல் அடக்கம் செய்யப்படுகின்றது. வன்னிஹாமி வழமை போல் மௌனமாக கண்ணீர் வடிக்கின்றார். வெடித்து பாளம் பாளமாகக் கிடக்கும் நிலத்தில் அவர் எப்பொழுதும் போல் தடியைக் கொண்டு தட்டி தட்டி ஆற்றில் நீர் எடுக்கச் செல்கின்றார். சில நாட்களுக்குப் பின் கிடைக்கும் இறந்த மகன் அனுப்பிய கடிதம் வன்னிஹாமியை சிந்திக்க வைக்கின்றது. மகன் தான் விடுப்பில் வீட்டிற்கு வந்து அத்திவாரமிட்டுச் சென்ற வீட்டை கட்டப் போவதாகவும், தங்கைக்கு திருமணத்தை முடிக்கப் போவதாகவும் எழுதிய விடயங்கள் தன் மகன் இறக்கவில்லை என்ற திடசங்கற்பத்தை கொள்ளச் செய்கின்றது.

விழிப்புலனை இழந்தாலும், தன்னம்பிக்கை கொண்ட வன்னிஹாமி மகனின் உயிர்வாழ்தலை நம்புகிறார். இராணுவத்தில் இருந்து வரும் நட்டஈட்டுக்கான விண்ணப்பத்தில் கைநாட்டிட மறுக்கின்றார். நட்டஈட்டுத் தொகையை பெற்றுக் கொள்ள அரும்பாடுபடும் பிள்ளைகள், அவ்வூர் கிராமசேவகர் ஆகியோர் மத்தியில் வன்னிஹாமியின் போராட்டம் தொடர்கின்றது. சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் அவருக்கு எதிராகத் திரும்பும் தருணத்தில் தன் மகனின் இறப்பை உறுதிப்படுத்த, வெறியுடன் புறப்பட்டுச் சென்று மகனின் சவப்பெட்டியை உடைக்க, ஊரார்கள் கூட, இறுதியில் தோண்டியெடுக்கப்படும் சவப்பெட்டியில் இரண்டு கருங்கற்களும், ஒரு வாழைத்தண்டும் பிணத்திற்குப் பதிலாகக் கிடக்கின்றது. நிலைமையை உணரும் வன்னிஹாமியின் முகத்தில் ஒளி படர்கின்றது. உற்சாகத்துடன் வழமைபோல் அவரது கால்கள்



விடியலில் நீரோடையை நோக்கிப் பயணிக்கின்றது. ஆற்றில் நீரடித்து விளையாடும் சிறுவர்களின் ஆர்ப்பரிப்பு வன்னிஹாமியை ரசிக்க வைக்கின்றது.

ஒரு மணித்தியாலமே கொண்ட திரைப்படத்தில் வன்னிஹாமியின் விம்மல், வெறுமை, தனிமை, முதுமை அனைத்தும் இந்நாட்டில் வெந்து வாடும் ஆயிரக்கணக்கான பெற்றோர்களை, வன்னிஹாமிக்களை நம் கண்ணில் நிறுத்துகின்றது.

அரச இயந்திரம், சாதாரண பொதுமக்களின் வாழ்வியலில் செலுத்தும் ஆதிக்கம், மனிதத்துவத்தில் ஏற்படுத்தும் பாதிப்புகள் பிரசன்னவினால் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன. இந்த எல்லா உறவுகளும், பிணைப்புகளும், எதிர்பார்ப்புகளும் மனிதத்துவம் என்ற நூற்பின்னலினால் கட்டிக் கோர்க்கப்பட்டுள்ளது என்பது பிரசன்னவினால் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளது.

போரியல் வாழ்வு தரும் சிதைவுகள் உளவியலில் ஏற்படுத்தும் தாக்கங்களில் இருந்து விடுபட எவராலும் இயலாது என்பதும், அது எத்தகைய வடிவங்களிலும் சூழ்மமான இயற்கை வாழ்வுக்கு உலை வைக்கும் என்பதும் புரஹந்த களுவரவில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

மேலும், இறைமை கொண்ட அதிகார நிறுவனம் எப்பொழுதும் வர்க்க நலன் பேணிக் கொண்டு தான் இருக்கின்றது என்பதும், அது எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் சாதாரண அடிமட்ட மக்களின் அபிலாஷைகளில் விருப்பு வெறுப்புகளில் பாதிப்பைச் செலுத்துகின்றது என்பதற்கு புரஹந்த களுவர திரைப்படக் கரு சிறந்த எடுத்துக் காட்டு எனலாம்.

எவ்வாறாயினும், புரஹந்த களுவர பல்வேறு அரசியற் காரணங்களினால் இன்று தடை செய்யப்பட்டுள்ளது.

இராணுவத்தினன் இறந்து விட்டான் என சவப்பெட்டியை சீல் வைத்து உறவினர்களிடம் கையளிக்கும் அரசு, பூதவுடலுக்கு பதில் கற்களை நிரப்பி அனுப்புவது என்பது நாட்டிற்காகவோ அல்லது வீட்டிற்காகவோ இராணுவத்தில் இணையும் இளைஞர்களைச் சற்று சிந்திக்க வைக்கும். தன் இளமையையும், உயிரையும் துச்சம் என மதித்து, தன்னைப் போருக்குள் பலவந்தமாக உள்வாங்கிக் கொள்ளும் அரசின் தந்திரம் பொதுமக்களைச் சென்றடையக் கூடாது எனக் கருதுவது எல்லா அரசுகளுக்கும் பொதுவான இயல்பு என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இதனால் அருமையான திரைப்படம் கிடப்பில் கிடக்கின்றது. இதில் வியக்க என்ன இருக்கின்றது.

வன்னிஹாமியாக ஜோ செனவிரத்ன பரிணமித்திருக்கிறார். போரின், இயலாமையின் கொடூரத்தைச் சிறப்பாக உள்வாங்கி வெளிக்காட்டும் அவரது திறமை மெச்சத்தக்கது. திரையில் அடையாளம் காட்டப்படாத இராணுவத்தினன் பார்வையாளர்களின் அனுதாபங்களை பெற்றுச் செல்கிறான்.

போர்ச் சூழலில் எமக்குள் நிகழும் பலவித போராட்டங்களில், அன்பை, காதலை, அரவணைப்பை எதிர்பார்க்கும் நம் இயல்புகளுக்கு மதிப்பும் மரியாதையும் தேவை: அதற்கு ஏங்கும் இதயங்களும் உண்டென்பதை புரஹந்த களுவர மூலம் பிரசன்ன விதானகே எம்முன் சித்திரித்திருக்கிறார். அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்.

இது பற்றி பிரசன்ன, "எந்தவொரு போரும் மனித கௌரவத்தைப் பாதிக்கின்றது. இதனால் நான் போரியல் வாழ்வுக்கு மத்தியில் மனித கௌரவத்தைப் பேண மேற்கொள்ளும் போராட்டத்தை வெளிப்படுத்த முனைந்தேன்.

இந்தத் திரைப்படத்தின் கதைக்கரு, மதவாச்சியில் நான் சந்தித்த இளைஞர்களைப் பற்றியது. இவர்கள் விவசாயம் செய்ய நீரில்லாது செய்தொழில் அற்று இயற்கையினால் தண்டிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கிருக்கும் மாற்றுவழி இராணுவத்தில் இணைவது தான். ஏனெனில் போரில் மரணிப்பதன் மூலமாவது கிடைக்கும் உதவிப்பணம் குடும்பத்திற்கு உதவியாக இருக்கும் என கருதுகின்றார்கள்" எனக் குறிப்பிடுகின்றார்.

– ரத்னா



கம்பஹா மாவட்ட ஐ.தே.க. வேட்பாளர் காமினி குணரத்னவின் ஆதரவாளர்கள் அறுவர் நிக்கவல பாலத்தருகே சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்தனர். அவர்களை நோக்கி வேகமாக ஒரு பஜிரோ ஜீப் வண்டி வந்து நின்றது. ஜீப்பிலிருந்த ஒருவர் துப்பாக்கியை நீட்டி மிரட்டினார். பின்னர் அத்துப்பாக்கியால் ஆகாயத்தை நோக்கிச் சுட்டார். வெடிச் சத்தத்துடன் பயந்து ஏனையவர்கள் ஓடிவிட அனுர சமிந்த என்பவரும் கருணாதிலக்க என்பவரும் மாட்டிக் கொண்டனர்.

பஜிரோவில் வந்தவர்கள் இருவரையும் செமத்தியாக உதைத்து விட்டுப் பறந்து விட்டனர். இவ்விருவரும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் பின்னர் அனுமதிக்கப்பட்டனர். அமைச்சர் றெஜி றணதுங்கவின் ஆட்களே இவ்வாறு பஜிரோவில் வந்து தாக்கியவர்கள் என்கிறார் காமினி குணரத்ன.

ooo

ஐ.தே.க. வை சேர்ந்த கே.ஜி.சிறிபால, என்.என்.அமரதுங்க ஆகிய இருவரும் மகியங்கனையிலுள்ள கிராந்துருக்கோட்டைப் பகுதியில் வைத்து பிரதியமைச்சர் டிலான் பெரேராவின் ஆதரவாளர்களால் நையப்புடைக்கப்பட்டனர். இதே பிரதியமைச்சரின் ஆட்கள் தனது வீட்டை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக எச்.எம்.ஆரியதாச என்ற ஐ.தே.க. ஆதரவாளர் முறைப்பாடு ஒன்றைச் செய்திருக்கிறார். 226-8674, 227-4593 இலக்கத் தகடுகளை கொண்ட வாகனங்களே இந்தத் தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வாகனங்கள் பொ.ஐ.மு.வினருடையது என்று ஐ.தே.க. குற்றம் சாட்டியுள்ளது. ஆயினும் இதனை பொ.ஐ.மு. மறுத்துள்ளது.

ooo

ஐ.தே.க.வின் முன்னாள் பா.உவும் குருநாகல் மாவட்ட வேட்பாளருமான அமரா பியசீலி ரத்னாயக்க என்பவர் தன்னை பொ.ஐ.மு ஆதரவாளர்களுள் ஒருவர் கத்தியால் குத்த முனைந்ததாக முறைப்பாடு செய்துள்ளார். இதனால் தனது மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய வேண்டி ஏற்பட்டு விட்டது என்று கூறுகிறார் பியசீலி. துப்பாக்கிப் பிரயோகத்தின் போது கத்தியால் குத்த வந்ததாகக் கருதப்படுபவர் இறந்து போனார். இன்னும் இருவர் படுகாயமுற்றனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

ooo

குருநாகல் மாவட்டத்தில், பொ.ஐ.மு.வின் மேல்மாகாணசபை உறுப்பினர் குமார கீர்த்தி விஜேரத்ன என்பவர் ஐ.தே.க ஆதரவாளர்கள் ஒரு மேடையை தயார் செய்து கொண்டிருக்கையில் அவர்களை நோக்கி தனது பிஸ்டலினால் சுட்டிருக்கின்றார். இம்மாவட்டத்தின் ஐ.தே.க அமைப்பாளர் இந்திகா பண்டாரநாயக்கவின் சகோதரன் சமிந்த பண்டாரநாயக்க இம்முறைப்பாட்டைச் செய்துள்ளார். இந்தச் சூட்டுச் சம்பவம் நடைபெற்ற போது பிரதி அமைச்சர் பந்துல பஸநாயக்கவும் கூட இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற கைகலப்பில் நான்கு ஐ.தே.க ஆதரவாளர்கள் குருநாகல் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

ooo

வடமத்திய மாகாணத்தில் பொ.ஐ.மு வின் தலாவ பிரதேச சபை பதில் தலைவர் உப்பாலி குணவர்தனவும் அவரது ஆதரவாளர்களான ஜயலத் மரம்பகே, புஸ்பா ஆகியோர் தனது வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டுகிறார் அனுராதபுர மாவட்டம் கலாவேவ தேர்தல் தொகுதி வேட்பாளரும் மாகாணசபை உறுப்பினருமான ஆர்.பி.அபேசிங்க. துப்பாக்கி வேட்டு வாகன கண்ணாடியை சிதறடித்த போது தான் அருகில் உள்ள வீடொன்றுக்குள் ஓடி ஒழித்துக் கொண்டதன் மூலம் காயங்களிலிருந்து தப்பியதாகச் சொல்கிறார். பொ.ஐ.மு.வினரின் இந்த நடவடிக்கைகட்கு கலென்பிந்துனுவேவ பொலிஸ் அதிகாரி ஜெயவீர என்பவரின் பொ.ஐ.மு. சார்பு நிலை பெரிதும் ஊக்கமளிப்பதாக இருந்துள்ளது என்று ஐ.தே.க, ஜே.வி.பி ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த பொலிஸ் அதிகாரி ஜயவீர சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஜே.வி.பி. ஆதரவாளர்களை குடிபோதையில் வந்து தாக்கியிருக்கிறார். இந்தத் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட ஒருவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பொ.ஐ.மு ஆதரவாளர்கட்கு பொலிசார் ஆயதங்கள் வழங்கியுள்ளனர் என்றும், ஐ.தே.க ஆதரவளார்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ooo

சப்பிரமுகவ மாகாண பொ.ஐ.மு முதலமைச்சர் அத்தாவுட செனவிரத்னவின் பாதுகாப்பு உத்தியோகத்தர் அனில் சமரசிங்க என்பவர் ருவான் வெல தேர்தல் தொகுதியில் உள்ள வலகம்பகம கிராமத்தில் நடத்திய துப்பாக்கிச் சூடொன்றின்போது ஒருவர் கொல்லப்பட்டார். இந்தச்சம்பவத்தில் உயிரிழந்தவர் வடக்கிலுள்ள யுத்த முனையிலிருந்து விடுமுறையில் வந்திருந்த ஒரு இராணுவச் சிப்பாய் என்று தெரிவிக்கப்படுகிறது. தலையில் சூட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்த இவரது கொலைக்கான காரணம் எது என்பது இதுவரை தெரியாவிட்டாலும், பாவிக்கப்பட்ட துப்பாக்கி அமைச்சுக்கு சொந்தமான ஆயுதம் என்றும், இச்சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வாகனமும் அமைச்சரவை வாகனம் என்றும் சந்தேகத்திற்கிடமின்றி தெரியவந்துள்ளது.

இதேவேளை பொ.ஐ.மு பிரதி அமைச்சர் எச்.பி.சேமசிங்கவும் அவரது ஆதரவாளர்கள் இருவரும் வடமத்திய மாகாண சபையின் பொ.ஐ.மு முதலமைச்சர் பேர்டி பிரேமலால் தசநாயக்காவின் ஆதரவாளர்களால் கடப்பனக என்றும் இடத்தில் வைத்து பலமாகத் தாக்கப்பட்டுள்ளார்கள்.

ooo

அரசாங்கத்திற்கு சொந்தமான வானங்கள் தேர்தல் வேலைகளுக்காக தாராளமாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. உதாரணமாக பதுளை மாவட்டத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அவர்கள் பிலியந்தலை டிப்போவின் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்வண்டிகளையும் (62-5865, 23ஸ்ரீ1004) மற்றும் அமைச்சுக்கு சொந்தமான பதினொரு வானுங்களையும் (05-1547, 62-1305, 64-3222, 58-1520 என்ற வானங்கள் அவற்றுட் சில ) தமது தேர்தல் வேலைகட்கு பயன்படுத்தியுள்ளார்.

ooo

பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினரும், தற்போதைய ஆனமடுவ தொகுதி வேட்பாளருமான டி.எம்,திசநாயக்கவின் ஆதரவாளர்களால் குடாவேவ பகுதியில் வைத்து றங்கா பண்டார என்பவரின் வாகனத்தின் மீது துப்பாக்கப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. புத்தளம் மாவட்ட ஐ.தே.க வேட்பாளரான

## இது பயங்கரவாதம் இல்லையா?

பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான 11வது தேர்தல் இதை எழுதிக்கொண்டிருக்கும் போது நடந்து கொண்டிருக்கிறது. தேர்தல் தொடர்பாக இதுவரை நடந்த வன்முறைச் சம்பவங்களை தொகுத்து நோக்கும் போது பொ.ஐ.முவினரால் பரவலாக பல்வேறு அளவுகளிலான வரன்முறையற்ற வன்முறைச் சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன.

ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்கான தேர்தல், சமாதானத்தை மீட்பதற்கான தேர்தல் என்றெல்லாம் பெரிதாக பீற்றிக் கொண்டாலும், தேர்தலிற்கான தயாரிப்பு முயற்சிகளில் 'ஜனநாயகம்' என்ற சொல்லின் மயிரளவு அர்த்தத்தைக்கூட காண முடியவில்லை.

இந்த வன்முறைகள் படுகொலைகள் முதல் அடிதடி மிரட்டல்கள் வரை பல்வேறு மட்டங்களில் நடந்துள்ளன. தேர்தல் வன்முறைகளில் அதிகளவில் ஈடுபட்ட சாதனையை பொ.ஐ.மு சாதித்துள்ளது. பொ.ஐ.முவின் புகழ்பூத்த சாதனைகளை இங்கு தரப்பட்டுள்ள சம்பவங்களின் தொகுப்புக் காட்டுகிறது.

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம். எத்தகைய வன்முறைகளிலும் ஈடுபடலாம் என்பது இங்குள்ள 'ஜனநாயக' கட்சிகளின் ஜனநாயகக் கோட்பாடாக மாறி விட்டது. தேர்தல் காலத்தின் போது நடாத்தப்படும் வன்முறைகள் 'தேர்தல் வன்முறைகள்' (Election violance) என்ற பதத்தினால் மிகவும் மென்மையாக கொள்ளப்படுகின்றன. இந்த வன்முறைகளை யாரும் அரசியல் வன்முறை (Polictical violance) என்று சொல்வதில்லை. அரசியல் வன்முறை என்றாலே அதை இலகுவாக பயங்கரவாதம் என்று முத்திரை குத்திவிடுகிற அரசியல் ஆய்வாளர்கள், மனித உரிமைவாதிகள் மற்றும் அரசியல்வாதிகள் யாரும் தேர்தல் வன்முறையைப் பற்றி அப்படி எதுவும் சொல்வதில்லை.

தேர்தல் வன்முறையை பயங்கரவாதம் என்று சொன்னால், இலங்கையின் ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள் ஆகிவிடுகிவார்களே?

வடக்கு கிழக்கு மக்களின் அரசியல் உரிமை வேண்டி ஆயுதம் ஏந்திய இயக்கங்களை பயங்கரவாதிகள் என்று குறிப்பிட்ட இவர்கள் அரசியல் அதிகாரத்திற்காக ஆயுதம், தூக்கி தெருவில் இறங்கிய அரசியல் கட்சிகளை வெறும் 'தேர்தல் வன்முறையாளர்கள்' என்று அழைப்பதுடன் திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள்.

ஒன்றில் இவர்கள் 'தேர்தல்' என்பது அரசியலோடு சம்பந்தப்பட்ட ஒன்றல்ல என்று கருத வேண்டும். அல்லது தேர்தலின் போது நடப்பவைகளை வன்முறை அல்ல என்று கருத வேண்டும்.

ஆனால், இரண்டுமே உண்மையல்ல என்பதால், இவர்களது 'பயங்கரவாதம் எல்லாம் எந்த அரசியல் என்பதோடு சம்பந்தப்பட்டதாக அமைந்து விடுகிறது' தெளிவாகிறது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமை என்று வந்துவிட்டால், அந்த அரசியலுக்காக நடக்கும் எந்த வன்முறையும் பயங்கரவாதமாகி விடுகிறது.

ஏனையவை மிகச் சாதாரணமான 'தேர்தல் வன்முறை' ஆகிவிடுகின்றன.

இந்தப் போக்கின் மிகப்பெரிய பம்மாத்து 'இன்று அரங்கேறிக் கொண்டிருக்கிறது' — தேர்தல் என்ற பெயரில்.

எல்லாவித வன்முறைகளும், தேர்தல் முடிந்தவுடன் யாருடைய அக்கறைக்கும் அப்பாற்பட்ட விடயங்களாகி விடுகின்றன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் முதலாய் மக்களின் சிவில் உரிமை ஜனநாயக உரிமை என்று கூறிக்கொண்டு தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் உருவாகி செயற்படத் தொடங்கி விடுகின்றன. இந்தக் குழுக்கள் எல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு நடந்து வரும் வன்முறைகளை தொகுத்து எழுதிக் குவிக்கின்றன. ஆனால், தேர்தல் முடிந்தபின் இந்த தகவல்களுக்கு எந்த அர்த்தமும் இல்லாமல் வெறும் ஆவணங்களாகிப் போய் விடுகின்றன.

எப்பாடுபட்டாவது ஒரு 'ஜனநாயக' தேர்தலை நடாத்தி விட்டோம் என்று உலகு பூராவும் பிரச்சாரம் செய்ய அரசாங்கத்திற்கு வாய்ப்பை வழங்குவதற்கு இவை நன்கு பயன்படுகின்றன. இந்த அரசாங்கம் தேர்தல் வன்முறை பற்றி தகவல் திரட்டவும், அவற்றை வெளியிட்டு அரசியல் கட்சிகளை அம்பலப்படுத்தவும் அனுமதிக்கிறது என்ற பெயரை அரசாங்கம் பெற்றுக் கொண்டு விடுகிறது.

ஆம், பயங்கரவாதிகள் 'ஜனநாயகவாதிகளாக' நடமாட இவை அனுமதி அளித்து விடுகின்றன.

இன்னொரு புறத்தில் தேர்தல் என்றாலே வன்முறை தான் என்ற ஒரு எண்ணத்தையும் இவை மக்களிடையே வளர்த்து விடுகின்றன.

தொடர்பு சாதனங்களும் ஜனநாயகவாதிகளும் இவற்றை எழுதுவதுடன் நின்றுவிடாது மக்களை இவற்றுக்கு எதிராக வளர்த்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அதுமட்டும் தான் இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரும் ஆரம்பமாக இருக்க முடியும்!

நன்றி - நூலகத்திட்டம்



# மயிரளவு ஜனநாயகத்தையும் காண முடியாத தேர்தல் இது!



பண்டாரவின் வாகனத்தின் மீது திசநாயக்கவின் ஆதரவார்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது பதிலுக்கு பண்டாரவின் ஆதரவார்களும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக கூறப்படுகிறது. இதில் திசநாயக்கவின் ஆதரவளரான ஷாமின் என்பவர் படு காயமடைந்துள்ளார்.

*ooo*

பொ.ஐ.மு. ஆதரவாளரான எஸ்.பிரேமரத்ன என்பவர் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லபட்டுள்ளார். குளியாப்பிட்டியைச் சேர்ந்த இவரை கடத்தியவர்களைப் பற்றிய தமது விபரங்களைத் தெரிவிக்க அவரது குடும்பத்தினர் மறுக்கின்றனர். பிரேமச்சந்திரவை கடத்தியதாக கருதப்படுபவர்கள், அவர் தங்கள் வசம் இருப்பதாகவும் தேர்தலின் பின் அவர் விடுவிக்கபபடுவார் என்றும், தொலைபேசியில் அவரது மகனிடம் கூறியதாக தெரியவருகிறது. அவர்கள், மகன் மனோஜ் என்பவரையும் தேர்தல் வேலைகளில் பங்கெடுக்க வேண்டாம் என மிரட்டியுள்ளதாகத் தெரியவருகிறது.

*ooo*

வாரியபொலையில் உள்ள, குருநாகலை வாரியபொலை வீதியில் இருந்த 'மனோஜ் வைன் ஸ்ரோஸ்' என்ற லக்ஸ்மன் பண்டார என்பவருக்கு சொந்தமான கடை பொ.மு.ஐ. பிரதேசிய சபைத் தலைவர் ஆனந்த ஜயலத் என்பவரால் தாக்கப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பண்டாரவின் சகோதரியான இந்திக்க திலகரத்ன பண்டார (ஐ.தே.க) இதுபற்றி தெரிவிப்பதின்படி பிரதேசபைக்கு சொந்தமான வாகனத்தில் (252-6377) வந்த ஜயலத் மதுபானக்கடைமீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் கசிப்பு லால் என அழைக்கப்படும் லால் பிரேமசிறி என்ற பொ.ஐ.மு ஆதரவாளர்கள் கொல்லப்பட்டு 45 நிமிடங்களின் பின்னர் நடைபெற்றது. பின்னர் பண்டாரவுக்கு சொந்தமான ஹொட்டேலான லக்மதுரவினுள் கதவுகளை [illegible] பொ.ஐ.மு. ஆதரவர்கள் கட்டிடங்களையும் அதனுள்ளிருந்த தொலைக்காட்சிப் பெட்டிகளையும் சேதப்படுத்தியுள்ளார்.

வாரியப்பொலவில் நடந்த சம்பவமொன்றில் கொல்லப்பட்ட லால் பிரேமசிறி என்ற பொ.ஐ.மு ஆதரவாளரது இலங்கமனு வேவாவிலுள்ள வீட்டின் அருகில் வைத்து ஐ.தே.கவின் வீட்டின் அருகில் வைத்து, ஐ.தே.கவின் வடமேல் மாகாண சபை உறுப்பினர் ரூபான் சில்வாவுக்கு சொந்தமான பஸ்வண்டி ஒன்று (60ஸ்ரீ6452) பெற்றோல் ஊற்றித் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது. இந்தப் பஸ்வண்டி லால் பிரேமசிறியின் வீட்டின் முன்னால் நிறுத்தப்பட்டு துப்பாக்கிகளால் அதன் ஜன்னல்கள் உடைக்கப்பட்டன. இதன்பின் சாரதி துப்பாக்கி முனையில் இலங்கமனுவேவா சந்திக்கு வாகனத்தை ஓட்டுமாறு மிரட்டப்பட்டார். அங்கே வைத்து பஸ்மீது தீவைக்கப்பட்டது. பஸ் எரிந்து கொண்டிருக்கும் போது அதன் மேல் மேலும் பொ.ஐ.மு ஆதரவாளர்களால் பெற்றோல் வீசப்பட்டது.

அத்துடன் ஐ.தே.க ஆதரவளர்களது பஸ்வண்டிகள் அப்பாதையில் ஓடக்கூடாது என்வும் சாரதிக்கு கூறப்பட்டது. இது தொடர்பான முறைப்பாடொன்றை வாரியபொல பொலிசில் பதிவு செய்ய முயன்ற போது அதை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளார். அதன்பின் இது தொடர்பான முறைப்பாடு குருநாகல் பொலிசில் பதிவு செய்யப்பட்டது.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் பயணம் செய்த மோட்டார் பவனிமீது பொ.ஐ.மு ஆதரவாளர்களால் கிரனைட் வீசப்பட்ட சம்பவம் ஒன்றும் நிகழ்ந்துள்ளது.

*ooo*

றோக சேனகுமார, றங்கா பக்முதெனிய, நீல் குமார உள்ளிட்ட பொ.ஐ.முவின் சப்பிரகமுவ மாகாண சபை அமைச்சா லலித் திசநாயக்கவின் ஆதரவாளர்கள் சிலர் பிரதி அமைச்சர் மஹிபால ஹேரத்தின் ஆதரவாளர்களால் கேகாலை தேர்தல் தொகுதியிலுள்ள ஹெட்முல்லவில் வைத்து தாக்கப்பட்டுள்ளார்கள்.

ஒரே கட்சி ஆட்களிடையே நடந்த இந்த தாக்குதல் சம்பவத்தின்போது ஹேரத் மட்டுமே கேகாலையில் தேர்தலில் நிற்க முடியும் என்று அவரது ஆதரவாளர்கள் மிரட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

கம்பஹா மாவட்ட ஐ.தே.க வேட்பாளர் காமினி குணரத்னவின் அலுவலகம் தாக்கப்பட்டதில் கட்டிடங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் பல சேதமாக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த 25ம் திகதி நடந்துள்ளது.

அங்கிருந்த மோட்டார் சைக்கிள் (116-4503) ஒரு துவிச்சக்கர வண்டி பல கோப்புகள், சுவரொட்டிகள் மற்றும் பிற தஸ்தாவேஜுகள் எல்லாம் எதிர்ப்பக்கத்திலிருந்த காணியிலுள்ள ஒரு குளத்தில் வீசப்பட்டிருந்தன. அரலிய உயன என்று அழைக்கப்படும் இந்தக் காணி அனுர பண்டாரநாயக்கவுக்கு சொந்தமானது.

அலுவலக காப்பாளரை கட்டிபோட்டு அலுவலகத்தை அமளிதுமளிப்படுத்திய நான்கு பேர் கொண்ட கும்பல் ஒன்று பிஸ்டல் வயலஸ் சகிதம் வந்து இந்தச் செயலில் ஈடுபட்டதாக காப்பாளர் தெரிவிக்கிறார். கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் எடுத்த இந்தச் சம்பவத்தின்போது அதைச் செய்தவர்கள் இப்படியான செயல்களை செய்வதில் கை தேர்ந்த நிபுணர்கள் என்று தெரிந்தது என்கிறார் காப்பாளர். வந்தவர்கள் ஆயுதப்படையைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் குறிப்பிடுகிறார் அவர்.

| சம்பவத்தின் தன்மை | பதியப்பட்ட சம்பவங்கள் | பொ.ஐ.மு வினால் செய்யப் பட்டதாக குற்றச் சாட்டப்பட்டவை | ஐ.தே.கவினால் செய்யப்பட்டதாக குற்றச் சாட்டப் பட்டவை | அடையாளங்காண முடியாதவர்களால் செய்யப்பட்டதாக குற்றச் சாட்டப் பட்டவை |
|---|---|---|---|---|
| கொலை | 61 | 10 | 2 | 48* |
| கொலை முயற்சி | 26 | 14 | 4 | 7 |
| காயமடைந்தோர் | 232 | 132 | 58 | 28 |
| பெருங்காய மடைந்தோர் | 29 | 15 | 6 | 7 |
| தாக்குதல்கள் | 336 | 198 | 81 | 37 |
| மிரட்டல்களும் கடத்தல்களும் | 187 | 109 | 20 | 49 |
| அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் | 25 | 24 | 1 | -- |
| கொள்ளை | 11 | 4 | 1 | 5 |
| தீவைப்பு | 33 | 11 | 6 | 16 |
| ஏமாற்று | 255 | 102 | 35 | 111 |
| மிரட்டல் | 356 | 187 | 95 | 57 |
| சொத்துச் சேதம் | 94 | 55 | 8 | 26 |
| தேர்தல் குற்றங்கள் | 35 | 7 | 5 | 17 |
| பிற | 46 | 14 | 6 | 21 |
| மொத்தம் | 1726 | 882 (51.1%) | 328 (19.0%) | 429 (24.9%) |

**குறிப்பு:** இவற்றில் *41 சம்பவங்கள் புலிகளின் தற்கொலை போராளிகளால் செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

இந்த அட்டவணை இரு பிரதான கட்சிகளது குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட மொத்த [illegible] சிறு சம்பவங்கள் இங்கே சேர்க்கப்படவில்லை.

- சஞ்ஜித்

நன்றி - நூலகத்திட்டம்



## ஒரு சிப்பாயின் மனைவி ஓலமிடுகிறாள்

சென்ற சனி விடுப்பு முடிந்து நீ
பயணிக்கையில்
வளைந்து மறையுங் கணம் வரை உற்று
நின்றேன்.
மனம் மூச்செறியுந் தன்னும் வெகு நேரமாய்ப்
போதிப் புத்தரின் முன் அகலேற்றி
வணங்கினேன்.

புதனன்று காய்ந்த கிளையிலேயே ஒற்றைக்
காகங் கரைந்தும்
ஆகாயம் கறுப்பைத் தன்னில் அள்ளிப்பூசிய
போதும்
நான் பயப்படவில்லை ஏனெனில்
நானறிவேன், உன் பாதுகாப்பை.
எழுதப்பட்ட உன் ஜாதகத்தில் சங்கடச்
சகுனங்களேதுமில்லை.

ஆனால் வியானழன்று அவர்கள் உன்னை
வீட்டுள் தூக்கி வந்தபோது
எனக்குப் புரியவில்லை, எதை நம்புவது,
எதை எண்ணுவதென்று
நான் நீள்துயிலினின்றும் விழித்தெழுந்து
ஒருங்கே
தெளிவற்ற விம்பங்களாய்ச் சாவையும்
வாழ்வையும் கண்டேன்.

அந்தச் சனிதானே கிராமக்கிணற்றில்
ஒன்றாய் ஊறிக்குளித்தோம்
நீயோ சிறுவாண்டாய்க் கற்களை வீசினாய்
இழிக்குந்தவளைகள் மேல்
அங்கே அவக்குறியாய்ப் பளீரழகோடு பாளை
தள்ளிய
பெரும் பனையின் வாசனையை
சுவைத்தல்லோமுகர்ந்தோம்.

மீள இரைமீட்கையிலே புலப்படாத
வனைத்தும் புரிகிறதிப்போது
நீபின்னே வந்து என் பின்னலைக் கோதிய
விதமும்
தாழ்வாரத்து ஓரக் கதவில் தரித்துச் சாய்ந்து -
என்
தேனீச் சுறுசுறுப்பைக் குறுகுறுத்து ரசித்த
சுகமுந்தான்.

அவர்கள் உனக்களித்தது ஒரு மாவீரனின்
அடக்கத்தையே,
இராணுவ வேட்டு மரியாதைகளோடு
வாத்தியங்களையும் இசைக்கையிலே
உன்னுடல் பல கை மாறித் தவழ்ந்தது.

நான் யாவற்றையும் பனிப்புகாரினூடே
நோக்கினேன்.
அவர்களின் பேச்சு, முகில் மூட்டத்தினூடு
இரைந்து
தடுமாறிப் பறக்கும் விமானம் போலப்
புலனாக,
அவர்கள் அலசின வாழ்வினதும்
சாவினதும் வழிப்பாதையை.

நான் எண்ணிப் பார்க்கிறேன் கனவிழந்த
கட்டாந்தரை வருடங்களை,
நெடியதோர் பாதையாய் வளைகிறது
பாலைவனத்தூடு.
எவ்வாறு என்னை ஈடுபாடுடையவளாய்
மாற்றுவது என்பதும்
வரும் நாட்களை ஓட்டுவது என்பதும்
எனக்குப் புதிர்களே.

வார இறுதிகளில் எதுவுமே செய்யத்
தோன்றா நிலையில்
திருமண வெண்பட்டுச் சேலையை நீளமாய்
நீலத்திற் பரப்பி
மணவறையில் என் இடை சுற்றிய
நாணத்தோடும் புதுப்பட்டோடும்
பொலிவாய் உன்னோடு நின்ற காட்சி
நினைவை அலைக்கிறது.

எத்தனை பெரும் போக்கிரிப் புழுகர்கள்
இந்தச் சாதகச் சாத்திரிகள்?
என்பதையும் இடைக்கிடை எண்ணியபடியே
நான்......

(ஆங்கில மூலம்: கமலா விஜயரத்ன)
28.09.1996

## விடுதலையின் பெயரால்......

நாய் மூச்செடுக்கும்
மனிதன் மூச்செடுக்கும்

நாய்குரைக்கும்
மனிதன் கதைக்கும்

நாய் நீந்தும்
மனிதன் நீந்திப் பழகும்

நாய் வீட்டைக் காக்கும்
மனிதன் நாட்டைக் களவெடுக்கும்

நாய் = வளர்ப்புப்பிராணி: அனைத்து
வகையும் அடக்கம்.

நாய் கடிக்கும்
புதைத்த பிணங்களை வெளிக்கொணரும்
போதைப் பொதிகளை மோப்பம் பிடிக்கும்

ஐம்பொறியாய்த் தொழிற்பட்டு
ஆத்மநட்பாய் உயிர்தரும்.

மனிதன் = போராளி அனைத்துக் குழுவும்
அடக்கம்.
மனிதன் = இராணுவம் அரச இயந்திரம்
அனைத்தும் அடக்கம்.

மனிதன் கடிக்கும்
கன்னத்தில் அறையும்
தொங்க விட்டுக் கம்பங்களில் கடைசித்
தீர்ப்பெழுதும்
தொழுகைகளில் தோட்டாக்களைச்
சீறிப்பாயவிடும்
காட்டிக் கொடுக்கும்
காசு பிடுங்கும்

இல்லாவிடின்,
மனிதன்
சுட்டுத் தள்ளும், மணிகுழிகளை நிரப்பும்
சுவரில் அறைந்து சித்திரம் கிறுக்கும்
தொடைகளைப் பொத்தலிடும்
வெட்டித்துண்டாடும்
கருமணிகளைத் தோண்டி அள்ளும்
சதைகளை உரித்துப் பிய்க்கும் - பீச்சும்
ரத்தத்தில் வெறித்துச் சிலிர்க்கும்.

இல்லாவிடின்,
மனிதன்
வார்த்தைப் பிழம்புகளால் சிலம்பாடும்.
குண்டுபோட்டு ஷெல்களை எய்யும்
கோடாலியால் நெஞ்சைக் கொத்திப்
பிளக்கும்
அகலவிரித்துக் குறிகளைத் திணிக்கும்
திணித்த குறியுள் கிரனெய்டு விதைக்கும்
வதைத்துச் சிதைக்கும்.

உதவிக்குறிப்பு:
தெரு நாய்களுக்கு மாயாஜால தந்திர மந்திர
. சாகஸவித்தைகள் தெரிவதும் இல்லை
மனித வன்முறைகள் புரிவதும் இல்லை.

Expected Output

ஆகவே மனிதனை மனிதன் என்றே
ஏசிப் பழகுங்கள்,
ஏசுங்கள் - நம் வன்முறையின் பெயரால்.

26.08.1999

## நிலுவை

நீ திருப்பித் தரலாம்
மணிக்கூட்டை
கை விளக்கை, கத்திரிக்கோலை
(கன்னி மீசை வெட்ட நீயாய்க்
கேட்டது நினைவு)
கடும்பச்சை வெளிர் நீலக்
கோடன் சேட்டுக்களை

தரலாம் - இன்னமும் மிச்சங்களை
இன்று பல்லி எச்சமாய்ப் போனவற்றை.

உன் முகட்டில் சுவடாய்ப்
பதித்த
என் காட்டுரோஜா உணர்வுகளையும்,
அள்ளியள்ளித் தெளித்து

பூப்பூவாய்ப் பரவிய
திவலையைக் குளிர்ச்சியையும்
எப்படி மறுதலிப்பாய்?
எந்த உருவில் திருப்பி அனுப்புவாய்?

கடிதத்திலா
காகிதப் பொட்டலத்திலா?
இதில் நான்
உனக்கிட்ட உதட்டு முத்தங்களையோ
நீ எனக்குள் செலுத்திய
ஆயிரத் தெட்டுக் கோடி விந்தணுக்களையோ
நான் கணக்கில் எடுத்துச்
சேர்க்கவில்லை என்பது மட்டும்
நமக்குள்
ஒரு புறமாகவே இருக்கட்டும்.

20.10.1995




ஆழியாள் எனும் மதுபாஷினியின் "உரத்துப் பேச கவிதைத் தொகுதி அண்மையில் வெளிவந்துள்ளது.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆழியாள் தற்போது ஆங்கில இலக்கியத்தில் முதுமானிப் பட்டப்படிப்பினை மேற்கொண்டுள்ளார்.

தமிழ், ஆங்கில இலக்கியங்களில் தேடலும், வாசிப்பும் மிகுந்த இவர் மொழிபெயர்ப்பு, படைப்பிலக்கியம், விமர்சனம் ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபடுபவர்.

இவரது கவிதைகள் ஆழியாள் எனும் பெயரில் ஏற்கெனவே பல பத்திரிகைகள், சஞ்சிகைளில் வெளிவந்தவையே.

இத்தொகுதியில் ஆழியாளின் கவிதைகள் உட்பட சில தெரிவு செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு கவிதைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆழியாள் தனது கவிதைகள் மூலம் பல அதிர்வுகளை உண்டு பண்ணியவர். இவரது கவிதை மொழியின் தனித்துவமும், சொல்லும் பாங்கும், சொல்லப்பட்ட விடயங்களும் இவரது கவிதைகளுக்கு உயிரூட்டுகின்றன.

'சொல்லாத சேதிகள்', 'சிவரமணியின் கவிதைகள்' ஆகிய தொகுதிகளைப் போன்று உலகை பெண்ணின் உணர்வு நிலையில் நின்று நோக்கும் கவிதைத் தொகுதி ஆழியாளுடையது.

சரிநிகர் வசகர்களுக்காக அவரின் தொகுதியில் இருந்து சில கவிதைகளைத் தருகிறோம்.

ஆ-ர்

## பதிவுத்தபால்

அன்புள்ள பரமபிதாவுக்கு
புவியைத் திரட்டி உருட்டிப்
படைத்தது முழக்க நீர்தான் என
பலரும் சொன்னதை மனதில் வைத்தே
உம்மோடு பேச விழைகிறேன் -
இல்லாவிடின்
உமக்கும் எனக்கும் வேறென்ன
தொடர்பு இருக்கலாம்?

சரி, நேரே விடயத்துக்கு வரலாம்.

நான் அட்டக் கறுப்பி
அவன் ஆயிரம் பொன்.

நான் பொட்டை நாய்
அவன் ஆம்பிளைச் சிங்கம்.

நான் வேசை
அவன் சேத்துல மிதிச்சு ஆத்தில
துடைக்கலாம்.

நான் மலடி
அவன் சாண்பிள்ளை எண்டாலும்
ஆண்பிள்ளை.

நான் ஊரோடி
அவன் சமூகத் தொண்டன்.

என் பேச்சு அரட்டை, நான் வாய்க்காரி
அவன்
பேச்சு சிந்தனை, அவன் பேச்சாளி.

அத்துடன்

அவன் →
மகன் - மேற்படிப்பு முடிச்சாச்சாம்
நல்ல வேலையில் இருக்காராம்.

அப்பா - பதவி உயர்வு கிடைச்சாச்சாம்
குணத்தில் அவர் சிறு குன்றாம்.

தாத்தா - சொன்ன சொல்லை ஊர்
தட்டாதாம்
வண்ணக்கர் நேரே
சொர்க்கத்துக்காம்.

நான் →
மகள் - தீவயித்திலயாம்
கெதியா கரையேத்தட்டாம்.

அம்மா - குங்குமமும் கொடியும் மங்களமாம்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு
அழகாம்
குடும்பச் சமாச்சாரம் சுவர்
நாலுக்குள்ளாம்
அப்புறம்
குழந்தை கெட்டது என்னாலாம்.

பாட்டி - சுமங்கலியாப் போனால்
எல்லாம் சரியாயிருமாம்.

ஆதலால் பரமபிதாவே!

நீ வெண்தாடியோ, சடாமுடியோ
அர்த்த நாரீஸ்வரனோ, அருவமோ, உருவமோ
ஆராய் வேண்டிலும் இருந்து விட்டுப் போம்
ஆனால் ஈரேழு உலகங்கள்
அண்டம் ஆகாசம் என்று அறளை பத்தாமல்
அடுத்த தடவை தன்னும்
உருப்படியாப் படையும்
ஒரே ஒரு உலகத்தை.

30.12.1999

நன்றி - நூலகத்திட்டம்



## எமது குரல்



இம்முறை 'எமது குரல்' பகுதியில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்பவர் எம்.டி.ஸ்வர்ணகாந்தி. இவர் 15 வருட காலமாக அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவற்றில் கடமையாற்றிய அனுபவம் கொண்டவர். களனி பல்கலைக்கழகத்தில் கலைமானி பட்டம் பெற்று தற்போது அப் பல்லைக்கழகத்தில் சமூக விஞ்ஞானத்தில் பட்டமேற்படிப்புக்கான கல்வியை மேற்கொண்டு ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிக்கும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றார். தற்போது முகாமைத்துவ உதவியாளராக பணியாற்றிக்கொண்டிருக்கும் இவர் நூலொன்றை எழுதும் நோக்கம் கொண்டவராகவும், சமூக செயற்பாடுகளை கூர்மையாக அவதானிக்கும் போக்கு கொண்டவராகவும் உள்ளார். பலதரப்பட்ட அமைப்புகளில் அவர் வேலை செய்யும் போது உள்வாங்கிக் கொண்ட விடயங்கள் தன்னை ஒரு படைப்பாளியாக உருவாக்கியுள்ளன என்கிறார். அவர் இன்னும் உத்தியோக பூ ர்வமாக இலக்கிய ஆக்கங்களில் ஈடுபடாத போதும், ஒரு கல்வியியலாளராக, எதிர்கால படைப்பாளராக வரவிருக்கும் அவரது அனுபவங்களைப் பகிர்வது சிங்கள சமூகத்தின் மனப்பாங்குகளின் இயல்புகளை வெளிப்படுத்துவதாக இருக்கும் எனலாம்.

ஸ்வர்ணகாந்தி பெண்ணின் குரல் அமைப்பில் நிர்வாக உதவியாளராகவும், 1987-91 காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக சர்வதேச தொழிலாளர் அமையத்தின் செயற்றிட்ட அதிகாரியாகவும், சென்வோர் அமைப்பின் உதவி ஆய்வாளராகவும், ஜனசவிய நம்பிக்கை நிதியத்தில் போஷாக்கு செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளராகவும், சர்வோத நிறுவனத்தின் அங்கவீனர்களை பயிற்றுவிக்கும் செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமையாளாராகவும், தேசிய கிராமிய கூட்டமைப்பின் செயற்திட்ட முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

# நான் தமிழ்ப் பெண்ணாக இருந்திருந்தால்..............!

*போர் குறித்து மிகவும் உணர்ச்சிபூர்வமாக கருத்து வெளியிடும் பண்பு கொண்டவரான நீங்கள், இவ்வாறானதொரு மனப்பாங்கினை உள்வாங்கிக் கொள்ள ஏதுவாகிய காரணம் எது என்று கருதுகிறீர்கள்?*

"1983 ஆடிக்கலவரம் இடம்பெற்ற போது நான் களனிப் பல்லைக்கழகத்தில் முதலாமாண்டு மாணவி. பற்றியெரியும் டயர்களின் நடுவே நானும் எனது நண்பிகளும் மிகவும் பீதியுடன் பயணம் செய்த காலங்கள் அவை.

அடுத்த நிமிடத்தில் என்ன நடக்கப் போகின்றது என்ற பீதியை சுமந்து கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தோம். இந்த அனுபவங்களை இன்னும் என் மனது சுமந்துகொண்டு தானிருக்கின்றது. எனது தகப்பனார் தோற்றத்தில் சற்று கருமையான உடலமைப்பைக் கொண்டவர். இதனால் அவரை மருதானை புகையிரத நிலையத்தில் நிறுத்தி அவரிடம் பலதரப்பட்ட குறுக்கு விசாரணைகளை நடாத்தினர். சிற்சில சிங்கள சொற்களை திருப்பி உச்சரிக்குமாறு கூறியிருக்கின்றனர். இது எனது தந்தையை உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதித்தது.

அப்பொழுது நான் பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டே எழுதுவினைஞராக ஒரு நிறுவனத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்த அவ்வேளை நான், அந்நிறுவனத்திற்கு சேவையாற்ற சென்றவேளை ராகம புகையிரத நிலையத்தில் ஒரு தமிழரை ஆயுதங்களால் அடித்துக் கொல்வதைப் பார்க்க நேர்ந்தது. அந்த அப்பாவி நபர் எம்மை போன்று பீதியையும் அச்சத்தையும் ஒருங்கே சுமந்து கொண்டு வேலைக்கு சென்று கொண்டிருந்தவர். இந்த கொடுமையை சகிக்கமுடியாத நான், புகையிரத நிலையத்திலிருந்து கத்திக் கொண்டே ஓடிச்சென்றதை இன்னும் என்னால் மறக்க இயலவில்லை. நானும் தமிழ்ப் பெண்ணாக இருந்திருந்தால் எனக்கும் இந்நிலைமை தானே எனத் தோன்றியது.

இவ்வாறு தமிழர்கள் சிங்கள வெறியர்களால் வேட்டையாடப்பட்ட போதும் தமிழர்களை காப்பாற்றிய சிங்களவர்களும் இருந்தனர் என்பதற்கு நான் ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். பொ.ஐ.மு. அரசாங்கத்தின் பிரதி அமைச்சராக இருக்கும் டிலான் பெரேரா அன்று ஆடிக்கலவரம் நடைபெற்ற சூழலில் சட்டக்கல்லூரியில் கல்வியைத் தொடந்து கொண்டிருந்தார். ஆடிக்கலவரத்தின்போது சட்டக் கல்லூரியில் இருந்த சிங்கள சக தோழர்களுடன் தமிழர்களை காப்பாற்றவென வாகனமொன்றின் இருபுறமும் சிங்களவர்களை ஏற்றிக் கொண்டும் நடுவில் தமிழர்களை ஏற்றிக் கொண்டும் கொலைவெறியர்கள், மத்தியில் 'ஜயவேவா' என கோஷம் எழுப்பிக் கொண்டும் துரிதமாக செயற்பட்டுக் கொண்டிருந்தனர். 'ஜயவேவா' என கோஷமிட்டால் சந்தேகம் வராது என்ற வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு எத்தனையோ தமிழர்களின் உயிர்களை அன்று அவர்கள் காப்பாற்றினார்கள்.

> ஆடிக்கலவரத்தின்போது சட்டக் கல்லூரியில் இருந்த சிங்கள சக தோழர்களுடன் தமிழர்களை காப்பாற்றவென வாகனமொன்றின் இருபுறமும் சிங்களவர்களை ஏற்றிக் கொண்டும் நடுவில் தமிழர்களை ஏற்றிக் கொண்டும் கொலைவெறியர்கள், மத்தியில் 'ஜயவேவா' என கோஷம் எழுப்பிக் கொண்டும் துரிதமாக செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

**இனப்பிரச்சினை குறித்தான அரசியல் செயற்பாடுகள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

பொதுவாகக் கூறுவதாயின் போரை நிறுத்தும் தேவை எவருக்குமில்லை. இன்று போரை வைத்துக் கொண்டு பலர் வாழ்க்கை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசியல்வாதிகளுக்கு தமது அதிகாரங்களைப் பேணிக் கொள்ளவும், அவர்களது இருப்பைப் பேணிக்கொள்ளவும் இந்த போர் அவசியமாகவிருக்கின்றது. அரசும், இராணுவ அதிகாரிகளும் போரை ஒரு வியாபாரமாக நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் அவர்கள் போரை மென்மேலும் சிறப்பாக நடாத்தும் வேலையை பொறுப் பேற்றுள்ளனர்.

***நீங்கள் பல அரச அரச, அரச சார்பற்ற அமைப்புகள் பலவற்றில் சேவையாற்றியுள்ளீர்கள். அவ் அமைப்புகளில் பெற்ற அனுபவங்களைப் பற்றி ஏதேனும் கூறினால்...?***

1990 முற்பகுதியில் நான் ஜனசவிய நம்பிக்கைப் பொறுப்புச் சபையில் போஷாக்கு

— 17

## A Soldier's Version

மேஜர் ஜெனரல் சரத் முனசிங்ஹ எழுதியிருக்கும் "A Soldier's Versions" என்ற நூல் பற்றிய கட்டுரையொன்று பார்த்தேன். இந் நூல் பற்றிய அறிமுகம், கதையாடல்கள், விமர்சனங்கள் ஏதும் ஈழத்துத் தமிழ்ச் சூழலில் இடம் பெற்றிருக்கிறதா, பெறுகிறதா என்று தெரியாத நிலையில் இது குறித்த கட்டுரையின் வாசிப்பினை பகிர்ந்து கொள்கிறேன்.

சரத் முனசிங்ஹ சில காலங்களுக்கு முன்னர் இராணுவப் பேச்சாளராக நியமிக்கப்பட்டிருந்தவர். பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு தட்டுத்தடுமாறிக் கொண்டு பொய்களை நிறுவ அவர் பட்ட பாடுகளை சிலவேளைகளில் நீ தொலைக்காட்சியில் பார்த்திருப்பாய். இந்த நூலிலும் அது மாதிரியானவை இருக்கலாம் என்று அனுமானிக்கலாம். அவர் இராணுவத்தின் மிகப் பழைய அதிகாரி. கிட்டத்தட்ட எழுபதுகளிலிருந்தே தமிழ்ப் "பயங்கரவாதத்திற்கெதிராக போராடி" வருகிற ஓர் இராணுவ அதிகாரியாம்.

குறித்த கட்டுரை அந்த நூலிலுள்ள இந்தப் பந்தியுடன் தொடங்குகிறது. "புலிகள் தம் 10-15 வயதிற்கிடைப்பட்ட பாலகப் படையை (Baby Brigade க்கு என்ன தமிழ்?), யுத்தத்தில் குற்றுயிராகப் பிடிக்கப்படுகிற இராணுவத்தினரைக் கொல்ல வைத்தும், அப்பாவி மக்களைப் படுகொலை செய்ய அனுப்பியும் இரத்த வெறியூட்டி வளர்க்கின்றனர்".

இந்நூல் தன்னனுபவ நினைவலைகள் கொண்டதாக உள்ளதெனக் குறிப்பிடும் கட்டுரையாளர் தொடர்ந்தும் அந் நூலிலுள்ள சில விடயங்களைக் குறிப்பிடுகிறார்.

"பொதுவாக இளம் வயதுப் போராளிகள் தான் பெரிய பெரிய இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தப் படுகிறார்கள். அதிலும் பாலகப் படையிலிருந்து பலர் தெரிவு செய்யப்படுகிறார்கள். அவர்கள் களத்தில் கொல்லப்பட்ட போராளிகளை தூக்கி வருவதிலும் கொல்லப்பட்ட படை வீரர்களிடமிருந்து ஆயுதங்களை எடுத்து வருவதிலுமான பணியில் ஈடுபடுத்தப் படுகிறார்கள், இதன் மூலம் அவர்களுக்கு வெறியூட்டப் படுகிறது".

"புலிகளிடமுள்ள பயங்கர, ஆபத்தான ஆயுதம் ஏவுகணைகளோ, 122 எம்எம் எறிகணைகளோ அல்ல.... மாறாக, அவர்களின் தற்கொலைப் போராளிகள் தான்...... புலிகளியக்கத்தில் உயர்வான ஸ்தானத்தில் - ஆண்களிலும் தான் பெண்களிலும் தான்- இருப்பது அவர்கள்தான்".

"மிகவும் இளவயதினர் தான் இதற்கு தெரிவு செய்யப் படுகிறார்கள். அவர்களுக்கு மூளைச் சலவை செய்யப்படுகிறது. இராணுவத்தினர் தமிழர்களுக்கிழைத்த கொடுமைகள், அட்டூழியங்கள் வீடியோவில் காட்டப்பட்டும், கதைகளாகச் சொல்லப்பட்டும் அவர்களுக்கு உணர்ச்சி ஊட்டப்படுகிறது. அவர்கள் ஆரம்பத்தில் நான்கு மாத பயிற்சிக்குள்ளாகின்றனர். அந்த நான்கு மாதங்களிலும் அவர்கள் சிறு சிறு போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் படுகிறார்கள்".

"பின்னர், போதிய திறமை காட்டியவர்கள் மேலும் ஆறு மாத கால பயிற்சிக்குள்ளாகின்றனர். அதன் முடிவில்.....தெரிவு செய்யப்பட்டவர்கள் மேலும் நான்கு மாத இறுதிப் பயிற்சியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்களது இந்த உயர் தியாகங்களினது உணர்வுகள் மழுங்கடிக்கப்படாமலிருப்பதற்காக வேண்டி அவர்களுக்கு எந்த பொழுது போக்கு, கேளிக்கை(!) அம்சங்களும் அனுமதிக்கப் படுவதில்லை. பத்திரிகை வாசிப்பது கூட தடுக்கப்பட்டதாக இருக்கிறது. ஏனைய கரும் புலிகளல்லாத புலிகளுடன் இவர்கள் சேர்ந்து பழகவும் முடியாது. இவர்களின் முகாம்களை பொட்டு அம்மானாகிய சண்முகலிங்கம் சிவசங்கரனைத் தவிர வேறு எந்த உயர் பீடத்தவர்களுமோ, ஏனைய தலைவர்களுமோ சந்திக்க முடியாது. அவர்தான் தற்கொலைப் படைப்பிரிவு, புலனாய்வுப் பிரிவு என்பவற்றின் ஒட்டு மொத்தப் பொறுப்பாளராக இருக்கிறார்".

"ஆனால் இன்னொரு விடயம் என்னவென்றால் மற்றப் போராளிகளை விட தற்கொலைப் போராளிகளுக்கு சில விஷேச சலுகைகளும் உண்டு. அவர்களுக்கு விஷேசமான உணவுகள் வழங்கப் படுகின்றன. வீடுகளுக்குச் சென்று வர அனுமதிக்கப் படுகிறார்கள். அவர்கள் ஏதாவது தாக்குதலில் ஈடுபடுத்தப்பட முன்னர், ஒரு சிலரே பார்க்க முடிகிற புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் விருந்துண்ணும் சந்தர்ப்பம் பெறுகிறார்கள்...."

"அவர்களுக்கு வழங்கப்படும் பணி தோல்வியுறும் பட்சத்தில் அவர்களுக்கு கிடைப்பது மரணம் தான். தங்கள் கடமைக்குச் செல்ல முதல் அவர்கள் இது பற்றி எச்சரிக்கை செய்யப்படுகிறார்கள். ஒரு தற்கொலை இலக்கின் போது பிரதான தற்கொலையாளரை வேறு இரு கரும் புலிகள் கண்காணிப்புச் செய்கிறார்கள். பிரதான தற்கொலையாளியின் இலக்குத் தவறும் பட்சத்தில் பொறுப்பாளர்கள் கேள்விகளுக்கும், தண்டனைகளுக்கும் உள்ளாகிறார்கள்".

"கரும்புலிகள் மூன்று வகையினராகத் தரப்படுத்தப் படுகின்றனர். 'சாதாரண கரும் புலிகள்', 'கடற் கரும் புலிகள்', 'Champion Black Tigers' என. இவர்கள் எல்லோரும் பிரபாகரனதும், பொட்டு அம்மானினதும் தனிப்பட்ட விஷேச கண்காணிப்பின் கீழ் பயிற்சி பெற்றவர்கள். எனினும், பொட்டு அம்மான் தான் இவர்களின் முழுப் பொறுப்பு வாய்ந்த அதிகாரி. அவருக்கு புலிகளின் பல்வேறு பிரிவுகளும் ஒத்துழைப்பு வழங்குகின்றன. மேற் சொன்ன பிரிவுகளில் மூன்றாவது பிரிவினர் தான் மிகவும் பிரயோசனமுள்ளவர்களாகும். அவர்கள் எதிரியின் ஆழ் எல்லை வரை துணிந்து செல்லக் கூடியவர்கள். சிங்கள ஆங்கில மொழியில் சரளமாக உரையாடக் கூடியவர்கள். தங்களுக்கான பணிக்காலம் வரும் வரை சாதாரண் வாழ்க்கை நடாத்தும் இயல்பிலுள்ளவர்கள்".

இந்தத் தகவல்கள் தான் அந்தக் கட்டுரையில் இருப்பன. சில வருடங்களுக்கு முன்னர் புலிகள் வெளியிட்ட "கடற் புலிகள்" என்ற நூல் பார்த்தேன். அதிலும் அவர்களே நிறையத் தகவல்கள், படங்களென பலதையும் சொல்லியிருந்தார்கள். அதில் என்னோடு கூடப் படித்தவன் "இறுதி போட்டோவில்" இருந்தது இன்னொரு விஷேசம்!

அது சரி இந்த நூலிலிருக்கக் கூடிய விடயங்களை ஒரு தமிழர் அல்லது முஸ்லிம் எழுதியிருந்தால் அவர் எங்கு இருந்திருப்பார்? நான்காம் மாடியிலா? இது தணிக்கைக்கு உட்பட்டதா? இவற்றை அங்கிருந்து நீ எழுது.

நன்றி - நூலகத்திட்டம்



# பாம்புகள்

நம்பிக்கையின் ஒளிக்கற்றைகள் வானிலிருந்து மேகத்தில் பட்டு தெறித்து விழும், நடுநிசியின் குளிர்ந்த காற்று வீசுகின்ற இருண்ட பாலைவனத்தின் ஒரு இடத்தில் சசியின் வீடு இருப்பதாக எனக்குப் பட்டது. அமைதியான பௌர்ணமியின் குளிர்ந்த காற்று என் தேகத்தில் பட்டு அந்தப் பிரக்ஞைக்கு உரமேற்றியது. கத்தரித் தோட்டம், ட்ரக்டர் கராஜ், நெல் அடுக்கி வைக்கும் ஸ்டோர், மாமரங்கள், தென்னை மரங்கள், பாக்குமரங்கள், நாய்களுக்குக் கட்டிய சிறிய வீடு, பூந்தோட்டம் - இவைகள் சசியின் பெரியவீட்டு வெள்ளை மணல் முற்றத்தைச் சுற்றி இருந்தன. வெள்ளை மணலில் நீளமான கறுத்தப் பாம்புகள், சிறிய சிறிய கறுத்த எலிகளைத் துரத்திக் கொண்டிருந்தன. குளிர்ந்த காற்றுப் பலமாக வீச பாம்புகளும், எலிகளும் கரைந்து போயின. இலைகள் யாவும் பழைய நிலைக்கு மீண்டும் வர துரத்தல்கள் தொடர்ந்தன.

மீண்டும் மீண்டும் துரத்தல்கள் தொடர்ந்து கொண்டே இருந்தன. துரத்தல்களுக்கு முன்பும், பின்பும் எலிகள் மிகையுற்பத்தியாக, அதற்கேற்றாற் போல் பாம்புகளும் ஆயின. துரத்தல்கள் வாழ்க்கைப் பேராட்டங்களாயின. வல்லன பிழைத்தோ, முதுகுகாட்டியோ வாழ்ந்தன. பின் யாதுமாகி பாரம்போடப் பழகிய அல்லது ஆதாரமான இயற்கை பாம்பு-எலி துரத்தல்களை வெற்றிப் பெருமிதத்துடன் தெரிவு செய்தது. எலிகளும் காற்றின் மேலும், நிலவின் மீதும் பாரத்தைப் போட்டுவிட்டு ஓடிக் கொண்டேயிருந்தன. பாம்பு-ஏணி-தாயக்கட்டை விளையாட்டுத் தொடர்ந்து கொண்டிருந்தது. எலிகளின் வாழ்க்கைப் போராட்டத்தில், பாம்புகளினால் கடிபட்டு சாண் எற முழம் சறுக்கின. எலிகளும் தங்கள் முயற்சிகளில் சற்றும் மனம் தளராமல் தப்புதலுக்கான முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டிருந்தன.

இருள்வெளி மேடைகளில் உயிர்நிழல் கரைந்து கொண்டிருந்தது. இந்த வெள்ளை மணல் மொடர்ன் ஆர்ட் முற்றத்தில் இன்னும் என் பார்வை ஆழமாகிக் கொண்டே இருக்க, வாழ்க்கையின் ஒரு கோணம் புரிபட ஆரம்பிக்கின்றது.

கறுப்பு என்பது துக்கம். வெறுப்பு. நடுநிசியின் அந்தகாரத்தை கிழித்து நரிகள் கூவும், ஏதாவது டிராகுலா இரவுகளில் தான், இந்தக் கறுப்பு, மேகமாய் முழுமதியை மூடத் தொடங்கி நடுநிசி இர்வு பற்றிய பயத்தை தோற்றுவிக்கத் தொடங்கும். நிலவைப் பார்க்கிறேன். நிலவுக்குள் இருப்பது, அம்மி அரைக்கும் கிழவியா? முயலா எனப் பார்க்க முயல்கிறேன். முயல் தோற்கிறது. இன்று கடல் சரியாக பொங்கும். கடற்கரையில் படகு, தோணிகளை கொஞ்சத் தூரம் தள்ளி வைப்பார்கள். கடல் இன்று தங்கச் சரிகை போட்ட சாரி கட்டி, நிலாப் பொட்டு வைத்து, கூந்தலில் வெள்ளிப் பூக்களை சூடி, சுமங்கலிப் பெண்ணாகும். காட்சியளிக்கும். கடலும் பெண். நிலவும் பெண். பெண்களாயிருந்து இவைகளுக்குள் கடல் ஏன் கொந்தளிக்கிறதோ தெரியாது. என்று யோசிக்கையில், மணிக்கட்டைப் பார்க்கிறேன்.

ஐந்து நிமிடங்கள் பத்து மணிகளைத் தாண்டிவிட்டு இருந்தது. சசி வந்து பக்கத்துக் கதிரையில் அமர்கிறான். 'சசி, நிலவும் பெண். கடலும் பெண்.. ஏன் வழமையா பௌர்ணமியில் கடல் பொங்குது' என்று சசியிடம் கேட்டேன். 'நேர் கோட்டு ஈர்ப்பு விசை ஒண்டையொண்டு கவருதாக்கும்' என்றான். ஒரு பௌர்ணமியில் தான் பாம்பு நிலாப் பெண்ணை விழுங்கத் தொடங்கி விசம் கக்கும்.

அந்தப் .பௌர்ணமிதான் இந்தப் பௌர்ணமியோ என்று நினைத்து கடற் பெண் மார்பிலும், வயிற்றிலும் அடித்து ஒப்பாரி வைப்பது தான் கொந்தளிப்பு என்று எனக்குள்ளேயே யோசித்து விட்டு சசியைப் பார்த்தேன். பாம்புகள் பற்றிய பயப் பிரக்ஞைகள் இரவுகளில் தான் அதிகமாக உற்பத்தியாகி ஊற்றெடுப்பது வழக்கம்.



அப்போது 'சசி சசி' என்று பக்கத்து வீட்டுப் பையன், அவர்கள் வளவுக்கும் இவர்கள் வளவுக்கும் பொதுவாயுள்ள வழியால் ஓடி வந்து கொண்டிருந்தான். 'என்ன' என்று சசி கேட்டான். 'அம்மாவுக்கு என்னமோ பூச்சி குத்திடிச்சி போல, அம்மா வலியால கத்துறா' என்றான் பையன். உடனே நானும் சசியும் அம்மாவின் வீட்டுக்கு ஓடுகிறோம். அங்கே அம்மா எதிர்பார்த்துப் போனதைவிட கொஞ்சம் சுகதேகி மாதிரித்தான் தெரிகிறார். சசி வீட்டுக்கு நான் போவதற்கு வழமையாக அம்மாவின் வளவிற்குள்ளால் தான் போவது வழக்கம்.

அதுதான் சோட் கட்டும் கூட. அப்படிப் போகும் போதெல்லாம் அம்மா மலர்ந்த முகத்துடன் தான் வரவேற்பார். அம்மா எனக்குச் சொந்தம் இல்லாட்டியும், நான் அம்மாவ அம்மா என்று தான் கூப்பிடுவது வழக்கம். அம்மாவின் முகத்தைப் பார்க்கிறேன். வலியின் கடுமை முகத்தில் தெரியத் தொடங்கியது.

'என்னம்மா நடந்தது?' என்றேன். 'இவ்விடத்த படுக்கறப் போ பூச்சி குத்தி கொழுவி இழுத்த மாதிரி இருந்திச்சி, வலிக்குது. சரியா போயிடும் ' என்றார் அம்மா.

'கொஞ்சம் பூச்சி குத்தினத காட்டுங்க' என்றேன். இரண்டு குண்டுசி, பதிஞ்ச தடம் இருந்தது... என்ன நடந்தது என்பதை உடனடியாகப் புரிந்து கொண்டேன். உடனே அம்மாட மகனைக் கூப்பிட்டு, அம்மாவ அடுத்த அறைக்கு கூட்டிச் செல்லுமாறு பணித்துவிட்டு, அம்மாட மற்ற மகனிடம் 'அம்மாக்கு பாம்பு கடிச்சிட்டுது போல. பாம்பு இங்கதான் எங்கேயோ இருக்கோணும். தேடிக் கண்டுபிடிச்சி அடியுங்க, இல்லாட்டி உயிரோட பிடியுங்க. ஆனா பாம்ப தப்ப விட வேணாம். அடிக்க முடியாட்டியும் கடிச்சது என்ன பாம்பெண்டாவது பாருங்க'. நாங்க அம்மாவ ஹொஸ்பிட்டலுக்குக் கொண்டு போக ஓட்டோ கொண்டு வாறம்' என்று சொல்லிவிட்டு அடுத்த சந்தியிலிருந்த கோவிந்தன் அண்ணனின் வீட்டை நோக்கி சசியுடன் ஓடினேன்.

கடந்த மாதம் பக்கத்துக் கிராமத்தில் மிருகத்தனமான செல் வீச்சால் மூளை வெளிவந்து, கை கால் பறந்த பன்னிரண்டு பேரையும், அந்த நடுச் சாமநேரத்தில் தன்ர உயிரைப் பணயம் வைத்து மூன்று ட்ரிப்பில் நான்கு நான்கு பேரா ஹொஸ்பிட்டலுக்கு ஒரு சதக் காசும் வாங்காம கொண்டு போய், அதில் பத்துப் பேரின் உயிரைக் காப்பாற்றினாரே, அதான் கோவிந்தன் அண்ணன். போன கிழமை கணேஸ் பரிசாரியாரிடம் வைத்தியம் பார்க்க வந்த அந்த முஸ்லிம் பெண் ஆஸ்த்மா வந்து. உயிருக்குப் போராடின போது , மண்மூடை, முள்கம்பிவேலி பயம் எல்லாவற்றையும் மறந்து ஹொஸ்பிட்டலுக்குக் கொண்டு சேர்த்தது மட்டுமில்லாமிலாமல் அந்தப் பெண்ணுக்கு சாப்பாட்டுக்கும் ஒழுங்கு பண்ணிவிட்டு, ஒரு சதக் காசும் வாங்காம வந்தவர் கோவிந்தன் அண்ணன்.

ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு, தலைப் பிரசவத்திற்கும், உயிருக்கும் போராடின பெண்ணை, மற்றவர்கள் மண் மூடை முட்கம்பி வேலிப் பயத்திற்குக் கைவிட்ட நிலையிலும் காசு எதுவும் வாங்காமல் ஹொஸ்பிட்டலில் சேர்த்து , அசமந்தமா இருந்த நர்ஸ்களுக்கு, 'உங்களப் பத்தி பேப்பர்ல எழுதிப் போடுவேன்' என்று பயமுறுத்தி தாயினதும் சேயினதும் உயிரைக் காப்பாற்றி வைத்தவர் தானே கோவிந்தன் அண்ணன். இரவு நேரத்தில் இத்தனை கெம்பஸ் பிள்ளைகளை ஹொஸ்பிட்டலுக்கு கொண்டு போய் கோவிந்தன் அண்ணன் காப்பாற்றி இருப்பார். கோவிந்தன் அண்ணன் ஒரு ஆபத்பாந்தவன். பாம்புக்கும் கீரிக்கும் காட்டில் சண்டை நடக்கும் பல கொத்துக்கள் வாங்கியும் பாம்பைக் கீரி தோற்கடித்து கொன்று போடும.

பின் பாம்பின் விசத்திலிருந்து தன்னைக் காப்பாற்ற, ஒரு மூலிகையை நாடி ஓடும். இறுதியில் வேரில் மனிதாபிமானத்தையும், கிளைகளில் தைரியத்தையும் கொண்டு மூலிகையையும் அடையாளம் காணும். இறுதியில் உயிர்களைக் காக்கும் இந்த மரத்தைப் பற்றி கோவிந்தன் அண்ணனுக்கு தெரியும் என்று தான் நான் நினைக்கிறேன்.

'அண்ணன், அண்ணன்' என்று கோவிந்தன் அண்ணனின் கேற்றைத் தட்டுகிறேன். உடனே சத்தம் போட்டு அண்ணன் வருகிறார். என்னை ஆச்சரியம் கலந்த சந்தோசத்துடன் பார்க்கிறார். விசயத்தைச் சொல்ல அடுத்த நிமிடம் அம்மாவின் வீட்டடியில் லாந்தருடன் ஓட்டோ நிற்கிறது.

அம்மாக்கு அருகிற் போய் 'அம்மா' என்றேன். 'ம்..' என்றார். அம்மாவின் கண் மேலே இழுபட்டு இருந்தது. தலை ஒருபக்கம் நிற்க முடியாமல் சரிந்து கொண்டிருந்தது. எலாபிடெ குடும்பப் பாம்பான நாகம் இல்லாவிட்டால் கருவளலை கடித்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். க்ஷபாம்பை கண்டு பிடிச்சாச்சா" என்றேன். 'இல்லை' என்றார்கள்..அம்மா படுத்த பாயைப் பார்க்கிறேன்.பாய்க்கடியில் ஏதோவிருப்பதாக உள்ளுணர்விற்குப்பட்டது. 'சசி இங்க வாங்க இந்த பாயைக் கிளப்புறன் பொல்லால ஒரே போடு மண்டையில போடுங்க'. என்றேன்.பாயைக் கிளப்பினேன். அம்மா தலை வைத்து படுத்த இடத்திற்கு கீழ், அம்மாவைக் கொழுவிக் கொத்திக் குத்திய அந்த அழகிய கறுத்த பாம்பு சுருண்டு நீண்டு, படுத்திருந்தது.

கரண்டித் தலை. சுங்கான் மீன்போல் பளபளத்த கரு நீல, மண்ணிற தோலில் மெல்லிய சாம்பல் கலந்த கறுப்பு கோடு போட்ட பாம்பு. கண்டங்கருவளலை. விஞ்ஞானப் பெயர் பங்காறஸ் சிலோனென்சிஸ். சசிக்கும் எனக்கும் விசப் பாம்புகள் என்றால் ஒரே ராசிதான். எனது டிப்பார்ட்மென்ட் மியூசியத்திற்காக நிறைய விசப்பாம்புகளைப் பிடித்துச் சேர்த்திருக்கிறோம். பொல்லால் ஒரே போடு மண்டையில் சசி போட்டு, ரிஸ்யு பேக்கிற்குள் பாம்பை போட்டு ஆட்டோவிற்குள் கொண்டு போனான்.

நானும், அம்மாவும், சசியும், பாம்பும், கோவிந்தன் அண்ணனும் ஒட்டோவுடன் ஹொஸ்பிட்டல் நோக்கிப் பறந்தோம்.

நன்றி - நூலகத்திட்டம்



கிருஸ்ணன் கோயில் தாண்டி, வெள்ளை மணல் முச்சந்தி கடந்து, கெம்பஸ் தாண்ட பாம்புப் புற்றொன்று மண்மூடைகளுக்கும் முட்கம்பி வேலிகளுக்கும் நடுவே தோன்ற ஆரம்பித்தது. புற்றுக்களை நினைக்க பாவமாகவும், சிரிப்பாகவும் இருந்தது. பாவம் கறையான்கள் பாம்புப் புற்றுகளுக்காக. கறையான்கள் சமூக வாழ்க்கைப் பிராணிகள் சிறுக சிறுக, பிற்சொண்டால் மண்பொறுக்கி, சொட்டு சொட்டாய் உமிழ்நீர் கக்கி புரட்டி தங்கள் ராஜ்ஜியங்களை நடாத்த புற்றுக்கள் கட்டும். தங்கள் ராஜ்யபரிபாலனங்களை மனைவிகளோடும், பிள்ளைகளோடும் இன்பமாய் நடாத்திக் கொண்டிருக்கையில், புற்றுக்கள் பாம்புகளால் ஆக்கிரமிக்கப்பட்டு கறையான்கள் துரத்தப்படும்.

இந்த நெடு வீதியெங்கும் புற்றுக்கள் இவ்வாறு தான் உருவாக்கப்பட்டதாக்கும். இப்போது சில்லூறிகளின் சத்தத்தையும், எங்களையும் தவிர அந்த வீதியில் புழு, பூச்சி கூட இல்லை. ஹொஸ்பிட்டல் போய்ச் சேர்ந்த உடனே 'கொமன் கிறய்ட் கடிச்சது' என்று டொக்டரிடம் சொன்னால், அதற்குரிய அன்ரிவெனம் சீரத்தை, டொக்டர் ஒரு வயலுக்கு 10 மில்லி லீற்றர் சேலைன் அல்லது துாய நீருடன் 10 வயல் கலந்து அம்மாவுக்கு ஒரு ஊசி போட்டால் அம்மா உடனே உயிர் பிழைத்து விடுவார். அதற்கு விரைவாக ஹொஸ்பிட்டலுக்கு போக வேண்டும். ஆனால் விரைவாக போக இயலாதே. நூறு மீற்றர் துாரத்திற்கு முன்னால் புற்றுக்கள் கட்டி நேரான வீதியில் வைத்திருக்கிறதால், குண்டும், குழியும், பள்ளமும், மேடும், கல்லும், கரடுமாயிருக்கிற இந்த கிளைக்கப்பட்ட 'பை' ரூட்டால, நூறுமீற்றருக்கு பதிலா ஒன்றரை கிலோ மீற்றர் ஓட வேண்டும்.

பத்து செகண்ட்ல கடக்கிற துாரத்தை பத்து நிமிசம் செலவாக்கி கடக்க வேண்டும். கடக்கின்ற நேரத்திலே கூட எவ்வளவு பிரச்சினைகள். இப்படித்தானே அந்த தென்னை ஆய்வு நிலையம் இருக்கின்ற ஊரில் நள்ளிரவில் பாம்பு கடித்தவரை மாட்டு வண்டியில் ஏற்றி லாந்தர் விளக்குடன் வந்த போது, பாம்பு கடிபட்டவருடன், அவரை ஏற்றி வந்தவர்கள் எல்லோரும் சேர்ந்தல்லவா புற்றுக்குள்ளிருந்து சத்தமாய் நெருப்பாய் சீறிவந்த விசத்தால் கொத்துப்பட்டு செத்தார்கள்.

இன்னொரு முறை இதே மாதிரித்தானே அந்த புற்றுக்கு முன்னால் நள்ளிரவில் பிரசவ வேதனையால் மாட்டு வண்டியில் துடித்துக் கொண்டிருந்த தாயை பாம்புகள் கொத்தி தாயும், சேயும் பரலோகம் போக சுகப் பிரசவம் நடந்தது. இப்படித்தானே எனது கெம்பஸின் தெற்குப்புறமாக பதினேழு கிலோமீற்றர் தொலைவிலுள்ள அந்த ஆதார வைத்தியசாலையின் மேற்கு புறமாகவுள்ள படுவான்கரையிலுள்ள கிராமங்களிருந்து இரவு நேரத்தில் பாம்புகள் தீண்டி, மாட்டு வண்டி கட்டி ஹொஸ்பிட்டலுக்கு விரைபவர்கள் இடையிலுள்ள ஒரு பாம்பு புற்றுக்கு முன்னால் இரண்டு மணித்தியாலங்கள் காக்க வைத்து, புடையன் கடித்தால் இதயம் பாதிக்கப்பட வைத்தும், வளலை, நாகமானால் நரம்பு தொகுதி பாதிக்கப்பட வைக்கப்பட்டும், விசம் பரவச் செய்யப்பட்டும் கொல்லப்படுகிறார்களே.

ராஜாவினால் வளர்க்கப்படும் இந்த ராஜநாகப் புற்றுக்களைப் பற்றி உலகத்தில் எத்தனை பேருக்கு தெரியும்? உலகிலே இதைவிட மிருகத்தனம் வேறு என்ன இருக்கிறது? இலங்கையில் ராஜநாகங்கள் இல்லை என்று யார் சொன்னது. நான்கு குடும்ப விசப்பாம்புகளுக்கு 93ம் ஆண்டு, 49ம் இலக்க சட்டத்தில் பாதுகாப்புக் கொடுக்கப்படவில்லை.

ஆனால் ராஜ பாம்புகளுக்கோ 82ம் ஆண்டு சட்டத்தால் ராஜாக்களாகவும், கடவுளாகவும் ஆகும் வல்லமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு, விரும்பிய நேரத்தில் உயிர் கொடுத்து எடுப்பதால் ராஜாக்களும், கடவுள்களுமாகி-றார்கள். நாகராஜாக்கள் வணங்கப்படுவதும் உண்டு. பாம்புகள் இராக் கால பிராணிகள்.



பாம்புகள் ராஜ்ஜியத்தில் பாம்புகள் சிறு குழுக்களாக ராஜாங்கம் அமைத்து, இரவு வேளைகளில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கை அவைகளாகவே உருவாக்கிக் கொள்ளும். ஆபத்து, அவசரத்திற்கு புற்றுக்கு அருகால் போனாலும் கொத்தவும் செய்யும்.

இப்போது புற்றுக்கு நூறு மீற்றர் முன்னால் முதலாவது களிமண்மூடை கும்பத்திற்கு முன்னால் ஓட்டோ நிற்க, நான் லாந்தருடன் இறங்கி முன்னால் நடக்கிறேன். கோவிந்தன் அண்ணன் ஹெட்லைட்டை அணைத்து விட்டு மெல்ல மெல்ல எனக்கு பின்னால் ஓட்டோவை ஓட்டி வருகிறார். உண்மையில் இப்படிச் செய்யக் கூடாது. முதலில் லாந்தருடன் போய் விசயத்தை சொல்லி, அடையாள அட்டை காட்டி, சந்தேகம் தீர்த்த பின்தான் ஓட்டோ வர வேண்டும். அவசரம் என்றதால் எனக்குப் பின்னால் ஓட்டோ வருகிறது. இது கோவிந்தன் அண்ணனின் ஆளுமை. புற்று நெருங்க நெருங்க பயமாக இருந்தது.

ஆட்டோவை நிறுத்தி விட்டு கோவிந்தன் அண்ணன் வந்தார். லாந்தரை என்னிடமிருந்து வாங்கி புற்றுக்கு சற்று தள்ளி நின்று ஏதோ ஒரு மொழியில் கூப்பிட்டார். ஒரு பாம்பும் வெளி வரவில்லை. கூப்பிட்டது தான் மிச்சம். ஒரு வேளை வந்திருப்பது கீரியென்றும் பாம்புகள் நினைத்திருக்கலாம். ஆனால் கீரிகளுக்கும், கிரிகளுக்கும் வித்தியாசங்களை பாம்புகள் இலகுவில் உணர்ந்து கொள்ளும்.

அம்மாவ இன்னும் கொஞ்ச நேரத்தில கொண்டு போக வேணும்' என்று நான் கோவிந்தன் அண்ணனை அவசரப்படுத்தி-னேன். இந்த நாட்டில் விசப் பாம்புகள் நான்கு குடும்பங்கள் தான் என்று படித்திருக்கிறேன் அவைகளை எனது டிப்பார்ட்மென்ட மியுசியத்திற்காக சேகரித்தும் இருக்கிறேன். இந்த பாம்புகளைப் பற்றி தலைநகரின் அந்த புகழ்பெற்ற மருத்துவக் கல்லூரியில் தானே விரிவாக அறிந்தேன். ஒரு நாள் அம்மாவை கொத்திய சாதிப் பாம்பின் தலையை வெட்டி, அதனை பொட்டாசியம் ஐதரொட்சைட்டில் போட்டு அவித்து, அதன் விசப் பல்லை எடுத்திருக்கிறேன். மீன்முள்ளால் செய்த பூமறாங் மாதிரி இருக்கும். நாகப் பாம்புக்கு கொஞ்சம் நீளம், புடையனுக்கு கொஞ்சம் வளைவு அதிகம். பாம்புகளிலும் எவ்வளவு வடிவான பாம்புகள். எவ்வளவு நிறமான பாம்புகள். பாம்புகள் உண்மையில் உருண்டு,நீண்டு, வளைந்த ஆயுதங்களை எதிரிகளை கொல்லுவதற்கு நிறைய வைத்திருக்கின்றன. சிவப்பாய், சிறிதாய் கறுப்பு வரி கொண்டு ஒரு பாம்பு. மண்ணிறமாய், நெளிந்து சுருண்டு, விலாங்கு மீனின் வாலில் புலித் தோல் கறுத்தப் புள்ளி கொண்டு ஒரு பாம்பு. முக்கோணத் தலையுடன், நீண்டு கட்டையாகி, ஒடுங்கும் மஞ்சள் தோலில் ஒழுங்கற்ற சதுரங்களை பக்கவாட்டில் கறுப்பும் வெள்ளையும் கொண்டு ரின்ற் பண்ணி ஒரு பாம்பு, கரண்டித் தலையுடன், மண்ணிற, சுங்கான் மீனின் பள பள தோலில் இளங் கறுப்பு வரி கொண்டு ஒரு பாம்பு, மரத்திலேயிருந்தால், இலையா, கிளையா பாம்பா எனப் பிரித்தறியமுடியாத, பச்சை நிறத்தில் இளமஞ்சள் கலந்து மூக்கிலே குழி கொண்டு ஒரு பாம்பு.

இதுவரையில் நான் பார்த்த படத்தில், எனக்குப் பிடித்த படம் பாம்பு எடுத்த படம் தான். காணக் கண்கோடி வேண்டும் என்பார்களே அது இது தான். நாகம் எடுத்த படம். நாகத்திற்கு விஞ்ஞான(லத்தீன்) பெயர் நஜா நஜா நஜா. நாகராஜாவின் சுருக்கம் என்னவோ. இலங்கையில் படம் எடுக்கும் ஒரே ஒரு பாம்பு நாகம்தான். இலங்கையில் நட்டப்படாமல் இப்போதெல்லாம் படம் எடுப்பதும் இது மட்டும்தான்.

ஸ்..ஸ்.. எனச் சீறி நெருப்புக் கண்பார்வை வீசி, அங்குமிங்குமாய் பார்த்து ரெட்டை நாக்கு வெளி எறிந்து, ரொட்டிக் கல்லில் வைத்து போத்தலால் நசிபடத் தொடங்கிய பிசைந்த கோதுமை மாதிரி தலை விரியவைத்து படமெடுத்தாடும். கண்ணாடிப் பாம்புக்கே கண்ணாடி இல்லாத போதும், எல்லோரும் கண்ணாடியை முன்னால் போட, இது வளைந்து சுருண்டு, எழுந்து வளைந்த கறுப்புக் கண்ணாடியை பின்னால் போடும். முள்ளில்லாத சப்பாத்துக்கள்ளி, நாகதாளி வடிவ படம் எடுக்கும். படத்தின் மையப் பகுதி தட்டையுமில்லாமல் உருண்டையுமில்லாமல், நீழமாய், சின்ன கறுத்த பெல்ட்டினால் மேலிருந்து கீழாகதைக்கப்பட்டிருக்கும். படத்தின் விளிம்பி லிருந்து மையம் வரை மூன்று நிரலில் நான்கு ஓரங்களிலும் கடும் கறுப்பும், சிவப்பும் நடுவில் இளம் சிவப்பும் கொண்ட சரிந்த செவ்வகத்திலான செதிலால் இழைக்கப்பட்டிருக்கும்.

சரிவகமோ மேலிருந்து கீழாக பருமனில் குறையும். முன்னும், பக்கமும் ஒரே நேரம் பார்க்கும் தீச் சட்டிக் கண்கள். இரு கண்களுக்கிடையே மேற் சொண்டின் மூக்கின் மேல், முதலைத் தோலில் செதிலால் செய்த பெரிய செதில்கள் மூட, இரட்டை நாக்கை நீட்டி, சொண்டைத் திறந்து வாயை ஆவென்று, சிவத்த உதடுள்ள சின்னக் குழந்தையின் வாயை நினைவுபடுத்தும். நாக்கு கீழே கறுப்பாய் ஒரு குழி. தொடங்கி தொண்டைக்குள் திறந்து, ரெட்டை நாக்கிற்கு அருகிலும் இரு குழிகள் திறக்கும். மேற் சொண்டிலோ விசப் பல்லு இரண்டையும். முயல் போல் ஒளித்து வைத்திருக்கும். நாகம் வாயைத் திறப்பதே ஒரு அழகுதான். அழகு என்பது நிறமா? நிறங்களின் சேர்க்கையா? சமச்சீரா? அழகிலும் ஆபத்திருக்கிறது. ஆபத்திலும் அழகிருக்கிறது.

பாம்புகள் வேண்டுமென்றே கொத்தி மனிதனை கொன்று வாழ்வை முடிப்பன அல்ல. பாம்புகள் வாழ்வுகள் கொடுப்பவை. இன்றும் அலிக்கம்பையிலும், தம்பானையிலும், வேறு பகுதிகளிலும் பாம்புகள் தானே மனிதக் குடும்பங்களை ஊட்டுகின்றன. பாம்புகள் நடுத் தெருவில் நடனமாடாவிட்டால் எத்தனை குடும்பங்கள் தெருவில் ஆடும். பாம்புகள் தானே கேடு செய்யும் பூச்சிகளையும், கிழங்குகளை அகழந்து, விவசாயத்தை கெடுக்கும் எலிகளையும், அகிழான்களையும் அழித்து சூழல் சமநிலையைப் பேணுகின்றன. நடக்கும் போது மிதித்தால், படுக்கும் போது கால்கள் ஆடினால் தனது எதிரி என நினைத்து பயந்து பாய்ந்து கொத்தி கொழுவி ஊசி ஏற்றும். நான்கு சாதிப் பாம்புகள மட்டும் தான் மரணம் ஏற்படுத்தக் கூடியவை.

பாம்புகள் கடித்தால் மரணம் என்றில்லை. கொடுக்கப்படும் பிழையான முதலுதவிகளும், அதுபற்றிய அறிவுக் குறைவுகளுமே பாம்புகள் ஆளை முடிக்க உதவுகின்றன. உலகிலே பாம்புக்கடி விதம் இங்கேதானாம் அதிகம்.ஒரு நாளைக்கு இருவர் சாகிறார்களாம். இருவர் மட்டுமா.? என்ன பொருத்தமான ஒப்பீடு. பாம்புக்கு நாங்கள்தான் கவனமாக இருக்க வேண்டும். பாம்புகள் நீண்டு, நெளிந்து படமெடுத்து மட்டுமா இருக்கும்?

காக்கி நிறத்தில் ஒரு பாம்பு, கரும் நீல நிறத்தில் ஒரு பாம்பு கடும்பச்சை நிறத்தில் ஒரு பாம்பு, அதில் வரிகொண்டு ஒரு பாம்பு காட்டில் ஒரு பாம்பு, வள நாட்டில் ஒரு பாம்பு கொடும் பாம்புகள் எந்நிறமிருந்தாலும் கொத்துதலில் யாவுமவை ஒரே தரம்கொண்டு கோரப்பல் விசத்தால் மனித வாழ்வை முடித்துவிடுவதன்றோ? என்று பாரதி இன்றிருந்தால் பாடியிருப்-பானோ? என்று யோசிக்கிறேன்.

இப்போது, மண்மூடைப் பொந்துக்குள்ளிருந்து ஊர்ந்து தலையில் தொப்பியால் படமெடுத்து கை, கால் முளைத்து பச்சையாய் எங்களை நோக்கி ஒரு பாம்பு வருகிறது. அப்போது வேகமாக காற்றடித்து லாந்தரின் சுடர் அணையப் போகும் கடைசி நேர ஜோதியின் வெளிச்சத்தில் அம்மா தனது நெஞ்சை நிமிர்த்தி வாயில் நுரை தள்ள கண்கள் மேலே சொருக, உடம்பு நீலம் பாரிக்க தனது கடைசி மூச்சை விட்டார். இந்தப் பௌர்ணமி வெளிச்சத்தில் அம்மாவைக் கொத்திய பாம்பு அமைதியாய் ரிஸ்யு பேக்கிற்குள் கிடந்தது. அம்மாவைக் கொன்ற பாம்புகளில் ஒன்று இப்போது கதைக்கத் தொடங்கியது.

அம்ரிதா ஏயெம்

நன்றி - நூலகத்திட்டம்






# தலைமறைவு வாழ்க்கை

றெஜி சிறிவர்த்தன

## நினைவுக் குறிப்புகள் – 3

என்னுடைய இளமைக் காலத்தில் நான் மிகுந்த இலட்சியப் பற்றுறுதியுடன் ஏற்றுக் கொண்ட செவ்வியல் மார்க்சியம் மீது இன்று எனக்குள்ள சண்டைகளில் ஒன்று அதன் வர்க்கம் தொடர்பான கோட்பாடு பற்றியதாகும். உற்பத்தி சாதனங்களின் உறவுகளை அடிப்படையாக கொண்ட இக்கோட்பாடு மிகவும் ஆழமற்ற பொருளாதாரவாதத் தன்மை கொண்டது. ஒரு குறிப்பட்ட சமூகத்தில் அல்லது குறிப்பிட்ட காலத்தில் நிலவும் வெவ்வேறு வகையான பொருளாதார, கலாசார, அதிகார அடுக்குகளை-யும் அவை எந்தெந்த அளவுகளில் வேறுபடுகின்றன அல்லது ஒத்துப் போகின்றன என்பதையும் புரிந்து கொள்ள இதை விடவும் ஆழமான சிக்கலான ஒரு கோட்பாட்டு-ருவாக்கம் அவசியம் என்று நான் கருதுகிறேன். மார்க்சும் அவர் வழிவந்தவர்களும் உற்பத்தியிலிருந்து அன்னியமாகச் செல்லும் உறவுகள் பற்றியும், அவற்றின் சமூகம் மீதான தீர்மானகரமான தாக்கம் குறித்தும் மிகுந்த கவனிப்புடன் இருந்தார்கள் என்று சொல்வது உண்மை தான். ஆனால் சமூகத்தின் முழுமை பற்றி இந்தக் கோட்பாடு நிலையில் நின்று வியாக்கியானப்-படுத்துகையில் உண்மையான உலகு பற்றிய புரிதலை மட்டுப்படுத்தும் அளவுக்கு பல விடயங்களை வெளியொதுக்கி விடும் நிலைமை ஏற்படுகிறது. மார்க்ஸ் பொருளாதார அடிக்கட்டுமானத்தையும், அரசியல் மற்றும் அறிவுத்துறை மேல்கட்டுமானத்தையும் பற்றிப் பேசும் போது இத்தகைய கட்டிடக்கலை உருவகமொன்றைத் தெரிவு செய்வதற்கு, 19ம் நூற்றாண்டின் முதலாளிய குட்டி முதலாளிய வர்க்கங்களின் வீடுகளின் அமைப்பு காரணமாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகின்றது. அன்றைய இவர்களின் வீடுகளில் வேலைக்காரர்கள் கீழ்த்தட்டிலிருந்து கொண்டே மேல் தட்டிலிருந்த எஜமானர்களுக்கும், எஜமானிகளுக்கும் தொட்டாட்டு வேலை முதல் அறிவுத்துறை செயற்பாடுகள் வரை ஆற்றி வந்திருந்தனர்.

நான் பிறந்தது போன்ற ஒரு காலனித்துவ நாட்டில் ஆட்சி மொழியின் ஆதிக்கம் ஒருவரின் தகமைக்கான குறிகாட்டியாக இருந்து வந்திருக்கிறது. இந்த மொழி ஆதிக்கம் எல்லா வேளை-களிலும் பொருளாதார நிலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கொள்ள முடியாது. என்னுடைய கதையை எடுத்துக் கொண்டால், வர்க்கங்-களிடையான இடைக்கோடாக அமைந்த (வெறும் பொருளாதார அர்த்தத்தில் இந்த வர்க்கங்கள் பற்றி நான் சொல்லவில்லை.) ஒரு பிரதேச மொழி கலாசாரத்தின் மத்தியில் நான் வளர்ந்து வந்தேன். இந்த நிலைமையின் இரட்டைத் தன்மையான பாரம்பரியம் குறித்து, தத்துவார்த்த ரீதியில் அல்ல, (கதே அவர்களை மேற்கோள் காட்டி இந்த தத்துவார்த்த போக்கை லெனின் அடையாளம் கண்டிருந்த போதும் துரதிர்ஸ்டவசமாக எல்லா வேளைகளிலும் அவர் அதைப் பின்பற்றவில்லை.) மாறாக எனது வாழ்வனுபவத்தில் நான் பெற்ற உளப்பதிவுகளினூடாக விளக்குகிறேன்.

நான் அப்போது மிகவும் சிறியவன். கிட்டத்தட்ட ஐந்து வயதிருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு நாள் அப்பா என்னை கோட்டைக்குக் கூட்டிச் சென்றிருந்தார். எதற்காக என்பது இப்போது ஞாபகத்தில் இல்லை. கோட்டையிலிருந்து பின்னர் தனது தொலைத் தொடர்புச் சேவை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து புகையிரதத்தில் என்னை அவரது அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒரு சிற்றூழியருடன் வீட்டிற்கு அனுப்பி வைத்தார். சாரம் அணிந்திருந்த இந்தச் சிற்றூழியர் நிச்சயமாக ஒரு மூன்றாம் வகுப்பு டிக்கட்டையே எடுத்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. நான் இதற்கு முதல் ஒரு போதும் ஒரு மூன்றாம் வகுப்புப் பெட்டியில் ஏறியதில்லை. இது எங்களைப் போன்ற கீழ் மத்திய தர வகுப்பினரிடையே தங்களை விட குறைவானவர்களுக்கு எம்மைப் பற்றி "மேலானவர்கள்" என்ற உணர்வினை ஏற்படுத்துகிறதற்கு பயன்பட்ட ஒரு அம்சமாகும். சிறுவர்களும் நாய்களைப் போல பெரியவர்களின் நடத்தைகளைப் பார்த்து சிறுவயதிலேயே இந்த வர்க்க வேறுபாடுகளை அடையாளம் கண்டு கொண்டு விடுவர். வீடு வரும் வரை நான் மிகுந்த அவமானத்தால் குறுகிப் போய் இருந்தேன். (வர்க்கப் பிரக்ஞையை உருவாக்குவதில் இந்த அவமானம் தான் எவ்வளவு சக்தி வாய்ந்த உணர்ச்சியாக இருக்கிறது!) வீட்டுக்கு வந்ததும் என்னுடன் வந்த சிற்றூழியர் வெளியே நின்று கொண்டிருக்கையில், வீட்டுக்குள் போய்க் (சிங்களத்தில்) கத்தினேன். "இவன் என்னை மூன்றாம் வகுப்பு பெட்டியில் கூட்டி வந்து விட்டான்", அம்மாவும் அந்த சிற்றூழியரும் பெரிதும் சங்கடப்பட்டுப் போனார்கள்.

> **வீட்டுக்கு வந்ததும் என்னுடன் வந்த சிற்றூழியர் வெளியே நின்று கொண்டிருக்கையில். வீட்டுக்குள் போய்க் (சிங்களத்தில்) கத்தினேன். 'இவன் என்னை மூன்றாம் வகுப்பு பெட்டியில் கூட்டி வந்து விட்டான்'.**

ஆனால் எனக்கு பதினொரு வயதான போது இந்த வர்க்கப் பதிவு இல்லாமல் போய் விட்டது. அப்பா ஓய்வு பெற்று விட்டார். அவரது ஓய்வூதியத்தில் வாழும் நிலை. எங்கள் குடும்ப வருமானம் பெரிதாக குறைந்து விட்டது. ஒரு காலத்தில் நான் எனது தங்கையுடன் பாடசாலைக்கு கண்டியில் போனேன். பிறகு நடக்க வேண்டி வந்தது. பிறகு நாங்கள் ரத்மலான்னக்கு வீடு மாறியதும் நான் ரெயிலில் போகவேண்டியிருந்தது. அதுவும் ஒரு மூன்றாம் வகுப்பு பெட்டியில். அப்போது நான் எதையும் இழந்து விட்ட உணர்வில்லாமலே பயணம் செய்தேன்.

ஆனால், எனது ஏனைய ஆரம்பகால அனுபவங்களில் கூவனத்துக்குரியவை மொழி அதிகாரத்துக்கான ஒரு குறியீடாக இருப்பதை வெளிக்காட்டுபவை-யாக உள்ளன எனலாம். என்னுடையது போன்ற குடும்பத்-தவர்களின் பிள்ளைகளை விட காலம் தாழ்த்தியே நான் பாடசாலைக்கு அனுப்பப்பட்டேன்.

இதுபற்றி இப்போது யோசிக்கையில் பொருளாதாரமே இதற்கான காரணமாக இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால், அப்பா எனக்கு வீட்டில் வைத்து படிப்பித்தார். அதனால் பாடசாலைக்குப் போக முன்பே எனக்கு நன்றாக வாசிக்கக் கூடிய திறமை ஏற்பட்டிருந்தது. இதனால், எனது முதலாவது வகுப்பில் (இது ஒரு பெண்கள் பாடசாலை) நான் எல்லோரதும் ஆச்சரியத்துக்குரிய ஒரு அதிசயமாக இருந்தேன். என்னால், நன்றாக வாசிக்க முடியும் என்பதைக் கேள்விப்-பட்டதால் நான் பல்வேறு வாசிப்புப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டு சோதிக்கப்-பட்டேன். இப்படிச் சோதித்தவர்-கள் எங்களுக்கு மேல்வகுப்பி-லிருந்த மாணவிகள். அவர்களது புத்தகங்களை நான் இலகுவாக வாசித்ததால் இன்னும் இன்னும் உயர்வகுப்பு புத்தகங்களை வாங்கிவந்து எனக்கு வாசிக்கும்படி தந்தார்கள். இந்தச் சோதனை புதிய உயர்வகுப்பு பாடப்புத்தகத்தை நான் வாசிக்கும் வரை நீண்டது. அவற்றில் எந்தளவுக்கு எனக்கு விளங்கியது என்று தெரியாது. ஆனால் சொற்களை உச்சரித்து வாசிப்பதில் எனக்குச் சிரமம் இருக்கவில்லை. இந்த மாணவிகள் ஆசிரியரிடம் போய் இதைச் சொல்லவும், மதிய உணவுக்குப் பிறகு நான் எமது வகுப்புக்கு அடுத்ததாக இருந்த வகுப்புக்கு அழைக்கப்பட்டேன்.

அங்கிருந்த ஆசிரியர் தன்னிடமிருந்த புத்தகத்தைத் தந்து அதை உரத்து வாசிக்கும்படி கூறினார். நான் அதை வாசித்து முடித்ததும் அந்த ஆசிரியர் சொன்னார்.

"கடவுளே எனது மாணவி-களும் இப்படிப் படிக்க வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது.

(இன்னும் வரும்)

## காவு கொடுத்தவர்கள்

சமாதானத்தின் பேரால்
யுத்தம்!

யாரெல்லாம் இறந்தார்களா?
எவர் எஞ்சினார்கள்?
என்ன நடந்தது?
எதுவுமே அறியமாட்டோம்.

மீட்க முடியாமல்
அடகாய்....... அறுதியாய்.......
போன வாழ்க்கை!

தருமரின் சாத்வீகம்
திரௌபதியின் கௌவரம் குலைந்தது
பாண்டவரை வனத்திற்கனுப்பியது

உயிர் தெறிக்க
ஓடி வந்தார்கள்
குழந்தைகள் -
சலனமற்று மழலை பேச
உயிர் வலிக்க
ஓடி வந்தார்கள்

வேரற்றுப் போனவர்களே!
இனி எங்கு போவீர்!

"நானும் அவனும்,
எனதும் அவர்களதும்
கட்சி கட்டின
பொருது நின்றன

எது நான்? எது அவன்?
மெய்ஞானமற்று
கல்வியும் நாகரீகமும்
காணாமற் போயின
(மனித) மனம் தொடா மதமும்
மனிதத்தைப் போதிக்கவில்லை!
"தற்காத்துக் கொள்ளும்
வன்முறை மட்டும்
தலைவிதியாய்போனது"

சாம்பராய்ப் போன
தேசத்தின் மீது
'சுதந்திரம்' வாழ்ந்திருப்பதாக
இன்றைவரும் நம்பவில்லை!

நதிக்கரை நாகரீகம்
இன்னமும் தொடர்கிறது
ஆன்ம நதிகள்
திரை திரும்பவேயில்லை!

கை கொடு நண்ப!
பேதம் மறந்து
பின்னப்பட்டவர்க்காய்
ஏதாவது செய்ய வேண்டும்.

தொடை தேய கல் குத்த
நடை சுமந்து போனவர்
சிறு துரும்பாவது
எடுத்துப் போட வேண்டும்.

இரத்தமும் ஏழ்மையும் பார்த்து
முகம் திரும்பிப் போனவர்க்குச்
சொல்லுங்கள்!
நீங்களும்
இரத்தமும் தசையும் தான்
காருண்யமென்ற செல்வமில்லா
ஏழைகள் தானென்று

உயிர் வலிக்க அவலமானரிடமும்
சொல்லுங்கள்!
சுதந்திரம் கூட
ஒருவகைச் சுயநலம் தானென்று!
இரத்தமும் தசையும் தாண்டி
உடைமையும் உறவும் தாண்டி
உண்மையைப் பார்க்க வேண்டுடென்று!

பதப்படுத்தப்பட்ட வற்புறுத்தப்பட்ட
மனோ வளர்ச்சிகளுடன்
பின்பற்றல்........ அடங்கிப் போதல்.....
ஒத்துப் போதல்.........
எனும் மரபொழுக்கங்களுடன்
மனிதம் -
மனிதத்தைக் காவு கொண்டது

கை கொடு நண்ப!'
சிதறிப் போன மனங்களின்
ஒருமைக்காய்........
முடிந்ததைச் செய்ய வேண்டும்
பிளவுபட்ட உணர்வுகளில்
சேர்க்க முடிந்ததைச்
சேர்க்க வேண்டும்!

– செல்வமனோகரி

நன்றி - நூலகத்திட்டம்



தமிழ் இனி 2000 மாநாட்டின் போது இடம்பெற்ற மைய நிகழ்வுகளோடு சமாந்தரமாக இடம்பெற்ற ஓர நிகழ்வுகள் இன்னும் சுவையானவை. இது பல்வகைப்பட்ட மன ஓட்டங்களையும், அதன் நிறப்பிரிகைகளையும் காட்டுவனவாக அமைந்தன. எனது பார்வைக்கு அகப்பட்டவற்றின் பதிவே இது.

-மு.பொ.

# ஓர நிகழ்வுகள்-2




"தமிழ் இனி 2000 என்கிற கும்பமேளா?" என்ற துண்டுப் பிரசுரம் விநியோகத்தைத் தொடர்ந்து, அ.மார்க்ஸ் குழுவினரின் இலக்கியச் சிற்றேடான "நிறப்பிரிகை" விற்பனையும் அங்கு நடைபெற்றது. அதையும் ஒருவர் அங்கே கொண்டு திரிந்து விற்பனை செய்தார். ஒன்றின் விலை ரூபா 20 ரூபா. நானும் ஒன்றை வாங்கினேன்.

'கும்பமேளா' துண்டுப் பிரசுரத்தையும் நிறப்பிரிகை இதழையும் ஒருங்குசேர ஆறுதலாகப் படித்தபோது புலம்பெயர் தமிழர்கள் பற்றிய நிறப்பிரிகையின் அளவீடுகள் தெரியவந்தன. முதலாவது எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும் விமர்சகர்களாகவும் இருக்கும் அதேவேளை அதிகாரம் உடையவர்களாகவும் புலம்பெயர் அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட பேராசிரியர்கள் மொழிபெயர்ப்பாளர்கள் என்கிற வகையைச் சேர்ந்த சேரன், சிவசேகரம், ஜெயபாலன், நித்தியானந்தன் போன்றோர் ஒரு வர்க்கம். அதேவேளை கோப்பை கழுவுகிற, தெருக்கூட்டுகிற புலம்பெயர் தமிழர்கள் ஒரு வர்க்கம். இவர்களில் சைவவேளாள மரபை, சாதியுணர்வை எதிர்க்கும் புத்திஜீவிகளாக இயங்கும் கலாமோகன், சக்கரவர்த்தி, சுகன், ஷோபா சக்தி, எக்ஸில், உயிர்நிழல் எழுத்தாளர்கள் போன்ற 'புரட்சிக்காரர்கள்' இன்னொரு வர்க்கம்.

முதல் வர்க்கத்துள் சிவசேகரம் ஒருவர் தான் இடதுசாரிச் சிந்தனையுள்ள ஒரு மார்க்சிஸ்ட் என்று நிறப்பிரிகை அ.மார்க்சிஸ்ட் குழுவினரால் முத்திரை குத்தப்படுகிறார். ஏனையவர்களுக்கு "அந்த அரசியல் கிடையாது. தேசியவாதத்தை மட்டுமே முனைப்பாகக் கொண்ட இவர்களுக்கு தலித் இலக்கியம் குறித்தோ, ஆசிரியன் செத்துப் போனான் பிரகடனம் குறித்தோ, தேசியம் ஒரு கற்பிதம் என்கிற சிந்தனை குறித்தோ என்ன கருத்துக் கொண்டிருந்தனர் அல்லது இன்று தான் என்ன கருத்துக் கொண்டுள்ளனர்? எங்காவது இவை பற்றியெல்லாம் இவர்கள் வாய் திறந்ததுண்டா?" என்று நிறப்பிரிகைத் துண்டுப்பிரசுரம் கேட்கிறது. ("தேசியவாதத்தை மட்டுமே முனைப்பாகக் கொண்ட இவர்களுக்கு" என்று ஒரு வசனத்தை ஆரம்பித்து "என்ன கருத்துக் கொண்டுள்ளனர்?" என்ற விநோதமான பயனிலை வினா எழுப்பி தமிழையே தமக்கு ஒழுங்காக எழுதத் தெரியாது என்பதைப் பறைசாற்றும் இவர்களா 'புனிதங்களை உடைக்கும்' கோட்பாட்டாளர்கள் என்று நாம் கேள்வி எழுப்பினால் 'இது நமது சிறு தமிழாடல்' என்று தத்துவ முலாம் பேசுவார்களோ என்னவோ!)

நிற்க, பேராசிரியர் சிவசேகரம் தேசியத்தை ஒரு கற்பிதம் என்று நினைப்பவரா? உண்மையில் இன்றுள்ள மார்க்சீய எழுத்தாளர்களுள் தேசியத்தின் அவசியத்தையும் அதன் பங்களிப்பையும் உரிய முறையில் உணர்ந்து எழுதுவோரில் அவரும் ஒருவர் என்பதே எனது கணிப்பு. அதனால் தான் இன்றைய வரட்டு மார்க்சிஸ்டுகளில் இருந்து அவர் வேறுபடுகிறார். ஒருவேளை இதை அ.மார்க்ஸ் நிறப்பிரிகைக் குழுவினர் சரிவரப் புரிந்துகொண்டால் அவரையும் ஏனைய பேராசிரியர்களோடு சேறிட்டு தள்ளி விடுவார்களோ, தெரியாது.

ஆனால், இதோடு நிறப்பிரிகை தத்துவ வியாக்கியானங்கள் நின்றபாடில்லை. மேலும் மாதிரிக்கு சில: காலச்சுவட்டையும் சுந்தரராமசாமியையும் ஒரு பாட்டம் திட்டித் தீர்த்து விட்டு பின்வருமாறு நிறப்பிரிகைத் துண்டுப் பிரசுரம் கூறுகிறது.

"உலகத் தமிழ் இலக்கியம் என்கிற பொது அடையாளத்தை உண்டாக்குவதே தங்களின் முதன்மையான நோக்கம் என்கிற "தமிழ்இனி"ப் பிரகடனம் தனித்துவங்களையும், தனியடையாளங்களையும் வித்தியாசங்களையும் குழி தோண்டிப் புதைக்கும் முயற்சியாக உள்ளது சிந்திக்கத்தக்கது"

## தலித்தியம் போன்ற ஏனைய 'இசங்களும்' கற்பிதம் அல்லவா?

இவ்வாறு தனித்துவங்களுக்கும், தனியடையாளங்களுக்கும், வித்தியாசங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று பெரிதாக அழுத்தும் நிறப்பிரிகை, முன்னுக்குப் பின் முரணாக தேசியத்தை ஒரு கற்பிதம் என்று கூறுகிறது. ஏன் தேசியம் என்பது ஒரு இனத்தின், மக்கள் கூட்டத்தின் அடையாளம் இல்லையா? இதையேன் நிறப்பிரிகை மறந்தது? தேசியம் கற்பிதம் என்றால் தலித்தியம் உட்பட இன்னும் இவை போன்ற

> தேசியம் என்பது ஒரு இனத்தின், மக்கள் கூட்டத்தின் அடையாளம் இல்லையா? இதையேன் நிறப்பிரிகை மறந்தது? தேசியம் கற்பிதம் என்றால் தலித்தியம் உட்பட இன்னும் இவை போன்ற எல்லா வாதங்களும் 'இசங்'களும் கற்பிதம் என்று இன்னொருவர் கூறினால் அது பிழையாகுமா?

எல்லா வாதங்களும் 'இசங்'களும் கற்பிதம் என்று இன்னொருவர் கூறினால் அது பிழையாகுமா?

இல்லை, இல்லை, நிறப்பிரிகை எதை "உளறி"னாலும் அது சரியான கருத்தாகி விடும். அதேவேளை, நீங்கள் எந்தச் சரியான கருத்தைக் கூறினாலும் அது உளறலாகி விடும்! இதுதான் நிறப்பிரிகையின் மாயாஜால ரியலிஸமும், பிரதியின் மரணமும், தத்துவாசிரியரின் புத்துயிர்ப்பு போலும்.

இந்த விகடங்கள் நிறப்பிரிகைத் துண்டு பிரசுரத்தோடு மட்டும் நின்று விடவில்லை. நிறப்பிரிகை செப்ரெம்பர் இதழிலும் இதன் எச்சசொச்சங்கள் தொடர்கிறது.

நிறப்பிரிகை இதழில் ஷோபாசக்தி என்பவர் எழுதியிருந்த 'புலம்பெயர் தமிழ் இலக்கியம் - இருள்வெளி' என்ற கட்டுரையைப் படித்தபோது அதிர்ச்சி தான் ஏற்பட்டது.

ஏற்கெனவே நிறப்பிரிகைத் துண்டுப்பிரசுரம் புலம் பெயர் தமிழர்கள் பற்றிக் குறிப்பிடுகையில், மேற்குலக அரசுகளின் அங்கீகாரம் பெற்ற எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும், விமர்சகர்களாகவும் இருக்கின்ற பேராசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் என்கிற மேலோங்கிய வர்க்கம் என்றும் கோப்பை கழுவுகிற தெருக்கூட்டுகிற, கக்கூஸ் கழுவுகிற என்கிற கீழ்மட்ட வர்க்கம் என்றும் இரண்டாகப் பிரிக்கிறது. பின்னவர்களின் தியறிற்றிஷன்களாக ஷோபாசக்தி, சுகன், சக்கரவர்த்தி, எக்ஸில், உயிர்நிழல் குழுவினர் கொள்ளப்படுகின்றனர்.

புலம்பெயர் தமிழர்களின் ஒரு பகுதியினரை, 'கோப்பை கழுவுகிற, தெருக்கூட்டுகிற கக்கூஸ் கழுவுகிற' என்ற அடைமொழிகள் மூலம் நிறப்பிரிகை கீழ்மைப்படுத்திய போதும் அவர்களை வர்க்க ரீதியாக ஆரோக்கியப்படுத்துகிறதாகும் என்று ஆறுதல் அடையலாம் என்றால், அதையும் தவிடுபொடியாக்குவது போல் அமைந்திருக்கிறது ஷோபா சக்தி என்பவரின் நிறப்பிரிகைக் கட்டுரை. நிறப்பிரிகையால் அங்கீகரிக்கப்பட்ட தியறிற்றிஷனே தனது வர்க்க மக்களை காட்டிக் கொடுத்து (BE-TRAY) எள்ளி நகையாடுகிறார்.

'கோப்பை கழுவிறவங்களுக்கும், கக்கூஸ் கழுவிறவங்களுக்கும் என்ன இலக்கியம்' என்ற ரீதியில் அமைந்த அவரது கட்டுரை, தனிமை, அவமானம், கலாசாரம் என்கிற சிறு தலைப்புகளின் கீழ், அவர்களின் ஆதங்கங்கள் என்று தன் மன அவசங்களை அவர்கள் தலையில் கட்டி அடித்து அவமானப்படுத்துகிறது. 'அவமானம்' என்ற தலைப்பில் கோப்பை கழுவுதல், தெருக் கூட்டுதல், கக்கூஸ் கழுவுதல் என்பவற்றால் அவர்கள் அவமானப்படுவதாகவும் 'தனிமை' என்ற தலைப்பின் கீழ், தாம் அணைத்துக் கொள்ள, தமது காம இச்சைகளைத் தீர்த்துக் கொள்ள ஒரு தமிழணங்கு கிடைக்க மாட்டாளா என்று அவதிப்படுவது பற்றியும், குளிரிலும் பனியிலும் காய்வது பற்றியும், ஓரினச் சேர்க்கையிலும் கரமைதுனம் ஆகியவற்றில் ஈடுபடுவது பற்றியும் எள்ளி நகையாடுகிறது கட்டுரை.

இக்கட்டுரையைப் படித்து முடித்த போது நிறப்பிரிகையின் உள்நோக்கம் தெளிவாயிற்று.

'தமிழ் இனி 2000' க்கு ஆதரவு தந்த புலம்பெயர் தமிழ் மக்களை அது வேண்டுமென்றே அவமானப்படுத்தியிருக்கிறது. இதற்கேற்ப புத்திஜீவிகளாகவும், புரட்சிக்காரர்களாகவும், தியறிற்றிஷன்களாகவும் நிறப்பிரிகையால் முடிசூடப்பட்ட ஷோபா சக்தி போன்றவர்கள் நிறப்பிரிகையின் பகடைக்காய் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த லட்சணத்தில் தான் நிறப்பிரிகை தலித்தியம் பற்றிய சிறுக்தையாடல் செய்கிறதா?

புலம் பெயர் எழுத்தாளர்கள் பற்றி அறிமுகம் ஒன்றை, பிரான்சில் இருந்து வந்த சுசீந்திரன் அட்லான்டிக் ஹொட்டல் (AT-LANTIC HOTEL) முன்றலில் நடத்திய போது எனக்கு ஏனோ துயர் முட்டிற்று.

(இன்னும் வரும்)

## நான் தமிழ்ப்...........

செயற்திட்டத்தில், கொத்மலை செயற்திட்ட ஒருங்கிணைப்பாளராக சேவையாற்றினேன். அங்கு தமிழ் சிங்களத் தோட்டத் தொழிலாளர்களின் போஷாக்கு மட்டத்தை அதிகரிக்க பணியாற்றினோம்.

அவர்கள் அதிக குறைபோஷாக்கு தன்மையைக் கொண்டிருந்தனர். மொத்த தோட்டத் தொழிலாளர் தொகையில் இத்தொகை 50சதவீதமாகும். அங்கு குறைபோஷாக்குள்ள சிறுவர்கள் அதிகம் இருக்கின்றனர். சிவப்பு கோட்டிற்கு கீழ் தான் குழந்தைகளின் நிறை காணப்படுகின்றது. இக்குழந்தைகளுக்கும் மக்களுக்கும் அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. அதேவேளை, இப்பிரச்சினைகள் பற்றி எவரும் கதைப்பதும் இல்லை.

அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே அவுஸ்திரேலிய பிரஜைகள் ஆதரவு நிறுவனம் நடாத்திய பயிற்சி திட்டத்தில் ஒரு பயிற்சியாளராக பங்குபற்றும் வாய்ப்புக் கிட்டியது. இதில் தமிழ் சிங்களவர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர். அங்கு இனப்பிரச்சினைக்கு எப்படி தீர்வு காண்பது என்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இறுதியில், போர் எவ்வாறு, எந்த தீர்வுடன் நிறைவு பெற்றாலும் சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ள பரஸ்பர ஐயப்பாடு குரோதம், விரோதம் என்பவற்றை இல்லாமல் செய்வது எப்படி என்பதும், எவ்வாறு இவ்விரண்டு இனங்கள் மத்தியில் சுமுகத்தையும், ஒற்றுமையையும் கட்டியெழுப்புவது என்பவை பிரச்சினைகளாயுள்ளதை இனம் கண்டோம்.

**உங்களது எம்.எஸ்.சி. பரீட்சைக்கு "இலங்கைப் பெண்கள் சித்திரவதைகளிலிருந்தும் வன்முறைகளிலிருந்தும் மீள்வதற்கான அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கடைபிடிக்கும் உபாயங்கள்" என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கவுள்ளீர்கள். இவ்வாறான தலைப்பை தெரிவு செய்ய காரணம் எது?**

பெண்கள் என்ற ரீதியில் நாம் இந்த சமூகத்தில் பலவித வன்முறைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றோம். பெண்கள் இவ்வாறான பல அழுத்தங்களுக்குள்ளாகியிருப்பதை நேரடியாகவே அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதனால் இத்தலைப்பு குறித்து ஆராயும் தேவை உள்ளதென நான் கருதுகிறேன். இத்தலைப்பினூடு தமிழ்ப்பெண்கள் போரினால் அனுபவிக்கும் துன்பங்களைப் பற்றிய விடயங்களும் உள்ளடக்கப்படும்.

**தற்போது நீங்கள் முகாமைத்துவ உதவியாளராக (பாடசாலைகளில்) கடமையாற்றுகிறீர்கள். எமது நாட்டில் இனப்பிரச்சினையை சரியான கோணத்தில் அவதானிப்பதற்கு பாடசாலை கல்வி பாடத்திட்டங்கள் எவ்வாறான பங்களிப்பை நல்குகின்றன என கூறமுடியுமா?**

தற்போது சிங்கள மாணவர்களுக்கு தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. எமக்கிடையில் பரிமாற்றத்தை மேற்கொள்ள இது நல்லதொரு சந்தர்ப்பம். ஆனால், இத்திட்டங்கள் அமுல்படுத்தப்படும் முறையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

தமிழ்மொழியை கற்பிக்க நியமிக்கப்படும் சிங்கள ஆசிரியர்களுக்கு தமிழ்மொழி பற்றிய பூரண அறிவில்லை. புத்தகங்களைப் பார்த்து தமக்கு விளங்கும் விதத்தில் அவர்கள் படிப்பிக்கின்றனர். இதனால், தவறுகள் ஏற்படக் கூடும். இவ்வாறான தவறுகளை களைந்துவிட்டு சரியான வழிமுறையில் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

இதேபோல் தற்போது பாடசாலைகளில் வாழ்க்கைத் திறன் எனும் பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் மனிதாபிமான தொடர்புகளை கட்டியெழுப்ப இன மத, பேதமின்றி மனிதாபிமானத்தை நோக்க, சிந்திக்க வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால், எமது அடுத்த சந்ததி ஓரளவு தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து சாதகமான கோணத்தை கொண்டிருக்கும் என கருதக் கூடியதாவுள்ளது.

திலினா வீரசிங்க - ரத்னா

நன்றி - நூலகத்திட்டம்



# செம்மீன் தகழியின் மற்றொரு நாவல்

## தோட்டியின் மகன்

### - ஒரு நோக்கு

செம்மீன் திரைப்படம் மூலம் தமிழில் அறிமுகமான நாவலாசிரியர் தகழி சிவசங்கரப்பிள்ளை. அவரது இன்னொரு நாவலான தோட்டியின் மகன் தற்போது தமிழில் வெளியாகியுள்ளது. மலையாளத்தில் வெளியாகிய இந்நூலை தமிழில் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார் சுந்தரராமசாமி.

" 1951, 52ம் வருடங்களில் தான் தோட்டியின் மகனை மொழி பெயர்த்தேன். அப்போது வயது இருபது, இருபத்தியொன்று. நான் இதனை மொழிபெயர்த்த போது நிலவிய சூழலும் மனநிலையும் அன்றைய இளமைக்கால நினைவுகளும் இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கின்றன" எனக் கூறும் சுந்தரராமசாமியின் முதல் மொழிபெயர்ப்பு நாவலும் இதுதான்.

இந்நாவல் கேரள சமூகத்தில் வாழுகின்ற தோட்டி மக்களின் வாழ்க்கையைச் சித்திரிப்பதாக உள்ளது. குறிப்பாக கேரளத்தின் ஆலப்புழை பட்டணத்தில் வாழ்கின்ற தோட்டிகளின் வாழ்க்கை, அவர்களுடைய வறுமை, வாழ்வு நிலையாமை ஆகியவற்றை வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

நான்கு பிரதான பாத்திரங்கள் ஊடாக இந்நாவல் வழி நடத்தப்படுகிறது. முதலாவதாக இசக்கிமுத்து. இவன் தனக்குப் பின்னால் தனது மகனைத் தோட்டியாக வேணுமென்று கூறி தன்னிடமுள்ள வாளியையும், மண்வெட்டியையும் மகனிடம் ஒப்படைத்துவிட்டு இறந்து போகின்றான்.

இரண்டாவது பாத்திரமான இசக்கிமுத்துவின் மகன் சுடலை முத்து தான் தோட்டி என்ற நினைப்பையே அடியோடு வெறுக்கின்றான். அதனால் தனக்குப் பின் தனது பிள்ளை தோட்டியாகக் கூடாதென்பதையிட்டு எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டு அதனைச் செயலிலும் காட்டுகின்றான். இதற்கு உதாரணமாக தனது பிள்ளையை ஒரு கஸ்ரமும் தெரியாமல் பணக்கார வீட்டுப்பிள்ளை போல் வளர்ப்பதும், தனது பிள்ளை சமுதாயத்தில் ஓர் நல்ல நிலைக்கு வரவேணும் என்று அவனைப் பாடசாலையில் சேர்த்துப் படிக்க வைப்பதும். மகனுக்குத் தானொரு தோட்டியின் மகன் என்பது தெரியக் கூடாதென்பதற்காக அவனுடன் அமர்ந்து சாப்பிடுவதையே தவிர்ப்பதுமாக கதை மேற்கொண்டு போகும் விறுவிறுப்பான கதாபாத்திரமாக இவன் காட்டப்படுகின்றான்.




அடுத்து இவனது மனைவியாகிய வள்ளி. யதார்த்த சிந்தனையும் சுடலை முத்துவின் கொள்கைகளுக்கு ஈடு கொடுக்க முடியாத பாத்திரமாகவும் காட்டப்படுகின்றாள். இதற்கு உதாரணமாக சுடலைமுத்து தன் மகனைத் தொட்டு விளையாட முடியாமல் பின்வாங்கி நிற்கும் நேரத்தில் " எத்தனை பெரிய மனிசன் ஆனாலும் அவன் தோட்டிக்கு மவன்தான்" என்று அவள் அடித்துச் சொல்லுகின்றாள். அவள் தனது கணவனைப்போல் கனவுலகில் வாழாமல் யதார்த்தமாக சிந்திக்கின்றாள்.

அடுத்ததாக, மோகன். இவன் பிறந்து வளரும்போது பணக்கார வீட்டுப்பிள்ளை போல் வளர்க்கப்படுவதும் ஆனால், பள்ளிக் கூடத்தில் சக மாணவர்கள் இவனைக் கண்டால் மூக்கைப் பிடித்துக் கொண்டு ஓடுவதும், அதனால் அவனுடைய பிஞ்சு உள்ளம் படும் வேதனையும் வெகு தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றது. இதற்கு "நான் நாறறேன்னு சொல்லிக்கிட்டு எல்லாப் பசங்களும் மூக்கைப் பொத்திக்கிட்டு ஓடுறாங்கம்மா. அதனாலே எனக்கு வாசனைச் சோப்புப் போட்டுக் குளிப்பாட்டி, கனக்க பௌடர் போட்டு, புது நிக்கரும் சட்டையும் போட்டுவிடம்மா" என்று அவன் தனது தாயைப் பார்த்துக் கெஞ்சுவதும், இன்னொரு நாள் " தோட்டிக்கு மவனில்லையா, சொல்லிக் கொடுத்தா தலேலெ ஏறாதுன்னு சொல்லி வாத்தியார் அடிச்சாரம்மா. தோட்டியா இருக்க வேணாம்னு அப்பாட்டைச் சொல்லிடம்மா. அதுதான் அப்பா எங்கூட உக்காந்து சாப்பிடவே மாட்டேங்குறார்". என்று அந்தச் சின்னஞ்சிறு உள்ளம் வேதனையடையும் போது எமது வயிற்றையும் பிசைவது போல் ஓர் உணர்வு ஏற்படுகிறது.

"இந்நாவலைப் படிக்கும் போது விருப்பமும் வியப்பும் மனத்தில் அலைமோதின. வெளியுலகத்திற்கே தெரியாத ஓர் இருண்ட வாழ்க்கையினூடே எப்படி இவரால் இவ்வளவு சகஜமாகப் புகுந்து மன உணர்ச்சிகளை அள்ளிக் கொண்டு வர முடிகிறது! தகழி வெளிப்படுத்தியிருப்பது தோட்டிகளின் வாழ்க்கை சார்ந்த தகவல்களையல்ல என்பதையும், காலம் அவர்களது அடிமனங்களில் மூட்டும் நெருப்பு என்பதையும் உணர்ந்த போது மிகுந்த வியப்பு ஏற்பட்டது. கொடுமையில் மனம் கொள்ளும் கோபத்தில், ரத்தத்தில் உஷ்ணம் ஏறாமல் என்னால் அப்போதெல்லாம் தோட்டியின் மகனின் எந்தப் பக்கத்தையும் படிக்க முடிந்ததில்லை" என்று சுந்தரராமசாமி தனது முன்னுரையில் கூறுகின்றார். இது நூற்றுக்கு நூறு உண்மை.

தலித்தியம் பற்றி அக்கறையுடன் பேசப்படும் இன்றைய சூழலில் அன்றாட வாழ்க்கையை இன்னல்களுடனும், வேதனையுடனும் கழித்துக் கொண்டிருக்கும் இப்படியான மக்களும் சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள் எனும் உண்மையை தகழி தனது நாவலில் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தியிருக்கிறார். சுந்தரராமசாமி இலகுவான மொழிநடை மூலம் ஆலப்புழைபட்டணத்தை எமது கண் முன்னே கொணர்ந்து நிறுத்துகிறார்.

- நிலா

> தலித்தியம் பற்றி அக்கறையுடன் பேசப்படும் இன்றைய சூழலில் அன்றாட வாழ்க்கையை இன்னல்களுடனும், வேதனையுடனும் கழித்துக் கொண்டிருக்கும் இப்படியான மக்களும் சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள் எனும் உண்மையை தகழி தனது நாவலில் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

**தோட்டியின் மகன்**

மலையாளத்தில்
தகழி சிவசங்கரப்பிள்ளை
தமிழில்
சுந்தரராமசாமி

வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம்.
669 கே.பி.சாலை.
நாகர்கோவில் - 629001

விலை - இந்திய ரூபாய் 65|-




**பெண்**

பெண்கள் சஞ்சிகை
14 வது இதழ்

விலை:30.00

தொடர்புகட்கு:
சூரியா பெண்கள்
அபிவிருத்தி நிலையம்:
46/2, பழைய வாடி
வீட்டுத் தெரு,
மட்டக்களப்பு

பெண் சஞ்சிகை 14வது இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் இச்சஞ்சிகையானது வழமைபோலவே கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகளை உள்ளடக்கி வெளிவந்துள்ளது.

அத்துடன் பெண்களுக்கு எதிரான பாலியல் வல்லுறவு தொடர்பாக கிழக்குப் பிராந்திய பெண்கள் அமைப்பினால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதமும் அதற்கான பதிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பெண் சஞ்சிகை ஆற்றி வந்த பங்களிப்பினைப் போலவே தொடர்ந்தும் பெண்கள் பிரச்சினைகளையும், உணர்வுகளையும் வெளிக்கொணர்வதற்கான ஒரு நல்ல சஞ்சிகையாக விளங்கும் என்பது எமது நம்பிக்கை.

~ ஆர்ஸ்




**ஞானம்**

கலை இலக்கியச் சஞ்சிகை
சுடர் - 5

விலை:15.00

தொடர்புகட்கு:
T.Gnanasekaran
19/7,
Peradeniya Road,
Kandy.

ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை (சுடர் 5) வெளிவந்துள்ளது. கண்டியில் இருந்து வெளிவரும் இச்சஞ்சிகை தமிழ் இலக்கிய உலகிற்கு நல்ல வரவாகும்.

இவ்விதழில் ஈழத்து இலக்கிய சூழலில் நன்கு அறியப்பட்ட வ.ஆ.இராசரத்தினம் உடனான நேர்காணல் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் ராணி சிஜிதரனின் "மீண்டும் நளாயினி" சிறுகதை, சோலைக்கிளி, த.ஜெயசீலன், ஏ.இக்பால், ஜேம்ஸ் ஸ்டீபென்ஸ் இன் மொழி பெயர்ப்பு கவிதை உட்பட கவிதைகள், மற்றும் கே.எஸ்.சிவகுமாரனின் "நானும் என் கவிதைகளும்" கட்டுரை, கலாநிதி துரைமனோகரனின் "நான் பேச நினைப்பதெல்லாம்" போன்ற ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவந்துள்ளது.

இவற்றுடன் நூல் அறிமுகமும் இடம்பெற்றுள்ளது. இலக்கிய ஆர்வலர்களுக்கு நல்லதொரு சஞ்சிகை.

~ ஆர்ஸ்




**அரும்பு**

பொது அறிவுச் சஞ்சிகை
18 வது இதழ்

விலை:20.00

தொடர்புகட்கு:
M.Hafiz Issadeen
147, Main Street,
Dharga Town - 12090

இலங்கையில் பொது அறிவுக்கென்று, தனியே அதை மையமாக வைத்து தற்போது வெளிவரும் தனிச்சஞ்சிகை அரும்பு மட்டுமே என்று நினைக்கிறேன்.

இவ்விதழில், ஹிப்னோட்டிஸம் என்றால் என்ன?, உலகப் புகழ் பெற்ற கட்டடக் கலைஞர் பஸ்லுர் ரஹ்மான் கான், வங்காள விரிகுடா, சிறுகதை இலக்கியத்துக்கு பெருமை கூட்டிய "கீ த மோபஸ்ஸான், நவீன விமானங்கள் பற்றிய தகவல்கள், இன்டர்னெட் வழங்கும் இலவச நீண்ட தூரத் தொலைபேசிச் சேவைகள், ஹொலிவூட்டின் யுனிவாஸல் ஸ்ரூடியோவில் ஒரு நாள் எனப் பல கட்டுரைகளையும் மற்றும் பல தகவல்களையும் உள்ளடக்கி வெளிவந்துள்ளது.

மாணவர்களுக்கு பெரும் ஊக்கத்தையும், பொது அறிவையும் வளர்க்க உதவும் இச்சஞ்சிகையை மேல் வரும் விலாசத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

நன்றி - நூலகத்திட்டம்



# முதுகில் குத்துகிறது சரிநிகர்!

ஒரு மாநாட்டின் முடிவில் அம்மாநாட்டின் குறிக்கோள், தொனிப்பொருள், விவாதிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் சிலவற்றைத் தயாரித்து, பேராளர்கள் மத்தியில் அவற்றைச் சமர்ப்பித்து அவை தொடர்பாகக் கலந்துரையாடி, திருத்தங்கள் கூறப்பட்டால் அவற்றையும் உள்ளடக்கி மாநாட்டுப் பேராளர்களின் அங்கீகாரத்தோடு அத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வெளியிடப்படுதல் வழக்கம். மாநாடு தொடர்பான பின்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு இத்தீர்மானங்கள் ஒரு அடிப்படையாக அமையும். மாநாடுகள் தொடர்பாக அறிவுலகில் பேணப்பட்டுவரும் ஒரு பொது மரபு இது.

தமிழ் இனி 2000 உலகத் தமிழ் இலக்கிய மாநாடு பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்திருந்த ஏராளமான படைப்பாளிகள், விமர்சகர்கள், வாசகர்களின் பங்குபற்றலுடன் செப்டம்பர் 1, 2,3ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெற்றது. (விழா பற்றிய விபரங்களுக்குப் பார்க்கவும் சரிநிகர் 201 பக்.12)இம்மாநாடு எதற்காக நடத்தப்பட்டது? இதன் குறிக்கோள் அல்லது நோக்கங்கள் எவை? மாநாட்டில் அச்சிட்டுக் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்கள் அவை பற்றிக் குறிப்பிட்டிருந்தனர்.

அதாவது, கடந்த ஒரு நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தை மதிப்பிடுதலும் அடுத்த நூற்றாண்டுக்கான தமிழ் இலக்கிய வளர்ச்சியைத் திட்டமிடுதலும் இம் மாநாட்டின் குறிக்கோள் எனலாம். மூன்று நாட்களும் காலை 9.30 மணிமுதல் இரவு 8.00மணிவரை 45 அரங்குகளில் நூற்றுக்கு அதிகமானோர் கட்டுரையாளர்களாகவும் கருத்துரையாளர்களாகவும் கலந்து கொண்டு எதிர்காலத் தமிழ் இலக்கியம் பற்றி இல்லாவிட்டாலும் இன்று வரையுள்ள தமிழ் இலக்கியம்பற்றிக் கலந்துரையாடினர், விவாதித்தனர். அவ்வகையில் இம்மாநாடு மிகுந்த முக்கியத்துவம் உடையது எனலாம்.

ஆனால் இம்மாநாட்டின் முடிவுகள் எவை? இந்த மாநாட்டின் குறிக்கோள்கள் எந்த அளவுக்கு நிறைவேறின? இத்தனை எழுத்தாளர்கள் சேர்ந்து கடந்தகால, எதிர்காலத் தமிழ் இலக்கியச் செல்நெறிகள் பற்றி என்ன முடிவுகள் எடுத்தனர்? நமது எதிர்காலத் திட்டங்கள் எவை? அவற்றை அடைவதற்கான வழிமுறைகள் என்ன? இவை பற்றிய மாநாட்டுத் தீர்மானங்கள் எவை? ஓராண்டுக்கு மேலாகத் திட்டமிட்டு, பெருமளவு பணச்செலவுடன் நிகழ்த்தப்பட்ட இம் மாநாட்டின் இறுதியில் இத்தகைய வினாக்கள் எழுதல் இயல்பானதே. ஆயினும் மாநாட்டின் முடிவில் இவை பற்றிய கலந்துரையாடலுக்கான பொது அமர்வுக்கு நிகழ்ச்சி நிரலில் இடம் இருக்கவில்லை. எனினும் மூன்றாம் நாள் பகல் தமிழினி 2000 மாநாட்டுத் தீர்மானங்கள் என்ற தலைப்பில் ஒரு பத்திரம் கையெழுத்துக்காகச் சிலரிடம் நீட்டப்பட்டது. என்னிடமும் அது தரப்பட்டது. அதைப் படித்ததும் மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. இந்த மூன்று நாள் மாநாட்டுக்கும் இந்தத் தீர்மானங்களுக்கும் என்ன சம்பந்தம்? இரண்டையும் எவ்வாறு தொடர்புபடுத்துவது என்று எனக்குப் புரியவில்லை.

முதல் மூன்று தீர்மானங்களும் முற்றிலும் இலங்கை இந்திய அரசியல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பானவை. தமிழ் இனி 2000-இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலோ, தமிழ் இனி 2000-மனித உரிமைகள் மற்றும் மரண தண்டனை ஒழிப்பு தொடர்பான உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலோ நிறைவேற்ற இத்தீர்மானங்கள் மிகப் பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றியது. நாலாவது தீர்மானம் தமிழ் வழிக் கல்வி தொடர்பானது. இது இப்பொழுது தமிழ்நாட்டுக்கு மட்டும் உரிய பிரச்சினை தான், எனினும் தமிழ்வழிக் கல்வி தொடர்பான தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் நிறைவேற்ற வேண்டிய தீர்மானம் இது எனத் தோன்றியது. ஐந்தாவது தீர்மானம் மட்டும் இவற்றில் இருந்து வேறுபட்டது. இது தொடர்பாக மாநாட்டில் கருத்துரைகள் விவாதங்கள் ஏதும் இடம்பெறாவிடினும் மாநாட்டின் கருப்பொருளோடு தொடர்புடையது. தீர்மானங்களைப் படித்து முடித்ததும் நான் முதலில் கூறியது 'இவை பெரிதும் அரசியல் தீர்மானங்கள். இந்த மாநாட்டின் நோக்கத்துக்கும் இவற்றுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை' என்பது தான். அத்தோடு தீர்மானப் பிரதி கைமாறிச் சென்றது. அதைத் தயாரித்தவர்கள்(சரிநிகர் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்கள் என்பது என் யூகம்) இது தொடர்பாகக் கருத்துப் பரிமாறவோ கலந்துரையாடவோ தயாராக இருக்கவில்லை என்று தெரிந்தது. இது நாங்கள் எழுதித் தயாரித்த தீர்மானங்கள். விரும்பினால் கையெழுத்து வை இல்லாவிட்டால் போ. இதில் விவாதிப்பதற்கு ஒன்றும் இல்லை என்பது அவர்களின் நிலைப்பாடு போலும்.

இத் தீர்மானங்களின் உள்ளடக்கத்தில் தவறுகள் எவையும் இல்லை. சாதாரண பொதுப்புத்தியும் சமூக அரசியல் பிரக்ஞையும் உள்ள யாரும் இவற்றை நிராகரிக்கமாட்டார்கள். ஆனால் நடைபெற்ற தமிழினி மாநாட்டுக்கும் இத் தீர்மானங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதே என் நிலைப்பாடு. இத்தீர்மானத்தைத் தயாரித்தவர்களுக்கும் இத்தொடர்பின்மை தெரிந்திருந்ததனால் தானோ என்னவோ இத்தீர்மானங்கள் மாநாட்டின் எந்த ஒரு அமர்விலும் சமர்ப்பிக்கப்படவே இல்லை. மாநாட்டுப் பேராளர்களால் கலந்துரையாடப்படவில்லை. விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படவில்லை. ஆயினும் மாநாட்டுத் தீர்மானங்கள் என்ற தலைப்பில் இப்பிரதி சரிநிகர் இதழ் 201ல் பிரசுரிக்கப்பட்டது. இது மாநாட்டு மரபுகளுக்கு முரணான, தன்னிச்சையான, மிகத்தவறான நடவடிக்கை என்பதே என் கருத்து.




அது மட்டுமன்றி சரிநிகர் இதழ் 202ல் மெல்லத் தமிழினி என்ற பத்தியில் இலக்கிய மாநாடா அரசியல் மாநாடா என்ற தலைப்பில் குறிப்பு எழுதிய மாநாட்டு ஒருங்கமமைப்பாளர்களுள் ஒருவராகச் செயற்பட்ட சரிநிகர் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ஒரு நண்பர் இத்தீர்மானங்களின் பொருத்தப்பாடு பற்றிக் கேள்வி எழுப்பியமைக்காக பெயர் குறிப்பிடாது என்னைக் கிண்டல் பண்ணியிருக்கிறார். நான் எழுப்பிய கேள்வியைப் புரிந்து கொள்ளாது, அதை மிகை எளிமைப்படுத்தி, கொச்சைப்படுத்தி அதன் அரசியல் உள்ளடக்கம் காரணமாக நான் கையெழுத்து வைக்கவில்லை என்ற கருத்துப்பட எழுதியிருக்கிறார். பெயர் குறிப்பிடாது எழுதியதன் மூலம் இத்தகைய சமூக அரசியல் முக்கியத்துவமுடைய தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளாத, கையெழுத்து வைக்க மறுத்த இந்தப் பல்கலைக் கழகப் பிரகிருதி யார் என்று அறியும் விடுப்பார்வத்தை சரிநிகர் வாசகர் மத்தியில் ஏற்படுத்த முயன்றிருக்கிறார். மாற்றுக் கருத்துக் கூறுபவர்களை - அவர்கள் நண்பர்களே யானாலும்- கொச்சைப்படுத்தி, இழிவுபடுத்தி, முத்திரை குத்தி எதிரியாக நோக்கும் இந்த மனப்பாங்கு-

## தீர்மானங்களுக்கும் மாநாட்டுக்கும் எவ்வித தொடர்புமில்லை!

ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் மத்தியில் மேலோங்கியிருந்த இந்தக் குறுங்குழுவாத (sectarian ) மனப்பாங்கு- சரிநிகரையும் பீடித்திருப்பது வருத்தத்துக்குரியது.

இலக்கியம் ஒரு சமூக உற்பத்தி என்ற வகையில் சமூக அரசியல் போக்கிலிருந்து [illegible] தொடர்ந்தும் நான் வலியுறுத்தி வந்திருக்கிறேன். 'இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் இடையிலான உறவு பற்றி நிறைய எழுதியவர்' என சரிநிகர் எழுத்தாளரும் இதனை அங்கீகரித்திருக்கிறார். தமிழ் இனி 2000 மாநாடும் இந்த உறவை வலியுறுத்தும் வகையிலேயே அமைந்தது. தமிழ் இலக்கியத்துக்கும் சமூக அரசியல் இயக்கப் போக்குகளுக்கும் இடையில் இருந்த உறவு பற்றியே இம்மாநாட்டில் நாம் அதிகம் பேசினோம். மார்க்சியம், தமிழ்த் தேசியம், திராவிட இயக்கம், தலித்தியம், பெண்ணியம் போன்ற சமூக அரசியல் இயக்கங்கள் தமிழ் இலக்கியத்தை எவ்வாறு பாதித்தன? தமிழ் எழுத்தாளர்கள் இவற்றை எவ்வாறு எதிர்கொண்டனர்? இவற்றின் மூலம் தமிழ் இலக்கியம் பெற்ற வளம் என்ன? பலம் என்ன? பலவீனம் என்ன? என்பன பற்றி நிறையக் கருத்துகள் பரிமாறப்பட்டன. இந்தக் கருத்தாடல்களின் பின்னணியில் எடுக்கப்படும் மாநாட்டின் முடிவுகள் அல்லது தீர்மானங்கள் இவற்றைப் பிரதிபலிப்பனவாய், இவை தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு வழிவகுப்பனவாய் இருக்க வேண்டும் என்றே சாதாரண பொதுப் புத்தியுள்ள ஒரு பார்வையாளன் கூட எதிர்பார்ப்பான். தமிழ் இலக்கியத்தின் எதிர்காலச் செல்நெறி பற்றியும், தமிழ் எழுத்தாளர்களின் சமூகக் கடப்பாடு பற்றியும், தம் சமூகக் கடப்பாட்டை நிறைவேற்ற முயலும் எழுத்தாளர்கள் எதிர்நோக்கும் அரசியல் நெருக்கடிகள் பற்றியும், அவர்களுடைய படைப்பு மற்றும் கருத்துச் சுதந்திரம் முகங்கொடுக்கும் அபாயம் பற்றியும் நமது சமீபகால அனுபவங்களின் அடிப்படையில் சில பொதுத் தீர்மானங்களை எடுத்து- உலகளாவிய நிலையில் தமிழ் எழுத்தாளர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்குரிய ஒரு அரிய வாய்ப்பினை இந்த மாநாடு ஏற்படுத்தித் தந்தது. ஆனால் மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் சிலர் தன்னிச்சையாக வரைந்த தீர்மானங்கள் எவையும் இவற்றைக் கருத்தில்கொள்ளவில்லை. மாநாட்டின் இறுதி அமர்வு ஒன்றில் பேராளர்களின் கலந்துரையாடலுக்கு இத் தீர்மானங்களை விட்டிருந்தால் பலரும் இவை பற்றித் தம் அபிப்பிராயங்களைச் சொல்லவும், இவற்றை மாநாட்டின் நோக்கங்களுக்கு ஏற்ற முறையில் திருத்தி அமைக்கவும், கலந்து கொண்ட எழுத்தாளர்களின் ஒருமித்த குரலாக இவை வெளியிடப்படவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

தீர்மானங்களைத் தயாரித்தவர்கள் இந்த வாய்ப்பை யாருக்கும் வழங்கவில்லை. இது ஏதோ தங்கள் சொந்த விவகாரம் போல தனிப்பட்ட முறையில் சிலரை அணுகி, அவர்களின் கையொப்பம் பெற்றிருக்கிறார்கள். இப்போது தங்கள் பத்திரிகையிலும் அதைப் பிரசுரித்திருக்கிறார்கள். தீர்மானத்தின் பொருத்தப்பாடு பற்றி அடிப்படையான கேள்வி எழுப்பியவரின் முதுகில் குத்த முயன்றிருக்கிறார்கள். இது பண்பாட்டு அரசியலோ, அரசியல் பண்பாடோ அல்ல. பச்சையான குறுங்குழுவாத அரசியலின் பாற்பட்டது என்பதை நான் மீண்டும் அழுத்திக் கூற விரும்புகிறேன்.

வெளிடப்பட்ட தமிழினி மாநாட்டுத் தீர்மானங்கள் நமது சமூக அரசியல் சூழலையும் தமிழ் இலக்கியத்தையும் ஒன்றிணைக்காது, இலக்கிய மாநாட்டுத் தீர்மானங்களாக அன்றி, தனியே வெறும் அரசியல் தீர்மானங்களாக இருப்பது வெளிப்படை. இதனால் வெவ்வேறு அரசியல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பவர்கள், வெவ்வேறு அரசியல் அபிலாசைகள் உடையவர்கள் இத்தீர்மானங்கள் பற்றி அதிருப்தி தெரிவிப்பதும் எதிர்பார்க்கக் கூடியதே. மலையக எழுத்தாள நண்பர் மலையகத் தமிழர் பிரச்சினை பற்றி தீர்மானங்கள் எதுவும் கூறவில்லை என்று குறைபட்டுக் கொண்டது நியாயமானதே. நயினை ஆனந்தன் போல் (சரிநிகர் 201 பக். 19) இலங்கைப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக் கோரிக்கையைக் கேள்விக்குள்ளாக்குவதும், தமிழ் ஈழம் தான் ஒரே தீர்வு என ஏன் நீங்கள் தீர்மானம் நிறைவேற்றவில்லை எனப் பிறிதொருவர் கேட்பதும் நிகழக் கூடியது தான். வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களில் நஷ்ட ஈட்டுடன் குடியமர்த்தப்படவேண்டும் என இம்மாநாடு தீர்மானம் நிறைவேற்றவில்லையே என் ஒரு ஈழத்து முஸ்லீம் கேள்வி எழுப்பக்கூடும். உங்கள் மாநாடு இந்துத்துவாவின் எழுச்சியைக் கண்டித்து ஏன் தீர்மானம் நிறைவேற்றவில்லை? தலித்துகளின் மீதான ஒடுக்குமுறையை ஏன் கண்டிக்கவில்லை என யாரும் கேள்வி எழுப்பக் கூடும். சட்டசபையிலும் வேறு அரச நிறுவனங்களிலும் சகல தொழில்துறைகளிலும் பெண்களுக்கு ஐம்பது வீத இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என ஏன் தீர்மானம் நிறைவேற்றவில்லை என ஒரு பெண்ணிலைவாதி கேட்கக்கூடும். பூகோளமயமாக்கல் பற்றி இந்த மாநாட்டின் நிலைப்பாடு என்ன என்று பிறிதொருவர் கேட்கலாம். உங்கள் தீர்மானங்கள் எல்லாம் ஈழம், தமிழ்நாடு பற்றித் தானே இருக்கின்றன? எங்களுக்கு சமூக அரசியல் பிரச்சினைகள் எவையும் இல்லையா? அவை பற்றி நீங்கள் ஏன் கருத்துச் செலுத்தவில்லை என்று மலேசிய, சிங்கப்பூர்த் தமிழர்கள் கேட்கலாம்.

மாநாட்டுத் தீர்மானங்களை வரைந்தவர்கள் இவற்றுக்கு என்ன பதில் சொல்லக்கூடும்? தவறு தான் இவற்றையும் நாம் சேர்த்துக் கொள்கிறோம் என்பார்களா? அல்லது 'மன்னிக்கவும் மாநாடு வேறு நோக்கங்களுக்காக நடத்தப்பட்டது. இவற்றுக்கு அதில் இடம் கொடுப்பது பொருத்தமற்றது. இவற்றுக்கென்று வேறு மாநாடுகள் நடத்த வேண்டும்' என்பார்களா? அப்படியானால் உங்கள் தீர்மானங்கள் மாநாட்டு நோக்கங்களுக்கு எந்த அளவு பொருத்தமானவை என அவர்கள் திருப்பிக் கேட்கமாட்டார்களா? மேடையில் ஏறினால், அது என்ன கூட்டமாயினும் தாங்கள் நினைப்பவற்றையெல்லாம் பேசிவிட்டே இறங்குவோம் என்ற வன்முறையினர் சிலர் உள்ளனர். இத்தீர்மானங்களைத் தயாரித்தவர்களும் அவ்வகையினரே போலும் என்று இதை வாசிப்போருக்குத் தோன்றலாம்.

பிரச்சினை இது தான். இலக்கியத்தையும் அரசியலையும் எவ்வாறு இணைப்பது என்று இத்தீர்மானங்களை எழுதியவர்களுக்குத் தெரியவில்லை. அரசியல் இல்லாத இலக்கியம் இல்லை என்று வாதிட முடியும். ஆனால் இலக்கியம் இல்லாத அரசியல் இல்லை என்று வாதிட முடியாது. இவர்களது தீர்மானங்கள் இலக்கியம் இல்லாத அரசியல். அதனாலேயே இவை இவ்விலக்கிய மாநாட்டுக்குப் பொருந்தாமல் போயின. இத்தீர்மானங்களின் சாரத்தை இவர்கள் இலகுவாக இலக்கியத்துடன் இணைத்திருக்க முடியும். அதை அவர்கள் செய்யவில்லை. அவ்வாறு செய்யக்கூடிய சக எழுத்தாளர்களின் ஆலோசனைகளைப் பெறும் ஜனநாயக மனப்பாங்கும் அவர்களிடம் இருக்கவில்லை. தங்கள் தீர்மானங்களைக் கேள்வியில்லாது ஏற்றுக் கொள்வோரின் கையொப்பங்கள் மட்டுமே அவர்களுக்கு வேண்டியிருந்தது. இத்தகைய ஜனநாயகமற்ற நடவடிக்கையின் மூலம் மிக முக்கியமான ஒரு மாநாட்டின் முடிவை அதன் ஒருங்கிணைப்பாளர்களில் ஒரு பிரிவினரே களங்கப்படுத்தி விட்டார்கள் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

- எம்.ஏ.நுஃமான்

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka


# சரிநிகர்

வாரஇதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

மின்னஞ்சல்: sarini@sltnet.lk


## இப்போதைக்குச் சொல்ல இருப்பது!

பதினோராவது பாராளுமன்றத்திற்கான தேர்தலின் முடிவுகள் இதை எழுதிக் கொண்டிருக்கும் போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

வெளியிடப்படும் முடிவுகள் ஒவ்வொன்றும் பல சுவாரஸ்யமான அரசியல் ஆய்வுகட்கு இடமளிக்கும் வகையில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

யாழ் மாவட்டத்தில் ஐ.தே.க ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியது முதல் திருமலையில் எந்த ஆசனமும் கிடைக்காது போனதுவரை தமிழ் அரசியல் தலைவர்களுக்குச் செருப்படி கொடுக்கிற முடிவுகளாக அவை அமைந்து கொண்டிருக்கின்றன.

வழமையான ஜனநாயக வழிமுறைகளுக்கேற்ப, கள்ள வாக்குகள், ஆள் மாறாட்டங்கள் பெட்டி தூக்கல்கள் போன்ற இன்னோரன்ன கைங்கரியங்களின் மத்தியில் நடந்து முடிந்திருக்கும் இந்தத் தேர்தல் முடிவுகளில் என்ன சுவாரசியம் இருக்கப் போகிறது என்று நீங்கள் யோசிப்பது உண்மை தான். ஆனால் எல்லா மோசடிகளை மீறியும் கூட சுவாரசியங்கள் வெளிப்படத்தான் செய்கின்றன. இந்தத் தேர்தல் நாளன்று நடந்த சம்பவங்கள் தேர்தலின் 'ஜனநாயகச் சிறப்பை' வெளிப்படுத்துகின்றன.

தம்புள்ளையில் ஐ.தே.க ஆதரவாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். பெலியந்தைப் பகுதியிலுள்ள அக்குரஸ்மடுவ வாக்குச் சாவடிக்கு வந்த ஆயுதக் கோஷ்டி வாக்குச் சாவடிக்குள் நுழைந்து பெட்டியை அபகரித்துச் சென்றுள்ளது. அக்குறணையிலேயோவென்றால் ஒரு வாக்குச் சாவடியில் நின்ற வாக்காளர்களை அடித்து விரட்டியிருக்கிறது ஒரு கும்பல்.சிலாபத்தில் வாக்களிப்பு நிலையத்துக்கருகே ஒரு குண்டு வெடித்திருக்கிறது. மாத்தளையில் வீசப்பட்ட குண்டொன்றில் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் ஊர்காவற்துறைத் தொகுதியில் ஈ.பி.டி.பி யின் தேர்தல் முறைகேடுகள் அளவு கணக்கற்றவை என்று புளொட்டும், த.வி.கூவும் அறிவித்திருக்கின்றன:

அங்கு நடந்த மோசடிகளால், யாழ் மாவட்ட முடிவுகள் சாத்தியமற்றவையாகிவிடும் என்று கூறுகிறது த.வி.கூ.

கண்டியில் அனுருத்தரின் ஆட்களால் பலத்த மோசடிகள் நடந்ததாக தகவல்கள் வெளி வந்துகொண்டிருக்கின்றன. அரசாங்க கட்சி அமைச்சர் டி.எம். ஜயரத்னவே பகிரங்கமாக தொடர்பு சாதனங்களில் அறிவிக்குமளவுக்கு அனுருத்தரின் செயல்கள் அமைந்திருக்கின்றன. இன்னும் எத்தனையோ மோசடி தொடர்பான தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆயினும், இத்தனை மோசடிகளையும் அறிவிக்கும் அதே தொடர்பு சாதனங்களினூடாக, தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எவ்வளவு மோசமான நிலைமையில் தேர்தல் நடந்தாலும் ஒரு மாவட்டத்தில் 500 பேர் வாக்களித்திருந்தாலும் கூட தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணையாளர் 'அறிவிக்கத்தான் போகிறார் என்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ் மாவட்ட முடிவுகளின் போது இந்த நிலைமை இருந்தது யாருக்கும் தெரியாதது அல்ல.

ஆயினும் எமது தமிழ்க் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு களத்தில் குதித்தன.

இதன் மூலம் அவை வன்முறையையும், வாக்களிக்காத பெரும்பான்மை மக்களது அபிப்பிராயங்களையும் உதாசீனம் செய்து தமக்குப் பதவியைப் பெற்றுக் கொள்வதே ஒரே குறிக்கோள் என்று செயற்பட்டிருப்பது வெளிப்படை.

ஆக, தமிழ் மக்களது தீர்ப்புக்கள் இவைதான் என்று இந்தக் கட்சிகள் அறிவிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் தயாராகிவிட்டன. அதாவது யாழ்ப்பாணத்தில் ஐ.தே.கவுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கிறது. திருமலையில் தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை. மட்டு மாவட்டத்தில் எமது நிலை இதுதான் என்று அவை ஒப்புக் கொள்கின்றன.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கும் இந்த நிலையில் நமது அக்கறைக்குரிய செய்தி இதுதான்.

மக்களில் பெரும்பான்மையோர் - குறிப்பாக வடக்குக் கிழக்கு தமிழ் மக்கள் இந்த பாராளுமன்ற மோசடியில் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள்.

மக்களே நம்பிக்கை இழந்து விட்ட இந்தத் தேர்தலில் தலைவர்கட்கு மட்டும் இத்துணை ஆசை ஏன்..?

இதற்கான விளக்கத்தை தேடினால் நாம் முதல் சொன்ன சுவாரஸ்யமான பல உண்மைகளை அது கொண்டு வந்து நம்முன் நிறுத்தும்!

இப்போதைக்கு இது போதும்!

### வவுனியா: மாணவன் மகாதேவனின் மரணம் தற்கொலை அல்ல

# திட்டமிட்ட கொலையே!

ஓகஸ்ட் 28 அன்று தோணிக்கல் அம்மன் கோவிலில் கழுத்தில் சுருக்கிட்டு இறந்த நிலையில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட சண்முகநாதன் மகாதேவன் என்ற பண்டாரிகுளம் விபுலானந்த மகா-வித்தியாலய மாணவனின் மரணம் திட்டமிட்ட கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக புலன் விசாரணைகளை நடத்துவதற்கு விசேட பொலிசார் அடங்கிய குழு ஒன்றை நியமிக்க வேண்டும் அல்லது கொழும்பு பொலிஸ் சிஐடி-யினருக்குப் பாரப்படுத்த வேண்டும் என வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் வன்னிப் பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபருக்கு ஆணையிட்டுள்ளார்.

இந்த மரணம் தொடர்பான திடீர் மரண விசாரணை அதிகாரி-யின் விசாரணையின் பின்னர் சந்தேகம் தெரிவிக்கப்பட்டதை-அடுத்து, வவுனியா மாவட்ட நீதிவான் நேரடியாக மாவட்ட நீதிமன்றத்தில் இதற்கான விசாரணை-களை நடத்தினார்.

இந்த விசாரணையின் போது, சாட்சிகளாக இறந்தவரின் தந்தையாராகிய செந்தாமரை சண்-முகநாதன், அவருடைய சகோதரன் சண்முகநாதன் செல்லச்சாமி, சடலம் காணப்பட்ட தோணிக்கல் அம்மன் கோவில் ஐயர் வைரவநாத குருக்கள், சிறுகுற்றப்பிரிவு பொலிஸ் சார்ஜன்ட் சிற்றம்பலம் சிவானந்தன், சார்ஜன்ட் குகதாசன் மற்றும் சாட்சிகளான முத்தையா வைத்தியநாதன், பால-கிருஸ்ணன் யோகேஸ்வரன் ஆகியோர் நீதிவானின் உத்தரவின்-படி நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியளித்தார்கள்.

சம்பவ இடமான தோணிக்-கல் அம்மன் கோவிலுக்குச் சென்று பார்த்ததுடன் சம்பவம் குறித்து விசாரணை செய்த, வவுனியா கிளர்ச்சித்தடுப்பு பொலிஸ் பிரிவைச்-சேர்ந்தவர்கள் யார் என்பதை நீதிமன்றத்திற்கு அறிவித்து சம்பந்-தப்பட்டவர்களை நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க ஆஜர் செய்யுமாறு வவுனியா கிளர்ச்சித் தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு நீதிபதி உத்தரவிட்டிருந்ததை அடுத்து, அந்தப் பிரிவைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் எஸ்.ஐ. விஜய-பண்டார சுனில் தாபுறு, பொலிஸ் கான்ஸ்டபிள் நளின் ஜீவன் ஆகியோர் நீதிமன்றத்தில் சாட்சிய-மளித்தனர்.

விசாரணைகளின் முடிவில் தீர்ப்பு வழங்கிய நீதிவான் பின்வரும் விடயங்களைத் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

இரவு 11 மணிக்கு தொலைக்காட்சி பார்த்த பின் கட்டைக்காற்சட்டை சேட்டுடன் நித்திரைக்குச் சென்றவர், நீளக்காற்-சட்டை சேர்ட்டுடன் எப்படி இறந்து கிடக்க நேர்ந்தது?

இரவில் அல்லது அதிகாலையில் வீட்டைவிட்டு வெளியில் செல்லும்-போது, எவருக்கும் சொல்லாமல் செல்ல முடியுமா?

இரவு நித்திரைக்குச் சென்ற, இறந்தவரின் வீட்டார் காலை 6 மணியளவில் கொழும்பில் இருந்து மருகமன் குமார் வந்து எழுப்பும் வரையில் நித்திரை கொண்டதும், வழமையில் இரவில் நித்திரை கொள்ளாமல் வாய்விட்டு கதைத்துக் கொண்டிருக்கின்ற வீட்டில் உள்ள வயோதிப மாதாகிய ஆச்சியும் சம்பவ இரவன்று வழமைக்கு மாறாக நித்திரை கொண்டதும் சந்தேகத்தை எழுப்பியுள்ளது. அத்துடன் பாது-காப்பான கதவுகளற்ற வீடு என்பத-னால், இரசாயன மருந்து பயன-படுத்தியதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

இறந்தவரின் வீட்டுக் கிணற்-றுக் கயிறே மரணத்தில் பயன்படுத்-தப்பட்டுள்ளது. இறந்தவர் தற்கொலை செய்து கொண்டிருந்தால், வீட்டில் இருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அம்மன் கோவிலுக்குச் சென்று தற்கொலை செய்து கொள்ள வேண்டிய தேவை என்ன? வீட்டில் அல்லது வேறிடத்-தில் அந்தத் தற்கொலையைச் செய்திருக்கலாம்.

தூக்குப் போடுவதற்கான கயிற்றின் சுருக்கு கயிற்றின் ஒரு முனையில் போடுவதற்குப் பதிலாக கயிற்றை இரண்டாக மடித்து நடுவில் சுருக்குப் போடப்பட்டுள்ளது. தற்கொலைக்காக ஒருவர் சுருக்கு போடுவாராயின் கயிற்றின் ஒரு முனையில் தான் போடுவார். அவ்வாறில்லாமல், கயிற்றின் நடுவில் சுருக்கு போடப்பட்டிருந்த-மையினால், தூக்கில் தொங்குவதற்கு முன்னர் கழுத்தில் கயிற்றின் நடுப்பகுதிச்சுருக்கு மாட்டப்பட்டு கயிற்றின் இரு முனைகளையும் இழுத்து நெரித்துக் கொல்லப்-பட்டதன் பின்னர் சடலத்தைத் தொங்கவிட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சுருக்கிட்டுத் தொங்கிய தற்கொலைச் சம்பவங்களில் கயிற்றின் சுருக்கு முடிச்சு தலையின் பின்பக்கம் பிடரியில் இருக்க வேண்டும். ஆனால் இங்கு கயிற்றின் சுருக்கு இடதுகாது பக்கமாக இருந்தது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒருவர் தற்கொலை செய்து கொண்டால் உயிரிழப்பதற்கு முன்னர் சிறுநீர் கழிவது வழக்கம் சுருக்கிட்டவரின் கழுத்தில் சுருக்கு நெருக்கி உயிர் பிரியும்வேளை அவஸ்தை படும்போது அவரது கால்கள் தொங்கும் இடத்தில் கால்கள் உதைந்து கஸ்டப்பட்டதற்கான அடையாளங்கள் இருக்க வேண்டும். அம்மன் கோவில் குருக்கள் அளித்துள்ள சாட்சியத்தின் படியும், நீதிபதி ஸ்தலத்திற்குச் சென்று அவதானித்து பதிவு செய்துள்ள குறிப்பின்படியும், அங்கு அ[illegible]றான அடையாளங்கள் எதுவும் இருக்கவில்லை. தூக்கில் தொங்கிய வேளையில் உயிர் பிரிந்திருந்தால், கால்கள் உதைத்து, கோவிலில் பக்தர்கள் வரிசையாக நிற்பதற்காக அமைக்கப்பட்டுள்ள பலமில்லாத கம்பிகள் விழுந்திருக்க வேண்டும். அதுவும் அங்கு நடைபெற்றதற்கான அடையாளங்கள் இருக்கவில்லை. அத்துடன் கால்கள் தொங்கிய உயர மட்டத்தில் உள்ள நந்தி உருவத்தின் மீது கால்கள் முட்டியதற்குரிய அடையாளம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதுவும் இல்லை. இதனால், இறந்தவர் அங்கு தூக்கில் தொங்கிய வேளையில் உயிரிழந்-தாரா அல்லது அவரைக் கொன்றபின் தொங்க விடப்பட்டாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இறந்தவரின் சைக்கிள் கோவிலடியில் காணப்பட்டது. அந்த சைக்கிளுக்கு அருகில் அவருடை வீட்டில் பிடுங்கி வைத்திருந்த கத்தரிக்காயில் 3 கத்தரிக்காய்கள் எவ்வாறு வந்தது என்பது தெரிய-வில்லை. மேலும் சைக்கிளுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த

–3


* சினிமாவில் வன்முறைக் காட்சிகள்

வன்முறை உளவியலும் விளைவுகளும்

* தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் பற்றி

சிங்கள ஓவியரான எஸ்.எச்.சரத்தின் பார்வையில் ...

பாருங்கள் ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல். தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியை



செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு

ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு
இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது.


ஆசிரியர்: பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர்: எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 11.10.2000